கல்கி



KALKI 28-4-1957 30 நயா பைசா

கல்கி பொருளடக்கம்

"கல்கி"யில் வெளியாகும் கதைகளில் உள்ள பெயர்கள் எல்லாம் கற்பனைப் பெயர்கள்; சம்பவங்களும் கற்பனையே.

இல்லாள் விருப்பம்
இல்லத்தை
கவர்ச்சிகரமாய் அலங்கரித்தல்



திரைத்துணிகள், அலங்கரணத் துணிகள், மேஜை விரிப்புகள், டின்னர் – லஞ்சு செட்டுகள், படுக்கை விரிப்புகள், ஜமக்காளங்கள், தர்ரிகள் போன்ற கண்கவரும் அலங்கரணச் சாதனங்கள் நவீன இந்திய மோஸ்தர்களில் கைத்தறித் துணிகளில் கிடைக்கின்றன. பாரதத்தின் கைதேர்ந்த நெசவாளர்களால் செய்யப்பட்ட இவை உங்களுக்குப் பூரண திருப்தியை அளிக்கின்றன.

கைத்தறித் துணிகள்

அலங்கரிப்பதற்கு மிகச் சிறந்த துணிகள்.

அகில இந்திய கைத்தறி போர்டு
ஷாஹீபாக் ஹவுஸ், விட்டெட் ரோடு, பல்லார்டு எஸ்டேட், பம்பாய்.

DA 57/4



மலர் 16 இதழ் 39

தமிழ்த்திருநாடு தன்னைப் – பெற்ற
தாயென்று கும்பிடடி பாப்பா – *பாரதியார்*

ஹேவிளம்பி சித்திரை 16 உ

சென்ற வாரத்துச் சிறந்த செய்தி

"உலகிலுள்ள மனித வர்க்கத்துக்கே பேரபாயத்தை உண்டுபண்ணக்கூடிய அணு ஆயுதங்களை வெடிக்க வைத்து வாயு மண்டலத்தை விஷப்படுத்துவதற்குச் சர்வ தேசச் சட்டப்படியாவது தார்மிக நெறிப்படியாவது எந்த நாட்டுக்காவது உரிமையுண்டா என்று பரிசீலனை செய்ய வேண்டும்" என்று நேருஜி கேட்டுக் கொண்டார்.

யாரை ?

ஜப்பான், பர்மா, இந்தோனீசியா, இலங்கை, இராக், சிரியா முதலிய நாடுகளைச் சேர்ந்த சட்ட நிபுணர்களின் மகாநாடு சென்ற வாரம் புது தில்லியில் நடைபெற்றது. அந்த மகாநாட்டைத் துவக்கி வைத்த போதுதான், பாரதப் பிரதமர் அந்த நிபுணர்களிடம் மேற்கண்டவிதம் கேட்டுக் கொண்டார்.

"இதுதான் சென்ற வாரத்திய செய்திகளுக்குள் எல்லாம் வைத்து மிகச் சிறந்த செய்தி" என்று ராஜாஜி கூறுகிறார்.

* * * *

இரண்டு ஆண்டுகளுக்கு முன் ராஜாஜி அணுகுண்டுகளை யெல்லாம் ஆழ் கடலில் ஆழ்த்தி விட்டு உலகுக்குத் தார்மீக நெறியைக் காட்டுமாறு அமெரிக்காவைக் கேட்டுக் கொண்டார். வாஷிங்டன், லிங்கன் போன்ற மகத்தான சரித்திர புருஷர்களைத் தோற்றுவித்த அமெரிக்கா இந்தத் தார்மீக நெறியைக் கடைப்பிடிக்க ஆத்மசக்தியுண்டு என்று நம்பி ராஜாஜி கோரினார். ஆனால் ராஜாஜியின் கருத்து எடுபடவில்லை.

அதற்குப் பதிலாக "ருஷ்யா அணுகுண்டை வைத்துக் கொண்டிருக்கிறதே! அது அணுகுண்டு உற்பத்தியை நிறுத்தும் என்பதற்கு என்ன உறுதி?" என்றெல்லாம் வாதங்கள் கிளம்பின.

அமெரிக்காதான் முதலில் அணுகுண்டை ஆசியாவில் நிரபராதியான மக்களின் தலையில் போட்டு மகத்தான பாவம் செய்திருக்கிறது. அந்தப் பாவத்தைக் கழுவவாகிலும் இந்தத் தார்மிக நெறியைக் கடைப் பிடிக்க வேண்டும். அணு ஆயுத சோதனைகளை நிறுத்த வேண்டும். உற்பத்தியை நிறுத்த வேண்டும் என்று கூறப்பட்டது.

அப்போதும் அமெரிக்க கேட்கவில்லை.

இதற்கிடையில் ருஷ்யத் தலைவர்களான குருஷேவும், புல்கானினும் பாரத நாட்டுக்கு விஜயம் செய்தார்கள். சென்னையில் நமது தலைவர் ராஜாஜியுடன் நீண்ட நேரம் அணு ஆயுதங்களைப் பற்றிச் சர்ச்சை செய்தார்கள். அதன் பயனாக அமெரிக்கா உடன்பட்டால் அந்தக் கணமே அணு ஆயுத சோதனைகளையும், அணு ஆயுத உற்பத்தியையும் பரிபூரணமாக நிறுத்தி விடத் தயார் என்று கூறினார்கள். ஒரு முறையல்ல; பல முறை கூறியிருக்கிறார்கள். ஏன், நேற்றைக்குக் கூடக் கூறினார்கள்!

ஆனால் அமெரிக்காவோ அதற்கு உடன்படவில்லை. ருஷ்யாவை எப்படி நம்புவது; முடியாது என்று அணுகுண்டுகளையும், ஹைட்ரஜன் குண்டுகளையும் வெடித்துக் காற்றையும் நீரையும் விஷ மயமாக்கி வருகிறது. இதுகாறும் அமெரிக்கா—ருஷ்யா ஆகிய இரண்டு வல்லரசுகள்தான் இந்தப் பயங்கர நாசகாரிகளை உற்பத்தி செய்து வந்தன. இப்பொழுது பிரிட்டனும் இந்தப் போட்டாப் போட்டியில் கலந்து கொண்டு ஹைட்ரஜன் குண்டுகளை உற்பத்தி செய்யத் தொடங்கி விட்டது! விரைவில் பசிபிக் மகா சமுத்திரத்தில் சோதனை நடத்தப் போகிறது.

ஏற்கனவே அமெரிக்காவும் பிரிட்டனும் வெடித்த குண்டுகளினால் உலகிலுள்ள காற்றும் நீரும் வேண்டிய அளவு விஷ மயமாகி விட்டது என்று பெரிய பெரிய

விஞ்ஞானிகள் பல முறை அறிக்கைகள் வெளியிட்டு விட்டார்கள். இந்த அணு ஆராய்ச்சிக் கூடங்களில் வேலை செய்யும் ஜெர்மன் நாட்டு விஞ்ஞானிகள், "இனி நாங்கள் இத் துறையில் வேலை செய்ய முடியாது. மக்கள் சமுதாயத்துக்கு இதுகாறும் விளைத்த தீங்கு போதும்! இனியும் இதற்கு உடந்தையாக இருக்கமாட்டோம்!" என்று மனம் நொந்து அறிக்கை வெளியிட்டிருக்கிறார்கள்! அவர்களில் நால்வர் நோபல் பரிசு பெற்ற நிபுணர்கள்.

இப்படி உலகிலுள்ள பெரியோர்கள் எல்லாரும், நல்லவர்கள் எல்லாரும், முதல்தர விஞ்ஞானிகள் எல்லாரும் எச்சரிக்கை செய்தும் வல்லரசுகள் கேட்பதாக இல்லை. அது மட்டுமல்ல. ஐரோப்பாவில் வட அட்லாண்டிக் உடன்படிக்கையில் கையெழுத்திட்ட அத்தனை நாடுகளிலும் அணு ஆயுதங்களை ராணுவ தளங்களில் நிரப்பி வருகிறார்கள். அதாவது ருஷ்யாவைச் சுற்றியுள்ள நாடுகளிலெல்லாம் வைத்திருக்கிறார்கள்.

அமெரிக்கா, தனது நேச நாடுகளில் இப்படிச் செய்தால் ருஷ்யாவும் தனது நேச நாடுகளில் அணுகுண்டு தளவாடங்களை நிரப்புகிறது. அதன் பயனாக உலக மக்கள் யுத்தமின்றிப் பெரும் யுத்தபீதியில் அல்லும் பகலும் அவதியுற்று வருகிறார்கள். சிறு சண்டை மூண்டாலும் அணுகுண்டு யுத்தமாகாமல் இருக்கவேண்டுமே என்று கவலைப்படுகிறார்கள். கொரியா போர், சூயஸ் போர், ஹங்கேரி கிளர்ச்சி முதலியவை ஏற்பட்ட போதெல்லாம் உலகத்தின் பிரார்த்தனை யெல்லாம் அணு-ஜலஜ குண்டு யுத்தமாக மாறாமல் இருக்க வேண்டுமே என்பதுதான்!


ஆனால் அணுகுண்டுகள் தோன்றியதாலேயே, அவை விளைவிக்கக்கூடிய விநாசம் கற்பனைக்கு எட்டாததாக இருப்பதாலேயே, உலகப் போர் மூளுவது இனி சாத்தியமில்லை. அப்படி மூண்டாலும் இந்தக் குண்டுகள் உபயோகிக்கப்பட மாட்டாது என்கிறார்கள்.

மனிதப் பண்பு சண்டை போடாமலிராது; கோபம் உண்டாகும் போது வல்லரசுகள் விவேகமாக நடந்து கொள்ளும் என்று எப்படி நம்புவது? மேலும் மேற்கத்திய வல்லரசுகள் தங்கள் படைபலத்தை, ராணுவ வீரர்களின் தொகையைக் கணிசமாகக் குறைத்து வருகின்றன. இதிலிருந்தே அவை பழைய போர் முறையில் நம்பிக்கை இழந்து, அடுத்து வரும் போரில் இந்தப் பயங்கர நாசகாரிகளை உபயோகிக்கத் தீர்மானித்துள்ளன என்று ஏற்படுகிறதல்லவா? இப்படி ருஷ்யத் தளபதி ஜுகாவ் கேட்கிறார்!

ஆகவே, மேற்கத்திய வல்லரசுகளின் மௌடீகமான போக்கினால் இன்று உலகில் இரண்டு நிலைகள் ஏற்பட்டிருக்கின்றன.

1. உலகில் சமாதானம் ஏற்பட்டுப் பன்னிரண்டு வருஷங்களாகியும் இன்னும் உலக மக்கள் யுத்தபீதி நிறைந்த வாழ்க்கையே வாழவேண்டியிருக்கிறது!

நிகழ்ச்சிச் சித்திரம்



2. யுத்த மில்லாமலேயே வல்லரசுகள் சோதனை குண்டுகள் வெடிப்பதனால், உண்மையான அணுயுத்தம் விளைவிக்கக் கூடிய தீங்கை விடப் பன்மடங்கு தீங்கு விளைவித்து வருகின்றன. அதாவது சமுத்திரங்களின் நீரையும் மழை நீரையும் காற்றையும் விஷமயமாக்கி வருவதைத்தான் குறிப்பிடுகிறோம்.

இந்த இரண்டு நிலையையும் மாற்றுவதற்கு ஒரே ஒரு மார்க்கம்தான் உண்டு. அணு ஆயுத உற்பத்தியோ சோதனைகளோ செய்யக் கூடாது என்று வல்லரசுகளைக் கட்டுப்படுத்துவதுதான் அந்த வழி!

இப்படிக் கட்டுப்படுத்தக்கூடிய பொறுப்பை நடுநிலைமை வகிக்கும் நாடுகள்தான் ஏற்க வேண்டும். உலகிலேயே நடுநிலைமையில் நின்று, தார்மிக வெற்றி பெற்றுள்ள பாரதம் தான் இப்பணியில் தலைமை வகித்து சர்வதேசச் சட்ட மன்றத்தில் வல்லரசுகள் மீது வழக்குத் தொடர வேண்டும். இதைத்தான் ஓராண்டுக்குமுன் ராஜாஜி தெரிவித்தார்! அதையே சென்ற வாரம் நேருஜி ஒப்புக்கொண்டு ஆசிய நாட்டு சட்ட நிபுணர்கள் முன்னிலையில் வெளியிட்டார். உலகத்துக்கு இன்று ஏற்பட்டுள்ள பேரபாயத்தை உணர்ந்து கூறியதால் ராஜாஜி இது மகத்தான செய்தி என்று பெரும் பரபரப்பும் ஆர்வமும் காட்டுகிறார்.

நேருஜி வெளியிட்ட கருத்தை ஒட்டி ராஜாஜி எழுதியுள்ள கட்டுரையில் ஒரு விஷயத்தை மிக வன்மையாகவும் தெளிவாகவும் கூறியிருக்கிறார்.


''அணு ஆயுதங்கள் விளைவிக்கும் நச்சு நிச்சயமானது. கடுமையானது. கம்யூனிஸ ஆபத்து அதைப்போல அவ்வளவு நிச்சயமானதுமல்ல; கடுமையானதுமல்ல. அணு நச்சு அபாயம் இப்பொழுது நம்மிடையே பிரத்தியட்சமாயுள்ளது. எனவே உயிருக்கும் நாகரிகத்துக்கும் இன்று நேர்ந்துள்ள அபாயத்தைத் தடுக்க நடுநிலைமை நாடுகள் ஒன்றுபட வேண்டும்!''

* * *

பிரிட்டன் பஸிபிக் மகா சமுத்திரத்தில் கிறிஸ்மஸ் தீவுகளில் சோதனை நடத்தப் போகிறது. இதைக் கண்டு ஜப்பானிய மக்கள் நடுங்குகின்றனர். ஏனெனில் நிச்சயமாகவும் உடனடியாகவும் பாதிக்கப்படுபவர்கள் அவர்கள்தான். அதனால் ஜப்பானில் பலகிளர்ச்சிகள் நடைபெற்று வருகின்றன. ஜப்பானியப் பிரதமர் பிரிட்டனுக்கும் அமெரிக்காவுக்கும், இச் சோதனையை நிறுத்தும்படி வேண்டித் தூதர்களை அனுப்பினார். அவர்கள் சொல் அம்பலம் ஏறவில்லை.

இந்நிலையில் ''சர்வதேச நீதி மன்றத்தில் நீங்கள் முறையிடக் கூடாதா?'' என்று யாரோ ஜப்பானியப்பிரதமரிடம் கேட்டிருக்கிறார்கள். அதற்கு ஜப்பானியப் பிரதமர், ''நான் மட்டும் முறையிட்டுப் பயனில்லை. எதிர்க் கட்சிக்காரரும் நீதிமன்றத்துக்கு வரவேண்டும். இருவரு

– விஜி



மாகப் போய்த்தான் வழக்குத் தொடர முடியும்! சர்வதேசச் சட்டம் அப்படியிருக்கிறது!'' என்றார்.

எப்படியிருக்கிறது, கதை! உலகில் வாதி ஒரு சட்ட மன்றத்தில் வழக்குப் போட்டால், சட்டமன்றம் பிரதிவாதியை வரவழைத்து இரண்டு கட்சியைக் கேட்டு நீதி வழங்கும். இது முறை. ஆனால் சர்வதேச சட்ட மன்றத்தில் வாதியும் பிரதிவாதியும் சட்ட மன்றத்துக்கு ஒன்றாகப் போனால்தான் வழக்கு கேட்கப்படுமாம்! இது நடக்கிற காரியமா? இதைவிடக் கேவலமான நிலை வேறு என்ன இருக்கிறது. ஆனால் வல்லரசுகள் வாய்திறந்து ''நீதி மன்றத்துக்கும் போக நாம் ஒப்புக் கொள்ள மாட்டோம். நீதி மன்றத்தில் எங்களுடைய அநீதி அம்பலமாகும்'' என்று வல்லரசுகள் ஒப்புக்கொண்டாலும் அதுவே போதும்.

ஆசியாவின் பல பகுதிகளைச் சேர்ந்த சட்ட நிபுணர்கள் இந்தச் சமயத்தில் தில்லியில் கூடியிருக்கிறார்கள்! ஆசியாவில் உள்ள நாடுகள் எல்லாம் ஒருமுகமாக இந்த அணு ஆயுதங்களின் சோதனைகளையும் உற்பத்தியையும் தடுக்க வழிகோலுவார்கள் என்று நினைக்கிறோம். இம்மகத்தான பணியில் நமது பாரதப் பிரதமர் முன்னணியில் நின்று பாரத நாட்டுக்கு அழியாப் புகழை, உலகை உய்வித்த தேசம் என்ற கீர்த்தியை சூட்டித் தருவார் என்று நினைக்கிறோம்.

பி. ஸி. ஜியும் அமெரிக்க வைத்தியரும்

பாரத நாட்டில் பழைய மந்திரி சபைகள் மாறிப் புது மந்திரி சபைகள் தில்லியிலும் மற்ற ராஜ்யங்களிலும் ஏற்பட்டிருக்கின்றன. இந்த மாற்றத்தில் புது தில்லி மந்திரி சபையிலும் சென்னை ராஜ்ய மந்திரி சபையிலும் பழைய சுகாதார மந்திரிகள் பதவிக்கு வரவில்லை என்பது மக்களுக்குத் திருப்தி யளிக்கக் கூடிய விஷயமாகும். புதிய சுகாதார மந்திரிகள் பி. ஸி. ஜி விஷயத்தில் பழைய மந்திரிகளைப் போலிராமல் விவேகத்தோடு நடந்து கொள்வார்கள் என்று ஆசைப்படுகிறோம்.

பி. ஸி. ஜி சம்பந்தமாக அமெரிக்காவில் ஸான்பிரான்ஸிஸ்கோவிலுள்ள சர்வகலா சாலையில் க்ஷய வைத்திய நிபுணராகவுள்ள டாக்டர் ஜெய்மூர் எம் வார்பர் என்ற பிரபல வைத்தியர் சமீபத்தில் ராஜாஜிக்கு எழுதியுள்ள கடிதத்தைப் பாருங்கள்:

''சமீபத்தில் 'பி. ஸி. ஜி ஏன் கூடாது?' என்ற தங்கள் சிறு புத்தகத்தைப் படிக்கும் பாக்கியம் பெற்றேன். இவ்வளவு அற்புதமாக எழுதி இந்த நூலைத் தயாரித்ததற்குத் தங்களை மனமாரப் பாராட்டுகிறேன்.

நானும் சென்ற பல ஆண்டுகளாகத் தாங்கள் கூறும் பல காரணங்களுக்காகவும், என்னுடைய விஞ்ஞான ஆராய்ச்சியில் கண்ட பல காரணங்களுக்காகவும் பி. ஸி. ஜி யை எதிர்த்து வந்திருக்கிறேன்.

தாங்கள் இந்தப் பிரச்னையில் செலுத்தியிருக்கும் தீவிர ஆராய்ச்சியையும் சிந்தனையையும் பார்த்து நான் வியந்தே போனேன். நீங்கள் இந்தப் பிரச்னையை ஆராயும் முறை நான் எதிர்பார்த்திராத பல விதங்களில் மிகப் புதுமையாக உண்மையை விளக்குகிறது. அதனால் என் சிந்தனையைக் கிளறக் கூடியதாக இருக்கிறது!

தங்கள் புஸ்தகத்தில் கூறியுள்ள விஷயங்களையும், மேற்கோள்களாகக் காட்டியுள்ள விஷயங்களையும் என் சர்வகலாசாலை மாணவர்களுக்கும் ஆராய்ச்சிக்கு வரும் மாணவர்களுக்கும் பாடம் சொல்லிக் கொடுக்கும்போதும் உபயோகித்துக் கொள்ளப் போகிறேன்.

ஸான்பிரான்ஸிஸ்கோ ஆஸ்பத்திரியைச் சேர்ந்தாற்போலுள்ள, காலிபோர்னியா சர்வகலாசாலையின் வைத்தியக் கல்லூரியில் டியூபர்குலோஸிஸ் ஆசிரியராகப் பணியாற்றி வருகிறேன். அதைத் தவிர இச் சர்வகலாசாலை வைத்திய ஆராய்ச்சிச் சாலையின் டைரக்டராகவும் இருந்து வருகிறேன். இப்படிப் பல பதவிகளிலிருந்து வேலை செய்யும்போதும், வைத்திய சம்பந்தமான அடிப்படை உண்மைகளை மக்களுக்குப் போதிக்க வேண்டும் என்பதே என் கருத்தாக இருந்து வந்துள்ளது. ஆனால் இது எளிதாகவா இருக்கிறது? வைத்தியத் துறையிலுள்ள ஆராய்ச்சியாளர்கள் நல்ல வைத்தியர்கள். இவர்கள் சிற்சில சமயம் சில விஷயங்களில் நல்லெண்ணத்தோடு காட்டும் உற்சாகமே வைத்திய சாஸ்திரத்தின் அடிப்படை உண்மைகளுக்குத் தீங்காக வந்து சேருகிறது!

தங்கள் நாட்டுக்கு வரும் வாய்ப்பு எனக்கு இதுவரை கிட்டவில்லை. ஆனால் தங்கள் நாட்டைச் சேர்ந்த பல மாணவர்கள் என்னிடம் படித்துள்ளனர். அடுத்த 1958-ம் ஆண்டு செப்டம்பர் மாதம் டோக்கியோவில் நடக்கவிருக்கும் மார்பு சம்பந்தமான வைத்திய நிபுணர்களின் அகில உலக மகாநாட்டுக்குப் போவேன். அந்த மகாநாட்டுக்குப் போகும்போதோ அல்லது திரும்பி வரும் போதோ தங்கள் தேசத்துக்கும் வருவதாக இருக்கிறேன். அமெரிக்க வைத்தியக் குழுவின் தலைவராக நான் தேர்ந்தெடுக்கப் பட்டிருக்கிறேன். அந்த ஹோதாவில் இந்த மகாநாடு இந்தியாவில்தான் நடைபெற வேண்டும் என்று வற்புறுத்தினேன். இதற்கு முக்கியமான காரணம் பி. ஸி. ஜி சம்பந்தமாகப் பல நிபுணர்களின் ஆராய்ச்சியுரைகளை உங்கள் நாட்டில்தான் நடத்த வேண்டும் என்று விரும்பினேன். ஏனெனில் உங்கள் தேசம் போன்ற நாடுகளில்தானே பல சங்கங்கள் பி. ஸி. ஜி பிரசாரம் செய்யத் தொடங்கியுள்ளன. நான் என் சொந்த முறையில் என்ன நினைத்தேன் என்றால் என் நாட்டைச் சேர்ந்த வைத்தியர்கள் பலர் பி. ஸி. ஜி உபயோகிப்பது கூடாது என்ற கருத்துடையவர்கள் என்பது தங்கள் நாட்டு மக்களுக்கும் உலக மக்களுக்கும் அறிவிக்கப்பட வேண்டும் என்று விரும்பினேன்.

தாங்கள் இத்துறையில் புரிந்துள்ள அற்புதமான பணிக்கு மீண்டும் பாராட்டுகிறேன். தங்களை நேரில் சந்தித்து இவ்விஷயம் சம்பந்தமாக அளவளாவும் சந்தர்ப்பத்தை ஆவலுடன் எதிர்பார்க்கிறேன்!''

ஆகாச வெடி

"ருஷ்ய ராணுவ அதிகாரிகள் உடல் பருத்துக்கொண்டு போகிறார்கள். உடல் இளைக்க, அவர்கள் தேகாப்பியாசம் செய்ய வேண்டும்." —ருஷ்ய ராணுவ மந்திரி

தேகாப்பியாசத்தால் அவர்களுடைய உடல் இன்னும் பருமனானால் என்ன செய்வார் மந்திரி?

★

"ஜனாதிபதி தேர்தலில் இதற்குமுன், போட்டியிட்டு 2 வோட்டுகள் பெற்ற, சௌத்ரி ஹரிராம், மீண்டும் இப்போது ஜனாதிபதி பதவிக்குப் போட்டியிடுகிறார்." —செய்தி

சென்ற தடவை தமக்கு வோட்டளித்த இரண்டு பேரும் இப்போது என்ன செய்கிறார்கள் என்பதைப் பார்க்கத்தான் மறுபடியும் போட்டியிடுகிறார் போலும்!

★

"கோவில் மறியல், ஹோட்டல் பெயர்ப் பலகை அழிப்பு இரு போராட்டங்களையும் துவக்க, நான் பார்த்துக் கூறும்படி தி. க. கமிட்டி ஈ. வெ. ரா.விடம் பொறுப்பை ஒப்படைத்திருக்கிறது." —செய்திக் குறிப்பு

நான், இழுமை பார்த்துச் செயல்படுவதில் தி. க. வுக்கு ஏற்பட்டிருக்கும் இந்த நம்பிக்கை அதன் தலைவருக்கும் இல்லாமலா போய்விடப் போகிறது?

"நாகபுரி ஆரஞ்சுப் பழங்களின் விசேஷ தர உயர்வைப் பாராட்டி, அமெரிக்கப் பழ ஆராய்ச்சி நிபுணர் ஒரு வைபவத்தில் சிலாகித்துள்ளார்." —செய்தி

ஆரஞ்சுப் பழ ஆராய்ச்சியைப் பொறுத்த மட்டில், இவர் பழம் தின்று கொட்டை போட்டவர் என்பது இப்போது நிச்சயமாகத் தெரிகிறதல்லவா?

★

"மகாராஷ்டிரத்தின் பிரபல பிரமுகர் டாக்டர் கார்வேக்கு நூறாவது வயது ஆரம்பமாவதை யொட்டி அவருக்கு ஆசி கூறி எண்ணற்ற வாழ்த்துக்கள் வந்து குவிகின்றன." —செய்தி

நூறு வயதுடையவொருவரை வாழ்த்துக் கூறி ஆசீர்வதிக்கும்படி, வயதான பெரியவர்கள் இப்படி எண்ணற்ற பேர்கள் இருப்பதுபற்றி சந்தோஷப்பட வேண்டியதுதானே?

★

"சரீர வலுவுள்ள 'பிச்சைக்காரர்களுக்குப் பிச்சை போடாதீர்கள். இவர்களுக்கு வேலை கொடுங்கள்!" —மந்திய மந்திரி

கொடுப்பதற்கு வேலை இல்லாததினாலேயே பிச்சை போட்டு அனுப்பிவிட நேர்கிறதென்பது கனம் மந்திரி அவர்களுக்குத் தெரியாது போலும்!

ஈ. வே. ராவின் அபாண்டம்!

கோடை காலம் வந்துவிட்டது என்பதை ராமசாமிப் பெரியார் சந்தேகமற நிரூபித்து விட்டார்.

"இந்தியாவின் கவர்னர் ஜெனரல் பதவியிலிருந்து விலகியதும் இந்தியாவின் ராஷ்டிரபதியாகத் தேர்ந்தெடுக்கப் படாததற்கு ராஜாஜி தன்னிடம் குறைப்பட்டுக் கொண்டதாயும் ராமசாமிப் பெரியார் ஒரு தகவலை வெளியிட்டார்."

[1957 ஏப்ரல் 20உ. தினசரி ஒன்று]

இந்தப் பொய்யைக் கொஞ்சங்கூட நாகரிகமில்லாமல் ஒரு பத்திரிகை கொட்டை எழுத்துக்களில் தலைப்பிட்டுப் பிரசுரித்திருக்கிறது!

இவற்றையெல்லாம் நம்புவதற்குத் தமிழர்கள் அவ்வளவு மோசமான நிலைக்கு வந்துவிடவில்லை. அவர்களுக்கு ராஜாஜியைத் தெரியும்.

ஆனால் 'பெரியார்' இப்படி ஒரு பச்சைப் பொய்யை இந்த ஏனிலம்பி ஆண்டில் பிரசாரம் செய்ததைக் குறித்து வருந்துகிறோம்!

வணங்குவோம் வாரீர்!

"செந்தமிழ் மணி நாட்டிடை யுள்ளீர்
சேர்ந்தித் தேவை வணங்குவம் வாரீர்!"

ஆடவர் எப்படிப் போயினும் நம் முன்னோர்களும் பக்தர்களும் காட்டிய பக்தி நெறியை நீண்ட நெடுங் காலமாக வழுவாது பின்பற்றி வந்திருக்கின்றனர் நமது தாய்க் குலத்தினர். அதனாலேயே இன்று பாரதம் பாரதமாக இருந்து வருகிறது. அந்தத் தாய்க் குலத்தினரில் இருவர் வணங்கிய கையினராய், ஆண்டவன் சிந்தையினராய்க் கோவிலுக்குச் செல்லும் அரிய காட்சியை, இவ்விதழ் அட்டைச் சித்திரமாக வழங்குகிறார் ஓவியர் கனு தேசாய்!

பரீட்சையின் முடிவு

கொழும்பு, 19உ

இலங்கை இந்தியத் தலைவர் ஸ்ரீ எஸ். தொண்டமான் இவ்வாரம் தோட்டக்கூட்டம் ஒன்றில் பேசிய போது இலங்கை இந்தியர்களின் பிரச்னைகளைப் பற்றி இந்தியாவிலுள்ள தலைவர்களுடன் ஏற்கனவே தாம் பேசியிருப்பதாயும், அதிவிரைவில் இலங்கை அரசாங்கத்துடன் தாம் பேசப் போவதாயும் அறிவித்தார். இந்தச் சம்பாஷணைகளின் பயனாக இலங்கை இந்தியர்களின் பிரஜாவுரிமைப் பிரச்னை மட்டுமல்ல, பிரயாண வசதி போன்ற பிரச்னைகளுக்கும் ஒரு சுமுகமான முடிவு ஏற்பட்டு விடுமென்று சொன்னார்.

இலங்கையிலுள்ள தோட்டத் தொழிலாளர்கள் இந்தியப் பிரஜாவுரிமையை ஏற்று இந்திய பாஸ்போர்ட் வாங்கினாலொழிய இந்தியாவுக்குப் போய் வர முடியாதபடி சுமார் மூன்று ஆண்டுகளுக்கு முன்னால் தடை செய்யப்பட்டார்கள். இவர்களுக்கு இந்தியாவில் உண்மையான அக்கறை இருக்குமானால் இந்தியப் பிரஜைகளாகி இந்தியாவுக்குத் திரும்பிவிடுவார்களென்று அரசாங்கம் எதிர்பார்த்தது. ஆனால் நடந்தது என்ன? ஏதோ ஒரு சிலர் இந்தியாவுக்குத் திரும்பினார்களே தவிர, மற்றவர்கள் இலங்கையில்தான் தங்களுக்கு அக்கறை இருப்பதாகக் காட்டி இங்கேயே நிலைத்து விட்டார்கள். அரசாங்கம் நடத்திய பரீட்சையில் அவர்களுக்கு நூற்றுக்கு நூறு மார்க் கிடைத்து விட்டது! இதன் பிறகும் அவர்களை வெளிநாடு போய் வரக் கூடாதென்று தடுக்க என்ன நியாயம் இருக்கிறது?

சிங்கள பௌத்தர்கள் இந்தியாவிலுள்ள புத்தகயா, சாரநாத், காசி முதலான பௌத்த க்ஷேத்திரங்களுக்குத் தாராளமாகப் போய் வருகிறார்கள். யாழ்ப்பாணத்தமிழர்கள்பழனி, சிதம்பரம் முதலிய சைவ க்ஷேத்திரங்களுக்குப் போய் வரத் தடையில்லை. இந்தியாவுக்குப் போய் வருவதினால் இவர்களை இந்தியர்களென்றோ அல்லது இந்தியாவிடம் சாசுவதமான அக்கறையுடையவர்களென்றோ யாரும் கருதிவிடுவதில்லை. சிங்கள பௌத்தர்களையும் யாழ்ப்பாணத் தமிழர்களையும் போலத் தோட்டத் தமிழர்கள் ராமேசுவரம், மதுரை முதலான இந்திய க்ஷேத்திரங்களுக்குப் போய் வந்தால் மட்டும் அவர்களை இந்தியர்களென்றும் இலங்கைப் பிரஜாவுரிமை கேட்கத் தகுதியற்றவர்களென்றும் கருத என்ன நியாயம் இருக்கிறது? இவ்வாறு ஸ்ரீ எஸ். தொண்டமான் வினவினார். இது சம்பந்தமாக இலங்கை அரசாங்கத்துடன் விரைவில் பேச்சு வார்த்தைகள் நடத்த உத்தேசித்திருப்பதாக அவர் அறிவித்திருக்கிறார்.

* * *

இங்குள்ள இந்தியத் தலைவர்களுக்கிடையில் பல மாதிரியான அபிப்பிராய வேற்றுமைகள் இருந்த பொழுதிலும், இந்தியப் பிரச்னைக்கு விரைவில் ஒரு நல்ல முடிவு காண வேண்டுமென்பதில் எவரிடமும் கருத்து வேற்றுமையில்லை. அரசாங்கத்தின் போக்கும் செய்கையும் எப்படியிருந்த பொழுதிலும் இந்தியப் பிரச்னைக்கு விரைவில் முடிவு காண விரும்புவதாகவே அரசாங்கம் அடிக்கடி சொல்லி வருகிறது. புதிய அரசாங்கம் பதவிக்கு வந்த சென்ற ஒரு வருடத்துக்கிடையில் இந்தியர்களின் நிலைமை படுமோசமடைந்திருப்பது உண்மைதான். அதே சமயம் இந்தியத் துவேஷக் கூச்சல்கள் பெருமளவு குறைந்திருப்பதும் இந்தியாவுடன் நேச உறவு வளர்ந்து வருவதும் குறிப்பிடத் தக்க அம்சங்கள். நல்லெண்ணமும் நேச உறவும் வளருமானால் சங்கடமான பிரச்னைகளும் சுமுகமான முடிவும் ஏற்படுவது கடினமல்ல. இதைப் பிரபல கொழும்பு தினசரியான ''வீரகேசரி'' சுட்டிக்காட்டி இந்தியத் துவேஷத்தையும் இந்தியாவுடன் பகைமையையும் வளர்ப்பதற்குக் கொத்தலாவல கட்சியினர் திட்டம் தயாரித்து வருவதை வன்மையாகக் கண்டித்திருக்கிறது. நாட்டில் அமைதிக்குப் பங்கத்தையும் அண்டை நாட்டுடன் பகைமையையும் உண்டுபண்ணக் கொத்தலாவல கட்சியும் மூச்சிங்கள முன்னணியும் கூட்டாகத் தயாரித்து வரும் பிரசாரத் திட்டத்தைப் பிரதமர் பண்டார நாயகா முளையிலேயே கிள்ளியெறிய வேண்டுமென்றும் இல்லாவிடில் நாட்டுக்கே அபாயமென்றும் கூறியிருக்கிறது. —ரஜனி

"சென்றிடுவீர் எட்டுத் திக்கும் கலைச் செல்வங்கள் யாவையும் கொணர்ந்திங்கு சேர்ப்பீர்!" என்றார் கவியரசர் பாரதியார். மகா கவியின் இந்த வாக்கை நிறைவேற்றுவதற்காகவே திரு நாராயணசாமி ஐயர் இருபத்தைந்து ஆண்டுகளுக்கு முன் 'கலைமகள்' என்ற மாதப் பத்திரிகையை ஆரம்பித்தார். உலகில் வளர்ந்து வரும் எல்லாக் கலைகளையும் தமிழில் வரும்படி செய்து வந்தார். எத்தனையோ இடையூறுகளுக்கு மத்தியில் கலைமகள் ஓங்கி வளர்ந்து தன்னுடைய இருபத்தைந்தாவது ஆண்டு விழாவையும் சிறப்பாகக் கொண்டாடியது.

தந்தை விட்டுச் சென்ற இப்பணியைத் தனயன் திரு ராமரத்தினம் அவர்கள் ஏற்றுக்கொண்டு மிகச் சிறந்த முறையில் நடத்தி வருவதை எவ்வளவு பாராட்டினாலும் தகும்.

கலைமகள் வெள்ளி விழா ஏப்ரல் 14ல் மயிலாப்பூர் ரசிக ரஞ்சனி சபையில் கோலாகலமாக நடைபெற்றது. ராஜாஜி அவர்கள் கலைமகள் வெள்ளி விழாவுக்கு விஜயம் செய்து ஆசி கூறினார்கள். விழாவுக்கு மந்திரி பக்தவத்சலம் தலைமை தாங்கினார். நிதி மந்திரி திரு சி. சுப்பிரமணியம் அவர்கள் வெள்ளிவிழாவை ஒட்டி நடத்திய நாவல், சிறுகதை, நாடகம், கட்டுரைப் போட்டிகளில் வெற்றி பெற்றவர்களுக்குப் பரிசுகள் வழங்கினார். திருப்பெருந்திரு சோமசுந்தரத் தம்பிரான், திரு எஸ். எஸ். வாசன், சுதேசமித்திரன் ஆசிரியர் திரு சீனிவாசன், திரு பெ. நா. அப்புசாமி, திரு அகிலன், திரு மீ. ப. சோமசுந்தரம், திருமதி குகப்பிரியை, திரு கே. பால சுப்பிரமணிய ஐயர் ஆகிய பல அறிஞர்கள் கலைமகள் தொண்டைப் பாராட்டிப் பேசினார்கள். கலைமகள் ஆசிரியர் திரு கி. வா. ஜகந்நாதன் அவர்கள் கலைமகள் ஆற்றி வரும் சேவையைப் பற்றி உணர்ச்சியுடன் கூறினார். திரு ஆர். வி. வாழ்த்துரையை வாசித்தார். மாலையில் மயிலாப்பூர் உட்லண்ஸ் பூங்காவில் எழுத்தாளர்களுக்குக் கலைமகள் வெள்ளி விழா சிற்றுண்டி அளிக்கப்பட்டது.

1. ராஜாஜி அவர்கள் தமிழ்ப் பண்பு கெடாமல் அட்டைச் சித்திரம் போட வேண்டும் என்று அறிவுறுத்தி ஆசி கூறுகிறார். 2. கலைமகள் அதிபர் திரு ராமரத்தினம் வரவேற்புரை நிகழ்த்துகிறார். 3. திரு பக்தவத்சலம் தலைமையுரை வழங்குகிறார். 4. கலைமகள் வெள்ளிவிழாவுக்கு வந்திருந்த பெண்மணிகளில் ஒரு பகுதி.





ஈழ நாட்டுப் பிரயாணம் 6

ஸீதெலியாவும்

ஈழ நாட்டுக்கு வந்து ஒரு வாரந்தான் ஆகிறது. ஆனாலும் வெகு நாட்கள் கடந்துவிட்டது போன்ற ஒரு பிரமை ஏற்பட்டு விட்டது. ஈழநாட்டின் காடுகள், ஏற்றமும் இறக்கமும் வளைவும் நெளிவுமான மலைப் பாதைகள், தேயிலைத் தோட்டம் நிறைந்த குன்றுகள், சிங்கள மக்கள், சிங்களப் பெண்கள், அவர்கள் தம் அங்க அசைவுகளை அற்புதமாக எடுத்துக் காட்டும் முறையில் அணிந்திருக்கும் உடைகள், ஈழநாட்டுத் தமிழ் மக்கள், அவர்கள் பேசும் தேனினும் இனிய தமிழ் எல்லாமே புதுமையாக நமது கண்ணுக்குத் தோன்றினாலும், காதுக்குக் கேட்டாலும் மனத்திலே என்னமோ ஆழமாகப் பதியவில்லை. எல்லாவற்றிலும் பழைமை அதிகமாகக் கலந்திருக்கிறது. பார்க்கப் பார்க்கத் தெவிட்டாத புதுமை என்று ஒன்றும் இல்லை.

நமக்குத் தெரியாத புதுமை என்று இந்த உலகில் அதிகமாக இருக்க முடியாது. ஆனாலும் எப்போதாவது ஏதாவது ஒரு புதுப் பொருள் நம் கண்களில் படத்தான் செய்கிறது. இதுவரை நாம் பார்த்த பொருளாக அது இருப்பதில்லை. நம்முடைய மனத்தில் பழக்கப்பட்டு வந்த சூழ்நிலைக்கும் அது ஒத்து இருப்பதில்லை. உடனே நமக்குப் பழக்கமான வேறொரு பொருளோடு அதை ஒப்பிட்டுப் பார்ப்போம். அப்படிக் கூட ஒப்பிட்டுப் பார்க்க முடியாத அபூர்வமான புதுக் காட்சியாக இருந்தாலும் நாம் அதற்கும் தயாராகி விடுகிறோம். அம்மாதிரியான காட்சிகள் நம்முடைய இலக்கியங்களில் இருந்தால் அதை நினைவூட்டிக்கொண்டு மகிழ்கிறோம்.



இவ்வாறு நமது பழைய இலக்கியக் காட்சியை நினைவூட்டி மகிழும்படியான மறக்க முடியாத இடம்தான் ஸீதெலியா. கக்களைத் தோட்டத்துக்கு அருகிலேயே சாலை ஓரமாக ஒரு சிறு கோயில் இருக்கிறது. அந்தக் கோயிலுக்கு நேரில் வந்ததும் கார் நின்றது. ''இந்தக் கோயிலையும் இதைச் சுற்றியுள்ள பிரதேசங்களையும் பார்க்





நுவரேலியாவும்

காமல் போகக் கூடாது. இறங்குங்கள்'' என்றார் உடன் வந்த நண்பர்.

'' இங்கு அப்படி என்ன விசேஷம் ?''

'' இந்தக் கோயிலின்மீது எழுதியிருப்பதைத் தயவுசெய்து படித்துப் பாருங்கள். எல்லாம் விளங்கிவிடும் '' என்றார் நண்பர்.

'' சிவமயம். சீதையம்மன் கோயில்'' என்று கொட்டை எழுத்தில் நல்ல தமிழில் எழுதியிருந்ததைப் படித்தேன். உடனே எனக்குச் சிரிப்பு வந்து விட்டது.

'' ஏன் இப்படிச் சிரிக்கிறீர்கள் ?''

'' சைவ சமயத்துக்கும் சீதை யம்மனுக்கும் முடிச்சுப் போட்டு வைத்திருக்கும் சமரச சன்மார்க்க மனப்பான்மையை எண்ணிச் சிரித்தேன் '' என்றேன்.

'' இதுவரையில் நான்கூட இதைக் கவனிக்க வில்லை '' என்று சொல்லிவிட்டு அவரும் விழுந்து விழுந்து சிரித்தார்.

'' தயவுசெய்து கால் அணிகளைக் கழற்றி விட்டுக் கோயிலுக்குள் வாருங்கள் '' என்றார்.


'' காலில் இருக்கும் பாதுகைகளைக் கழற்றி வைப்பது இருக்கட்டும். இந்தச் சீதையம்மன் கோயிலுக்குள் கட்டாயம் போய்த்தான் ஆக வேண்டுமா ?'' என்று கேட்டேன்.

'' என்ன அப்படிக் கேட்கிறீர்கள் ! இந்த இடத்தில்தான் சீதையை இராவணன் சிறைப் படுத்தி '' வைத்திருந்தான். இதுதான் சீதாதேவி தவம் இருந்த புனிதமான அசோக வனம் '' என்று சொன்னார்.

'' அடாடா ! இதையல்லவா கூறியிருக்க வேண்டும் '' என்று சொல்லிக் கொண்டே காலில் அணிந்திருந்த பாதுகைகளைக் கழற்றி விட்டுத் தரையிலே காலை வைத்தேன். அவ்வளவுதான். ஐஸ் கட்டியின் மீதே பாதத்தை வைத்தது போல 'ஜில்' லென்று ஒரு தாக்குத் தாக்கிற்று. பாதத்தில் இருந்து உடலில் ஒரு சக்தி பாய்ந்து ஓடியதை உணர்ந்தேன். அடுத்த கணம் நான் இந்த உலகில் இல்லை. கால வெள்ளத்தில் மிதந்து எத்தனையோ ஆயிரம் ஆண்டுகளுக்குப் பின்னால் சென்று விட்டேன். என் எதிரில் தெரிந்த சீதையம்மன் கோவில் மறைந்து விட்டது. உடன்வந்த நண்பர்களும் மறைந்துவிட்டனர்.

பத்தரைமாற்றுப் பசும்பொன்னால் செய்த தங்க விக்கிரகம் போன்ற சீதா பிராட்டி தலைவிரிகோலமாய் அசோக மரத்துக்கு அடியில் சோகமே உருவமாக உட்கார்ந்திருக்கிறார். எங்கே திரும்பினாலும் சீதாதேவியின் சாந்தம் குடிகொண்ட திருமுகம் தோன்றிக்கொண்டிருக்கிறது! அவருடைய இதய தாபத்தை அங்குள்ள அசோக மரங்களின் சத்தத்தில் கூடக் காண முடிந்தது. அவருடைய தவத்தின் அற்புத சக்தி காற்று வெளியெலாம் பரவிச் சூழ்ந்து அந்தப் பிரதேசத்துக்கே தாய்மையை அளித்துக் கொண்டிருந்தது.

அசோக வனத்துக்கு அப்பால் உள்ள இலங்கை நகரிலோ நேர்மாறான காட்சி. அங்கு வானளாவிய கூடகோபுரங்களையுடைய இராவணனின் தங்கமயமான அரண்மனை. முத்து மாலைகளும், ரத்ன கிரீடமும் தரித்த இராவணன் தர்பார் மண்டபத்தில் கம்பீரமாக அமர்ந்திருக்கிறான். தேவர்கள் எல்லாம் அவன் இட்ட வேலையைப் பணிவுடன் செய்துகொண்டிருக்கிறார்கள். அவனுடைய பட்டத்து ராணி மண்டோதரியோ அந்தப்புரத்தில் அமர்ந்திருக்கிறாள். கற்பின் தெய்வமான அவள் சக்தியினால்தானோ என்னவோ



பகீரதன்

சீதையைச் சிறைப்படுத்திய பின்னரும் கூட இராவணன் எல்லாவிதமான சுக போகங்களுடன் இருக்கிறான் போலும்! மந்திரி பிரதானிகளும், முத்துப் பல்லக்குகளும், துவந்த யுத்தங்களும், இன்னிசைப் பொழிவுகளும், சௌந்தரிய நடனங்களும் என்று அரண்மனை கோலாகலமாக இருக்கிறது. எல்லாவற்றிலுமே ஒரு வெறி மூண்டு கிடக்கும் கோலத்தைத்தான் பார்க்க முடிகிறது.

ஒருபுறம் வெறியூட்டும் கேளிக்கையும், இன்னொருபுறம் சாந்தமும் அன்பும் நிறைந்த தாய்மையும் மாறி மாறித் தோன்றுகின்றன.

சத்தியம் தவழும் அசோக மரத்தின் மீது அநுமன் உட்கார்ந்திருக்கிறான். சீதையின் தவத்தைக் கண்டதும், அநுமனின் ஆனந்தம் எல்லைமீறிப் போகிறது. அழுக்குப்படிந்த ரத்தினத்தையும், தேய்ந்த சந்திரனையும் போல மலினமான நிலையிலிருக்கிறாள் சீதை. அந்த நிலையிலும் அவள் கற்பும் காவலும் சிறிதும் கெடாமலிருக்கின்றன. இந்தக் கோலத்தைப் பார்த்தவுடன் அநுமனுக்குத் தைரியம் ஏற்பட்டு விடுகிறது. அறம் என்றுமே அழியாது என்ற நம்பிக்கையும் பிறந்து விடுகிறது.

மாகண்ட மணியனுள்
வயங்கு வெங்கதிர்த்
தேகண்ட திங்களும்
என்னத் தேய்ந்துளாள்
காகண்ட கூந்தலாள்
கற்பும் காவலும்
ஏகண்ட இல்லையால்
அறத்துக் இறுண்டோ!

என்று கூறிக்கொண்டு அநுமன் ஆடுகிறான், பாடுகிறான், அங்கும் இங்குமாக ஆனந்த வெறி கொண்டு ஓடுகிறான்! இன்னும் அவளது தவத்தைப் பார்த்து விட்டு, அவள் இருந்த நிலையைக் கண்டதும் அநுமனுக்கு ராமபிரானது நினைவு வந்து விடுகிறது.

'காண நோற்றிலன்
அவன் கமலக் கண்களால்'

என்கிறான். ராமன் சீதா தேவியின் இந்தப் புனிதமான திருக் கோலத்தைத் தன்னுடைய கமலக்கண்களால் பார்க்கக் கொடுத்து வைக்கவில்லையே என்று எண்ணிக் கொண்டே தாவித் தாவிக் குதிக்கிறான். 'தருமம் காத்ததோ? ராவணனுடைய வினைதான் அவளைக் காத்துக் கொடுத்ததோ? அல்லது சீதையின் கற்புத்தான் வேறோர் துணை பலமும் இன்றி அவளைக் காத்து வந்ததோ? யாரால் இவ்வளவு அபாரமான தற்காப்பு செய்து கொள்ள முடியும்? இந்தச் செய்தியை என் தோழன் ராமனுக்கு எத்தனைதரம் சொன்னாலும் என்னுடைய ஆவல் அடங்காது போலிருக்கிறதே! இவள் தவத்துக்கு முன்னால் தீவினைகள் என்ன செய்ய முடியும்? முடிவில் சத்தியம் தான் வெல்லும்' என்று மேலே மேலே என்னென்னவோ சொல்லி அடுக்கிக் கொண்டே போகிறான் ராமதூதனான அநுமன்.

திடீரென்று காட்சி மாறுகிறது. ராமன் கொடுத்த சூளாமணியைச் சீதையிடம் அளிக்கிறான் அநுமன். பிறகு அவளிடம் விடை பெற்றுக் கொண்டு புறப்படுகிறான். போகும் போது இலங்கை நகரையே தீ வைத்துக் கொளுத்தி விட்டுப் போகிறான். இலங்கைத் தீவு மட்டுமா எரிகிறது? ராவணன் நிர்மாணித்திருந்த அழகு நகரமே தீயில் எரிந்து அழிகிறது. அசோக வனத்தில் இருந்த சீதையும் இத் தீயினால் சிறிது சிரமப்படுகிறாள். இந்த அழகு மிக்க இலக்கியக் காட்சிகள் எல்லாம் ஒன்றன் பின் ஒன்றாக மனத் திரையில் தோன்றிக் கொண்டே இருக்கின்றன.

"என்ன நீங்கள் இந்த உலகிலேயே இல்லை போலிருக்கிறதே!" என்று கேட்டுத் தோளைப் பிடித்து உலுக்கினார் நண்பர். அப்பொழுது தான் எனக்கு இந்த உலக நினைவு வந்தது. இந்த உலக நினைவு வந்தவுடனேயே பாதத்திலிருந்து உடலில் 'ஜில்' என்று ஏறும் ஸிதெலியாவின் குளிர் வேதனையைத் தாங்க முடியாமல் தவித்துப் போனேன்.

குளிர்ச்சியின் வேதனை ஒரு புறம் இருந்தாலும் சீதையம்மன் கோயிலுக்குள் சென்றதும் ராமாயண காலத்து அசோகவனத்துக்குள் அநுமனுடனேயே நாமும் வந்துவிட்டது போன்ற உணர்ச்சிதான் ஏற்படுகிறது.

நேயர்களுக்கு ஒரு எச்சரிக்கை செய்ய விரும்புகிறேன். இந்தக் கட்டுரையைப் படிப்பதினாலோ, அல்லது முன்னமே ஏற்பட்ட விருப்பத்தினாலோ ஸிதெலியாவுக்குப் போக விரும்புகிறவர்கள் அங்கே ஏதோ அசோக வனத்தையும், சீதையையும், அநுமனையும் இராவணனையும் நேருக்கு நேர் பார்க்கப் போகிறோம் என்று எண்ணிப் போகக்கூடாது. ராமாயணத்தில் நம்பிக்கை உள்ளவர்களுக்கும், கம்பனின் காவியத்தைப் படித்து அநுபவித்த ரஸிக உள்ளம் படைத்தவர்களுக்கும் ஒருவேளை அங்கு சீதையும் அநுமனும் காட்சி தந்தாலும் தரலாம். ஆகையால் அதற்கு வேண்டிய சூழ்நிலையை ஏற்படுத்திக் கொண்டு போனால் தான் ஸிதெலியாவை அநுபவிக்க முடியும் என்பதைக் கூறி விடுகிறேன்.

ஸிதெலியாவில் சீதையம்மன் கோவிலுக்குப் பின்னால் ஓடை ஒன்று இருக்கிறது. அந்த ஓடையில் ஒரு சிறு சுனை காணப்படுகிறது. "இந்தச் சுனையில்தான் சீதாதேவி குளித்தாள். அதனால்தான் இந்த இடத்துக்குச் ஸிதெலியா என்று பெயர் வந்தது" என்று சொல்கிறார்கள். இந்த ஓடையிலும் ஒரு அதிசயம். சல சல வென்று வேகமாக ஓடி வரும் இந்த ஓடை ஒரு இடத்துக்கு வந்ததும் பூமிக்குள் மறைந்து விடுகிறது. கொஞ்ச தூரத்துக்கு அப்பால் பூமிக்குள்ளிருந்து கொப்புளித்துக் கொண்டு மீண்டும் மேலே வருகிறது. அந்த இடத்தில் ஓடையின் வேகம் அதிகமில்லை. அதில் இறங்கிக் குளிப்பதற்கு வேண்டிய வசதியான சூழ்நிலையில் இருக்கிறது. இதற்கும் ஒரு கதை சொல்கிறார்கள். "தான் குளிப்பதற்காக வேண்டிக் கங்கையை அமைதியுடன் வரும்படி சீதை வேண்டிக் கொண்டாளாம். அவள் வேண்டுகோளுக்கிணங்கிக் கங்கை இப்படித் தன் வேகத்தைக் குறைத்துக் கொண்டு வருகிறாள்" என்று சொல்கிறார்கள். இவ்வாறு பலப்பல கதைகள் அங்கு வழங்கி வருகின்றன.

ஒரு முக்கியமான விஷயம். இந்தக் கதைகளெல்லாம் எப்படியாவது போகட்டும். இந்த இடத்தைப் பற்றி ராமாயண காவியத்தில் படிக்கும் போது மிக நன்றாய் இருக்கும்.

நேரில் போய்ப் பார்க்கும்போதோ 'இவ்வளவுதானா ?' என்று எண்ணத் தோன்றி விடும். ஆனால் இங்குள்ள வேறு சில இடங்களின் மகிமையை நேரில் பார்ப்பதில் உண்டாகும் உணர்ச்சியில் பத்தில் ஒரு பங்குகூட காவியத்தில் காண முடியாது. சிதேலியா அமைப்பு அத்தகையது.

அநுமன் இலங்கையைக் கொளுத்தியதால் ஊர் அழிந்து போன பரிதாபக் காட்சியை இன்றும் சிதேலியாவில் நேரில் பார்க்கலாம். அந்தப் பிரதேசத்தில் உள்ள மண்கூடச் சுமார் இரண்டடி உயரத்துக்கு அப்படியே தீயால் வெந்து கருகியது போல் கன்னங் கரேல் என்று கரிசலாகக் காட்சி தருகிறது.

சீதை குளித்த மகிமையினாலோ என்னவோ அந்தச் சுனையில் எப்போதும் வற்றாத நீர் ஊற்று இருந்து வரும் அதிசயத்தைப் பார்க்கலாம். அந்தச் சுனையைச் சுற்றியுள்ள பிரதேசம்தான் அசோக வனம் என்று சொல்கிறார்கள். அங்கே ஏராளமாக வளர்ந்திருக்கும் ஒரு வகையானகுட்டை மரங்களில் செக்கச் செவேல் என்று அழகான புஷ்பங்கள் பூத்துக் குலுங்கிக் கொண்டிருக்கின்றன. இந்த மரம்தான் அசோக மரம்.

இதெல்லாம் உண்மையா இல்லையா என்பதைப் பற்றி நம்மால் உறுதி கூற முடியாது. ஆனால் இந்த இடம்தான் சீதை சிறை இருந்த இடம் என்பதை நிரூபிப்பதற்குப் பல அறிஞர்கள் முயன்றிருக்கிறார்கள். அநுமன் சீதையைப் பார்த்துச் சூளாமணியைக் கொடுத்த அசோக வனம்தான் இது என்பதை நிரூபிப்பதற்கு இன்னொரு அத்தாட்சியும் இருக்கிறது. அநுமனின் சந்ததியார்கள் கூட்டம் கூட்டமாக அங்கு ஆடிவரும் காட்சியைப் பார்க்கலாம்.

ஈழநாட்டுச் சொர்க்கம்

நேயர்கள் தயவு செய்து நிமிர்ந்து உட்கார வேண்டும். கவனத்தை இந்தப் பக்கத்தில் திருப்ப வேண்டும். ஏனென்றால் இப்பொழுது ஈழநாட்டுச் சொர்க்கத்துக்கு உங்களை அழைத்துச் செல்லப் போகிறேன்.

ஈழநாட்டைப் பொன் கொழிக்கும் தீவு என்றும், ஈழநாட்டின் மலை மங்கையான நுவரேலியாவை லட்சுமி தேவியின் இருப்பிடம் என்றும் சொல்லலாம் என்றால், லட்சுமி தேவி கொலு வீற்று அரசு புரியும் இடம் நுவரேலியாவில் உள்ள தேயிலைத் தோட்டங்கள்தான். அந்தத் தோட்டத்தையும் அதைச் சுற்றியுள்ள இடங்களையும் பார்த்த போது "இதுதான் ஈழநாட்டுச் சொர்க்கம் !" "இதுதான் ஈழநாட்டுச் சொர்க்கம் !" என்று வாய் விட்டுச் சொல்லத் தோன்றுகிறது.

நுவரேலியா உலகில் உள்ள மிகச் சிறப்பு வாய்ந்த மலை வாசஸ்தலங்களில் ஒன்று என்பதை மறந்துவிடக்கூடாது. ஆசியாக் கண்டத்தில் ஐரோப்பிய நாடு புன்முறுவல் பூக்கும் இடம் இதுதான். இங்கிலாந்தையும் ஸ்விட்சர்லாந்தையும் நுவரேலியாவில் பார்க்கலாம் என்கின்றனர், உலகைச் சுற்றுப் பிரயாணம் செய்த நிபுணர்கள். இங்கிலாந்தில் பூக்கும் வண்ணப் புது மலர்களையும், இன்னிசையோடு செல்லும் சிற்றாறுகளையும், வானின்று ஒழுகும் அழகுமிக்க அருவிகளையும் நுவரேலியாவில் கண்டு களிக்கலாம். அதே போல ஸ்விட்சர்லாந்து தேசத்தில் காணப்படும் சில அற்புதக் காட்சிகளையும் இங்கு காணலாம்.

வாருங்கள், நுவரேலியா நகரத்தைக் கடந்து சென்று அதன் அழகுமிக்க இயற்கைக் காட்சிகளையும் சௌந்தர்ய தேவி இன்ப நடனமிடும் உல்லாசப் புல் வெளிகளையும் பார்த்து அனுபவிக்கலாம். குளிர்ச்சியின் சுகத்துடன் கண்ணுக்குத் தோன்றும் எல்லாப் பொருள்களுமே புது அழகுடன் சுடர்விட்டு ஜொலிக்கின்றன. நூற்றுக் கணக்கான ஆயிரக் கணக்கான ரூபாய்களை அள்ளிக்கொட்டி நகர்ப்புறங்களில் பூங்காவின் மத்தியில் புல் வெளிகள் அமைத்திருக்கிறார்களே அதெல்லாம் இங்கு காணும் இயற்கைப் புல் வெளிகளிடம் உறைபோடக் காணாது. மரகதக் கம்பளத்தை, பச்சைநிற வெல்வெட்டுப் பாயைத் தரையில் விரித்திருப்பது போலக் கண்ணுக்கு எட்டிய தூரம் வரையில் புல்வெளிகள் பரந்து விரிந்து கிடக்கின்ற காட்சியே காட்சி! இந்தக் காட்சியே போதும் நுவரேலியா ஈழநாட்டின் சொர்க்கம் என்று சொல்வதற்கு. அதன்மீது அடி வைத்து நடக்கவே கால்கள் கூசுகின்றன. இந்தப் புல்வெளியைத் தாண்டிச் செல்கிறோம். இரு புறமும் அலைமோதிக் கொண்டிருக்கும் நீர் நிலையைப் பார்க்கிறோம். மிகப் பெரிய ஏரி. இதற்குக் கிரகரி என்று பெயர். இந்தக் கிரகரி ஏரியின் கரையில்நின்று கொண்டிருக்கும்போது அங்கு ஏற்படும் இயற்கையின் இந்திர ஜால வித்தைகளை எப்படி வர்ணிப்பது என்றே தெரியவில்லை.

ஏரிக்கரையில் சற்று நேரம் நில்லுங்கள். நின்று நீர் நிலையையும் வானத்தின் அழகையும் பார்த்துக் கொண்டே இருங்கள். இதுவரை பூலோகத்தில் இருந்த நாம், ஏதோ ஒரு அபூர்வ சக்தியினால் சொர்க்கலோகத்துக்குப் போய்விட்டோம் என்றே தோன்றும். அவ்வளவு அபூர்வமான காட்சிகள் தென்படுகின்றன. கிரகரி ஏரியையும், நிலா தவழும் புல்வெளி என்று வழங்கும் மரகதப் புல்வெளி

களையும் கடந்துசென்றால் அங்குஒரு சிறுகுன்று மங்கை நம்மைச் சிரிக்காமல் சிரித்து வரவேற்கிறாள். அவள் அழகில் மயங்கி வெறி பிடித்தாற்போல அந்த மலையை நோக்கிச் செல்கிறோம். பிதிருத்தலகாலா என்ற இந்த மலையில் ஏறிச் செல்வதற்கு மூன்று மணி நேரம் ஆகிறது. மூன்று மணி ஆனாலும் களைப்பு என்பதே ஏற்படவில்லை. நம் ஊரில் அரை பர்லாங்கு தூரம் நடப்பதற்குள் வியர்த்து விறுவிறுத்து மேல் மூச்சு கீழ் மூச்சு வாங்கக் களைப்பு ஏற்பட்டு விடுகிறது. நுவரேலியாவில் எத்தனை மைல் நடந்தாலும் களைப்பே ஏற்படுவதில்லை. நடக்க நடக்க உற்சாகமும் மனத்தில் ஒரு இன்பமும் ஏற்படும் அதிசயத்தை அனுபவித்துப் பார்த்துத்தான் மகிழ வேணும். பிதிருத்தலகாலா மலையின் அழகைச் சொல்ல வேண்டுமானால் ஒரே வார்த்தையில் சொல்லி விடலாம். அழகு நிறைந்த இளம் மங்கை ஒருத்தி நம் முன் நின்று கை காட்டிக் கண்சிமிட்டி மயக்குவது போன்ற பிரமைதான் ஏற்படுகிறது. மலையின் அழகைப் பார்ப்பதற்காக எலிசபெத் மகாராணியே இங்கிலாந்திலிருந்து ஈழத்துக்கு வந்திருந்தார் என்றால் அதன் அழகைப் பற்றி அதிகம் விவரித்துக் கூற வேண்டுமா ?


இந்த மலைமீது நின்று வான வெளியைப் பார்த்தபோது அந்த வெளியில் உண்டான மாய வித்தைகளை இப்பொழுது நினைத்தால் கூட விந்தையாக இருக்கிறது. காரணமின்றிப் பலவித கோலங்களைப் புனைந்தது மேகம். எத்தனை எத்தனையோ நிறச் சாயல்களைப் பெற்றது வானவெளி. மேகத்தின் வடிவங்களும், வர்ணத்தின் கலவைகளும் எத்தனை உண்டோ அத்தனையும் பார்க்க முடிந்தது. நல்ல கீர்த்தனையில் வரும் சங்கதிகளைப்போல் படிப் படியாக வர்ணத்தின் பல்வேறு கலவைகளும் வான வெளியில் உதிர்த்து கொண்டிருந்தன. மேகத்தின் வடிவங்களும் வர்ண பேதங்களும் ஒன்றுக்கு ஒன்று முரண்படவில்லை. ஆனாலும் வான வெளியில் மேகங்கள் விசித்திரமான வேற்றுமை கொண்டு விளங்கி வந்தன. ஒரு புறத்தில் வாரி வாரி அள்ளி விட்டிருக்கும் வர்ணக் கோலம். இன்னொரு புறத்தில் அமைதியும், அடக்கமும், மென்மையும், ஆழமும் கொண்டு விளங்கும் வித்தை வெளி. ஒரே சமயத்தில் தெம்மாங்கையும், கீர்த்தனையையும் உற்சாகமாகப் பாடுகிறாள் இயற்கைத் தேவி. இவை இரண்டும் வெவ்வேறு வகையானாலும் ஒன்றுக்கு ஒன்று அழகு குறைந்து போய் விடவில்லை.

நுவரேலியாவில் செல்லுகின்ற இடமெல்லாம் கொடிய மிருகங்கள் நிறைந்த காடுகளும், பசுமை நிறைந்த சமவெளிகளும், அழகு மிளிரும் குன்றுகளும் காணப்படுகின்றன. அலைகளிலிருந்துவிழுகின்ற சிறுசிறு அருவிகள் மலைகளுக்கு முத்து மாலைகள் சூட்டியதுபோல இன்பமளிக்கின்றன. மலையிலிருந்து விழும் அருவிகளின் ஓசை, சாந்தம் தவழும் அந்தமலை மங்கையின் மங்காத இனிய கானமாக, மகர யாழின் அமுத கீதமாக எப்போதும் ஒலித்துக் கொண்டே இருக்கிறது.

இத்தகைய சௌந்தர்ய தேவதையின் கொலு மண்டபத்திலிருந்து எத்தனை எத்தனையோ வழிகள் செல்லுகின்றன. ஒவ்வொரு வழியில் சென்றால் ஒவ்வொரு இன்பத்தை அனுபவிக்கலாம். மீன் பிடிப்பவர்க்கு வேண்டிய வசதி இருக்கிறது. நியூஸிலாந்தில் கிடைக்கும் 'வான வில்' என்ற ஒரு வகை விசேஷ மீன் நுவரேலியாவில் கிடைக்கிறது. வேட்டையாடுபவர்களுக்கு வேண்டிய வேட்டைக் காடுகள் இருக்கின்றன. 'கால்ப்' என்ற பந்தாட்டத்துக்கு வேண்டிய சுகமான மிகப் பெரிய திடல் இருக்கிறது. குதிரைப் பந்தய மைதானம் இருக்கிறது. எல்லாம் இயற்கையாகவே அமைந்திருக்கின்றன.

உலகம் வியக்கும் அற்புத இடமான நுவரேலியாவைப் பார்த்து அனுபவிப்பதற்கு அறிவு வேண்டாம், அநுபவம் வேண்டாம், ரஸிக உள்ளம் வேண்டாம், ஒன்றுமே வேண்டாம். பின் என்ன வேண்டும் ? வயிற்றுப் பசி மட்டும் இல்லாமல் இருந்தால் போதுமானது. நுவரேலியா சொர்க்க பூமியாகக் காட்சி தரும். 'பசியோடு இருந்தால் நுவரேலியா என்ன, உலகத்தில் எதையுமே அனுபவிக்க முடியாது' என்று நேயர்கள் சொல்லுவது காதில் விழுகிறது. 'ஆமாம். அது முக்காலும் உண்மை!' என்று ஒப்புக் கொள்ளுகிறேன்.

அழகும் அமைதியும் நிலவித் தவழும் நுவரேலியா மலை மங்கைக்கு ஒரு வணக்கம் செலுத்தி விட்டு, ஈழநாட்டுச் சொர்க்கத்தினின்று கிளம்புவோம். ஈழ நாட்டிலேயே மிகப் பெரிய, ஏன்? கிழக்கு ஆசியாவிலேயே மிகச் சிறந்த தேயிலைத் தோட்டத்துக்குள் இப்பொழுது செல்வோம். (தொடரும்)



1913ல் மணிக்கு 75 மைல்கள் ஒரு அற்புத சாதனையா யிருந்தது!

1913ல் ஜூலெஸ் கோக்ஸ் என்ற மோட்டார் பந்தய ஓட்டி, அக்காலத்தில் ஒரு அற்புதமான சாதனையாகக் கருதப்பட்டு வந்த மணிக்கு 75 மைல் வேகத்தில், பயர்ஸ்டோன் டயர்கள் உபயோகித்து, புகழ் பெற்ற இந்தியானாபோலிஸ் 500 மைல் பந்தயத்தில் ஜெயித்தார். அதன் பயனாகவே பயர்ஸ்டோன் மிகச் சிறந்த டயர்கள் தயாரிக்கத் துவங்கினார்கள். மற்றும் வருஷந்தோறும் பயர்ஸ்டோன் டயர்களில் செய்துள்ள அபிவிருத்திகள், அவைகளை ராஜபாட்டையில் உபயோகிக்க முடியும் என்பதை பந்தய மைதானத்தில் நிரூபித்துள்ளன.


புதிய டிலெக்ஸ் சாம்பியன் ட்யூப்லெஸ் டயர்கள் என்பது இப்பொழுது காரில் பத்திரமாகச் செல்லுவதற்கான பயர்ஸ்டோனின் ஒரு அற்புதத் தயாரிப்பு. வேறெந்த டயராலும் எந்த விலையிலும் இதற்கு முன் அளிக்க இயலாத பாதுகாப்பை இது உங்களுக்கும் உங்கள் குடும்பத்தினருக்கும் அளிக்கும். நிம்மதியுடன் பிரயாணம் செய்வதற்கென்றே முதன் முதலாகத் தயாரித்த டயர் இது ஒன்றே!

Firestone

பயர்ஸ்டோன்

புதிய டிலெக்ஸ் சாம்பியன் ட்யூப்லெஸ் டயர்

"நிம்மதியுடன் பிரயாணம் செய்வதற்காகத் தயாரித்த டயர்"



பயர்ஸ்டோன் டயர் அண்டு ரப்பர் கம்பெனி ஆப் இந்தியா பிரைவேட் லிமிடெட்



வெள்ளித்திரை

வணங்காமுடி

இந்தப் படத்தைப் பார்த்ததும், நடிகர்களை வைத்துக் கொண்டு அவர்களின் திறமைக்கு ஏற்றபடி திரைக் கதை தயாரிக்கப் பட்டிருக்கும் என்று தோன்றியது.

கதாநாயகனைத் தோன்றி, கட்டழகியைக் காதலித்து, இன்சொல் இயம்பி, சமயத்தில் வாளெடுத்துப் போரிட்டு, வீர வாசகம் பேசி, தாயன்பையும் தந்தைப் பாசத்தையும் உதற முடியாமல் விம்மி விதிர் விதிர்க்கும் காட்சிகளில் திறமையாக நடிப்பதில் சிவாஜி கணேசனுக்கு இணையான நடிகரைத் தமிழ்ப் பட உலகில் காண்பது அரிது.

சிவாஜி கணேசன், சிற்பி வணங்காமுடியாக வந்து, வணங்கியும், வணங்காமலும், வாள் ஏந்தியும், சிற்றுளியும் கையுமாகச் சிற்ப சித்திரங்களைச் செதுக்கியும், அதே சமயத்தில் அரசிளங் குமரியின் இதயத்தில் காதல் சித்திரத்தையும் உருவாக்கி அதியற்புதமாக நடித்திருக்கிறார். நாளுக்கு நாள் அவர் நடிப்பில் நல்ல மெருகு ஏறி வருகிறது. ஆனால் இவ்வளவு சிறந்த நடிகருக்கு, ஒரு நல்ல கதையில் நடிக்கும் சந்தர்ப்பம் இன்னும் கிடைக்கவில்லையே என்பதுதான் என் வருத்தம். நதியில் பிரவாகமாகப் பொங்கி வரும் புதுப் புனலை அணைகட்டித் தேக்கி, பயிர் செழிக்கப் பயன்படுத்துவது போல் பொங்கி வெழும் சிவாஜி கணேசனின் உணர்ச்சி மிகுந்த நடிப்பை ஒரு நல்ல டைரக்டர் சரியாகப் பயன்படுத்த வேண்டும். பல இடங்களில் திரைக் கதையின் ருசிக் குறைவு காரணமாக, படம் பார்க்கும்போது இந்த ;எண்ணம் என் உள்ளத்தில் மேலோங்கி இருந்தது.

வீரமகனின் தந்தையாக வந்து, அரண்மனை ஊழியத்தில் அணுவளவும் பிசகாமல் இருந்து, மகனின் தகாத காதலைக்கண்டு மனமுடைந்து, கடமைக்கும் பாசத்துக்கும் இடையே ஊஞ்சல் ஆடி, கடைசியில் கடமையே பெரிதென மதித்து, மகனைக் கைதியாகப் பிடித்து அரச சபைக்கு அழைத்து வந்து ஒப்படைக்கும் நேர்மை நிறைந்த பாத்திரத்துக்கு நம் நாகையாதான் ஏற்றவர். மேலும், நாகையா இதேமாதிரி கட்டங்களில் பல படங்களில் சிறப்பாக நடித்துப் பண்பட்டவர். ஆகவே, அவர் இந்தப் படத்தில் நன்றாய் நடித்திருக்கிறார் என்று கூறுவது, தேன் இனிக்கிறது என்று கூறுவது போலாகும்.

ஒரே மகனைப் பெற்று, அவனிடம் உயிரையே வைத்து, அவன் வாழ்வையே தன் வாழ்வாகக் கொண்டு, கடைசியில் அவனுக்காகவே உயிர் துறக்கும் ஒரு பெற்ற தாய்க்குக் கண்ணாம்பாளை விட்டால் நமது திரையுலகில் வேறு தகுந்த நடிகை யார் இருக்கிறார்கள்? கண்ணாம்பா இந்தப் படத்தில் கண்ணீர் விடுகிறார், மகனுக்கு ஏற்ற மணப் பெண்ணைத் தேர்ந்தெடுத்து, அவளை அணைத்துக் கொண்டு அன்புக் கண்ணீர் சுரந்து ஆனந்த பரவசமாகிறார், கடும் சோதனைகளை மேற்கொள்ளுகிறார், ராஜ தண்டனையை ஏற்கப் போகும் மகனின் உயிரைக் காக்க, வீராங்கனையாக அரச சபையில் தோன்றி, மூச்சு விடாமல்

வீர வாசகங்களை வாரி வழங்கிக் கடைசியில் உயிர்த் தியாகமும் செய்திருக்கிறார்.

வணங்காமுடியின் வீரத்துக்கும் தீரத்துக்கும் ஏற்ற காதலி இளவரசி தேவசுந்தரி. அந்தப் பாகத்துக்கு எல்லா விதத்திலும் ஏற்றவர் சாவித்திரி என்று கூறலாம். தந்தைக்கு விரோதமாக ஒருவனைக் காதலிக்கவும், காதல் ஈடேறுவதற்காக மாறுவேடம் பூணவும், காதலன் வீட்டு அடுப்பங்கரையில் கையைச் சுட்டுக் கொள்ளவும், கள்ளப் பார்வை பார்க்கவும், மாமியாருக்கு ஏற்ற மருமகளாக மணமாகுமுன்பே பழகவும் சாவித்திரிக்கு இந்தப் படத்தில் அரிய வாய்ப்புக்கள் கிட்டியிருக்கின்றன.

சாவித்திரிக்கு இந்தப் படத்தில் குறத்தி, இளவரசி ஆகிய இரண்டு பாத்திரங்களை ஏற்று நடிக்க ஒரு சந்தர்ப்பம் கிடைத்திருக்கிறது. அந்தச் சந்தர்ப்பத்தை அவர் நன்கு பயன்படுத்திக் கொண்டிருக்கிறார். இளவரசி தேவி சுந்தரியாக வந்து ஏழைச் சிற்பி சித்திரசேனனைக் காதலிக்கும் காட்சியில் அவர் நடிப்பு நன்கு சோபிக்கிறது. அழகாகப் பேசி நடித்திருக்கிறார். அதுவும் குறத்தியாக நடிக்கும்போது அவர் பார்வை, பேச்சு, நொடிப்பு, நடை, உடை, பாவனை எல்லாமே பிரமாதம்!

ஒரு படத்தில் கதாநாயகனுக்குச் சிரமங்களை ஏற்படுத்தி, அதன் மூலம் அவன் வீரதீரங்களுக்கு மெருகு கொடுத்து விளங்க வைக்கும் அரும் பணி வில்லனைச் சேர்ந்தது. அந்தப் பணியைத் தன்னல மறுப்புடன், தனக்குக் கெட்ட பெயரைத் துணிந்து ஏற்றுக் கொள்ளும் வில்லனை ஒரு தியாகி என்று கூறுவதில் தவறொன்றும் இல்லை. வில்லனையே கதாநாயகன் என்று கூடக் கூறுவேன் நான். அவன் தானே தன்னுடைய கொடுமையான செயல்களின் மூலம், கதாநாயகனுக்கு உயிரும் உணர்வும் ஊட்டுகிறான்?

இந்தப் படத்தில் வில்லன் பாகத்தை எம். என். நம்பியார் ஏற்றிருக்கிறார். சேனாபதி நரேந்திரன் பாகத்தில் நடிப்பிலும் மிடுக்கிலும் யாரும் அவரை மிஞ்சிவிட முடியாது என்று கூறும் வண்ணம் நடித்திருக்கிறார்.

வணங்காமுடியின் நண்பனாக வரும் தங்கவேலு, எல்லோரையும் நன்றாய்ச் சிரிக்க வைக்கிறார். இளவரசியை எதிர்பார்த்திருந்த வணங்காமுடி நண்பனைப் பார்த்து, "உன் அன்புக்கு உரிய இளவரசியின் தோழி வருகிறாளா, பார்!" என்று சொன்னதும், "பின்னேயாரே வரவில்லையென்றால் மூஞ்சூறு மட்டும் எப்படி முன்னால் வந்து விடும்?" என்று தங்கவேலு கேட்பது சுவாரஸ்யமாயிருக்கிறது. இதுமாதிரி பல சந்தர்ப்பங்களில் அவர் பேச்சில் ஹாஸ்ய ரஸம் வாசவமாகப் பொங்கித் ததும்புகிறது.

அரண்மனை நாட்டியக்காரி அம்பிகாவாக நடிக்கும் ராஜசுலோசனா நடனம் ஆடியிருப்பதுடன் 'பளிச்' 'பளிச்'சென்று பேசி நன்றாக நடித்தும் இருக்கிறார்; இளவரசி கட்டுக்காவலிலிருந்து தப்புவதற்கு உறுதுணையாக இருந்து பாவத்துடன் உயிர்த் தியாகமும் புரிகிறார்.

இளவரசியைக் காதலித்த இளம் சிற்பி மேற்படி குற்றத்துக்காக நாடு கடத்தப்படுகிறான். பிறகு மலைநாட்டு மன்னன் பதவியை ஏற்று, மீண்டும் வந்து இளவரசியின் கரம் பற்றுகிறான் என்பதுதான் வணங்காமுடி திரைப் படத்தின் கதை.

கத்திச் சண்டையைக் காண விரும்பும் ரசிகர்களுக்கு இந்தப் படம் மிகவும் திருப்தியை அளிக்கும். மாட மாளிகைகளின் மேலும், திறந்தவெளியிலும், சீறிப் பாய்ந்து நேரடியாகச் சண்டையிடும் காட்சிகளை இந்தப் படத்தில் நன்றாய்க் காணலாம்.

படம் பல இடங்களில் விறுவிறுப்பாகச் செல்லுகிறது என்றாலும், பல இடங்களில் சோர்ந்தும் போய் விடுகிறது.

இந்தப் படத்துக்குக் கதை, வசனம் எழுதிய ஏ. கே. வேலன் தமது பணியை நன்றாய்ச் செய்திருக்கிறார்.

தஞ்சை ராமையாதாஸ் திரைக் கதையின் பாடல்களை நன்றாய்ப் புனைந்திருக்கிறார். தேவியின் சன்னதியில் சாவித்திரி பாடும் "என்னைப் போல் பெண்ணல்லவோ-நீ உலக இருள் நீக்கும் கண்ணல்லவோ?" என்ற பாட்டை, பி. சுசீலாவின் மதுரமான குரலில் கேட்கும் போது மனத்துக்கு மிகவும் இதமாயிருக்கிறது.


"தென்ன மரத்திலே தேளு கடிச்சா
பன மரத்துக்கு வலிக்குமா
புன்ன மரத்திலே ஏறி இறங்கினு
புளியங்காயும் கிடைக்குமா?"

என்ற குறத்தியின் பாட்டு நல்ல பாவத்துடன் பி. லீலாவின் இனிய குரலில் ஒலிக்கிறது.

எல்லோரும் விரும்பிப் பார்க்கக் கூடிய படம் "வணங்காமுடி." யாராவது இது நல்ல படமா என்று கேட்டால் முழுமனத்துடன் ஆமோதிக்க முடியாது. ஆனால், 'படம் சுகப்படவில்லையா?' என்று கேட்டால் அதற்கும் முழு மனத்துடன் ஆமோதிப்பதற்கில்லை. நல்ல நடிகர்கள் நல்லபடியாக நடித்திருக்கும் படம் "வணங்காமுடி" என்று துணிந்து சொல்லலாம்.




அபரிதமான
புஷ்பங்கள்!
லக்மி
டால்கம்
பவுடர்
டாடா ஸ்தாபனம்
லக்மி



12. உற்றகாலத் துண்

உற்ற காலத்தில், இதமான ஆகாரத்தை, அளவோடு புசிக்க வேண்டும் என்பது அனுபவ பூர்வமான பொன் மொழி.

" . . . .யோசிக்கும் வேளையில் பசியாற உண்பதும் . . . ." என்றில்லையோ என்று கேட்கிறீர்களா? ஆம், அதுவும் பொன் சொல்தான். பசியாற உண்ணவேணு மென்பதே சரி. வயிறு புடைக்க உண்ண வேணு மென்றில்லை. பசியாற உண்பதென்றால் என்ன பொருள்? இது ஒவ்வொருவனுடையஜிரண சக்திக்கும், வயிற்றின் அளவுக்கும் தக்கபடி அவனவனும் நிச்சயிக்க வேண்டியது. அவ்வாறே ஒருவனுக்கு இதமான ஆகாரம் வேறொருவனுக்கு இதமல்லாததாகலாம்.

உற்றகாலம் :—பொதுவாகச் சொல்லப் போனால் போஜனத்துக்கான காலத்தை எப்படி நிச்சயிப்பது? உடல் நிலைமை: காலம் என்னும் இரண்டு விஷயங்களுக் கேற்பப் போஜனத்துக்கான காலத்தை நிச்சயித்தல் வேண்டும்.

இரு மலங்களையும் காலையிலேயே கழித்தாகி யிருத்தல் அவசியம்; உள்ளம் தெளிவுற்றிருக்கும் நிலை; இது மிக மிக அவசியமானது. வளி முதலான முத்தோடங்களும் தத்தமது தன்னிலையில் இயங்கிக் கொண்டிருக்கும் நிலை; குடலிலுள்ள வாயு முற்றும் வெளிப்பட்டு, உடல் நீ மிகுதிப் பட்டு இருக்கும் நிலையில், பொறிகள் தூயநிலை பெற்றும் இருத்தல்; புளித்த ஏப்பம் முதலிய மந்தத்தின் குறிகளின்றிப் பசி ஏப்பம் உள்ள நிலை; உடல் தனக்கே இலேசாக உள்ளது போன்ற தோற்றம்; இத்தகைய குறிகளுள்ள நிலையைத்தான், உடல் நிலையைக் கருதிப் போஜனத்துக் கேற்ற காலம் என்பர்.

இனி காலத்தை அதாவது பொழுதை உத்தேசித்து,

" மூன்றுநாள் காரேண் முகூர்த்தங் களின்
முறையே
மூன்றுகுன்னு மந்த நறுமுனவே—
தோன்றுடலுக்
கோக்குமித நோயரமு ரோகமுயிர்க் கந்தாஞ்
செய்
விக்கு மாராய்ந்து விள்" என்றபடி

சூரியன் உதித்த பிறகு மூன்று யாமம் 11¼ நாழி — சூரியன் காலையில் ஆறு மணிக்கு உதிப்பவனாயின் 10½ மணி சுமாருக்கு உண்பது நல்லது. இதுசரீரத்தின் ஆரோக்கிய நிலைக்குப் பொருந்தும்.

சூரியன் உதயமான பிறகு நான்காவது யாமத்திற்குள் அதாவது 15 நாழிகைக்குள்—அல்லது சூரியன் 6 மணிக்கு உதிப்பவனானால் பகல் 12 மணிக்குள் புசிப்பதால் சில ரோகங்கள் தீரவும் உபகாரமாகும்.

ஆறாவது யாமத்தில் உண்பது பற்பல ரோகங்களை யுண்டாக்க ஏதுவாகும். எட்டாவது யாமத்தில் உண்பதோ உயிருக்கே உலை வைக்கும் செயலாகும் எனத் தெளிய வேண்டும்.

காலை போஜனத்தைப் பற்றி, அல்லது ஒரு நேரப் போஜனத்தைப் பற்றி மேற் சொன்னது பொருந்தும். ஆனால் இரண்டு வேளை, மூன்று வேளை என்றும் புசிப்போர் உண்டல்லவா? ஏன்? நான்கு வேளை புசிப்போரும்—கிடைக்குமானால் அதைக் காட்டிலும் அதிக நேரம் புசிப்போரும் உண்டே! இவர்கள் விஷயமாக நம் நாட்டு வைத்திய நூல்கள் சொல்வது என்ன என்ற கேள்வியும் எழலாமே? இதற்கும் விடை யளித்துள்ளார் தமிழ்ச் சித்தர்கள்.

" தன்ம மிரண்டே யூண் தப்பிமுற்காற்
கோள்வினன்
சின்மதலை கனைமுற்றற் சேர்புருவ—
நன்முகூர்த்த
மொன்றுக்கு ளன்குக்கு வோதுமிரண் டுக்கு
ஞன்பர்
நன்றுக்குத் தீயோர் நயந்து."

நம் தரும சாஸ்திரங்கள் வகுத்தது இரண்டே வேளை உண்ணவேணுமென்று.

நல்ல அக்கினி பலம் உள்ளவர், உடல் உழைப்பு உள்ளவர், ஆகவே நல்ல செரிப்புத் தீயுள்ளவர் மூன்று வேளை புசிக்க வேண்டி வரலாம். அவ்வாறாயின் அவர்கள் காலையில் 3¾ நாழிகைக்குள்—அதாவது சூரியன் உதித்த பிறகு 1½ மணி நேரத்துக்குள் முதல் வேளை ஆகாரத்தையும்; 15 நாழிகைக்கு—அதாவது சூரியன் உதித்தபின் ஆறுமணி நேரத்துக்கு இரண்டாவது வேளை; 22½ நாழிகை அல்லது 9 மணி நேரத்துக்கு மூன்றாவது வேளையும் சாப்பிடலாம் என்பது பொருள்.

"உண்பதிரு பொழுதே தொழிய மூன்று பொழுதுண்ணேம்..." என்று தேரையன் சொன்ன பொன் மொழிகளையும் இங்கு சிந்தித்தல் அவசியம்.

பகல் 15 நாழிகைக்கும்—இரவு சூரியன் அஸ்தமனமான பிறகு மூன்றே முக்கால் நாழிகைக்கும் என இரண்டு பொழுது உண்பது தான் நலம்.

உடல் உழைப்புள்ளவர் காலையில் சூரியன் உதித்த மூன்றே முக்கால் நாழிகைக்குள்ளும் பிற்பகல் இருபத்திரண்டரை நாழிகைக்கும் ஏற்கும் அதிகப்படியான உணவு நொய்மைத் தன்மையுள்ள ஆகாரங்களாக [எளிதில் சீரணமாகி விடும் இயல்பு பெற்ற கஞ்சி போன்றவை] ஏற்பது வழக்கம். ஒரு உதாரணம் சொல்லி விடுகிறேன்.

"வெள்ளி மொளச்சு போச்சே!" என்று மிக மிகச் சுருசுருப்புடன் வயலுக்குச் செல்வான் ஊதுவான் குப்பன் என்னும் உழுதுண்டு வாழும் மானி. கேணியிலிருந்து ஏற்றம் பிடித்துத் தண்ணீரை இறைப்பான் வயலுக்கு. சூரியன் உதயமாகும் நேரத்துக்குள் "ஒரு காலே அரைக்கால் காணி" நிலத்துக்கு வரப்பு வழியத் தண்ணீர் இறைத்துப் பாய்ச்சிக் கட்டி முடிப்பான். ஏற்றத்தின் மேலே நின்று மிதிப்பவன் 'மீம்மடை புரளுது அண்ணே!' என்பான். ஊதுவான் குப்பன் ஏற்றச்சாலைத் தல கடையில் சேர்த்து இறைப்பை நிறுத்திக் கேணியின் கரையில் ஏறுவான். காலைப் பொழுதின் நீராகாரத்தை மண் கலயத்தில் ஆக்கி, கண்டாங்கியுடன் ஒரு மண் சானகியால் மூடி, சும்மாடு கோலிய தலையின்மேல் அதை வைத்துக் கொண்டு, இடுப்பில் கடைக்குட்டி 'வீர'னையும் சுமந்து கொண்டு வலக் கையை வீசி வீசிக் கவலையற்ற மனோ நிலையைத் தெளிவுபடுத்தும் களிநடை போட்டுக் கொண்டு தூரத்தில் வரும் தன் மனைவி அஞ்சலையைக் காண்பான். முகத்தில் ஒரு புன்முறுவல் அரும்பும். இனைற்று மேட்டின் மேலுள்ள வேலஞ் செடியிலிருந்து பல்குச்சி யொடித்துவர ஒரு சிம்ம நடை போடுவான் குப்பன்.

ஊதுவான் குப்பன் இந்நீராகாரத்தை அருந்தும் நேர்த்தியும், அந்தத் தம்பதிகள் சிரிப்பும் கேலியுமாக....அட அட! அந்த மன நிறைவும்...கண் கொள்ளாக் காட்சி! அன்றைய தினத்தின் அலுவல் திட்டம் இருவருக்குள் அப்போதுதான் நிறுவப்படும். இவர்கள் வாழ்க்கையில்தான் என்ன ஆனந்தம்! என்ன நிறைவு!

உச்சி வேளைக்கு வீடு சென்று உண்பான் நமது ஊதுவான் குப்பன். சிறிது நேரம் ஓய்வு. பிறகு சற்று நேரம் வீட்டிலேயே ஏதோ அதிக அலுப்பில்லாத வேலை. பிறகு சிறிது கஞ்சி குடித்து விட்டு வயற் காட்டில் வேலைக்கு வந்து விடுவான்.

அஸ்தமனமாகும் நேரம். காலி மாடுகளுடன் வீடு திரும்பி மாடுகளைக் கட்டி வைக்கோல் போட்டுச் சற்றைக்கெல்லாம் கறவை மாடுகளைக் கறந்து விட்டுக் குளிக்கப் போவான். குளி கழிந்து—சற்றைக் கெல்லாம், சூரியாஸ்தமனத்துக்குப் பின் 3¾ நாழிகைக்குள் இரண்டாவது ஊண்.

மேற்சொன்ன வகையில் வைத்திய சாஸ்திரத்தை வாசித்தவனல்ல ஊதுவான் குப்பன். ஆனால் அவ்விதிகளை நடைமுறையில் அனுசரித்து வந்தான். தலைமுறை தலைமுறையாக அனுசரித்து வந்த பழக்கம்.

"ஒன்றே போகியுண்டவன் யோகியாம்;
நன்றதா யிரண்டுண்டவன் போகியாம்
துன்ற மூன்று பொழுதுண்டோன் ரோகியாம்;
அன்றி மேலுண்டோ ருய்பல ரோகமே."

'உற்றகாலத் துண்ணல்' என்ற விஷயத்தை இம்மட்டோடு நிறுத்திக் கொண்டு, இதமானதை அளவோடு உண்ணல் என்ற விஷயத்தைக்கற்கலாம்.

* * *

"கல்வியில் நாட்டு வைத்தியம் அத்தியாயம் 9,—பக்கம் 48 வெளியான தேதி 7-4-57ல் பக்பொடி செய்யும் முறையில் ஒரு பிழை தோன்றிவிட்டது" என்று சேலம் வாழ் கல்வி வாசகரொருவர் நமக்கு ஒரு சீட்டை கொடுத்துள்ளார்.

"வெங்காரம் முதலிய ஐந்து மருந்துகளை முறையே ஒவ்வொரு தோலா என்று நான்கு '1' மட்டும் எழுதியுள்ளது ஏன்?"

ஐயா! மன்னிக்கவும். மற்றுமோர் "1"ஐச் சேர்த்துக் கொள்ளவும். நன்றி. (தொடரும்)

மாதர்குல திலகங்கள்



நல்ல கல்விக்கு நாட்டில் பெரிய பற்றாக்குறை ஏற்பட்டிருப்பதைத் தேசத் தலைவர்கள் அனைவரும் ஒப்புக் கொள்கிறார்கள். வெளி நாடுகளிலிருந்து கப்பல்களில் கொண்டு வந்து இறக்குமதி செய்யும் பொருள் அல்ல கல்வி. கல்வியாளர்களின் சேவையினாலேயே நாட்டில் கல்விச் செல்வத்தை வளர்க்க முடியும்; கல்விப் பற்றாக்குறையைப் போக்க முடியும். கல்விப் பற்றாக் குறைக்கு வேறு பெயர்தான் அறியாமை. அறியாமை இருளைப் போக்குவதில் சென்னை ராஜ்யத்தில் ஸ்ரீமதி ஜி. பார்த்தசாரதி அவர்கள் படாடோபம் இன்றி, அடக்கமாக அருஞ்சேவை செய்து வருவது மிகச் சிலரே அறிந்திருக்க முடியும்.

கல்வியாளர் வட்டாரத்தில் ஸ்ரீமதி ஜி. பி. அவர்கள் தனி மதிப்புப் பெற்றவர். சென்னை ராஜதானிக் கல்லூரியில் ஆங்கிலப் பகுதியில் பேராசிரியர் பதவி வகித்து வருகிறார். சாதாரணமாக இந்தக் கல்லூரியில் ஸ்திரீகள் யாருக்கும் கிடைக்காத ஒரு பெருமையாக, ஆங்கிலப் பேராசிரியர்களில் 'பிரதமர் பதவி'யும் இவரே வகித்து வருகிறார். ஸ்ரீமதி ஜி. பி. மேற்குக் கரைப் பகுதியில் கேரளத்தில் குடியேறித் தொன்று தொட்டு வசித்து வரும் பார்ஸி வகுப்பைச் சேர்ந்தவர்.

இதே ராஜதானிக் கல்லூரியில் ஸ்ரீமதி ஜி.பி. அவர்கள் கல்வி பயின்றார். சென்னை சர்வகலாசாலையில் பட்டப் பரீட்சையில் ராஜதானியிலேயே முதலாவதாகத் தேறிய பெண்மணி என்ற கீர்த்தியையும் பெற்றார். உயர் கல்விக்கு இங்கிலாந்து நாட்டுக்குச் சென்று அங்கு பிரசித்தி பெற்று விளங்கும் ஆக்ஸ்போர்ட் சர்வ கலாசாலையில் இலக்கிய உயர்வகுப்பிலும் முதலாவதாகத் தேர்வுபெற்றார். ஆசியா கண்டத்தைச் சேர்ந்த யாரும் அதுவரை ஆங்கில இலக்கியத்தில் முதலாவதாகத் தேர்வு பெற்றதில்லை. அப்பேர்ப்பட்ட ஒரு புகழைத்தான் ஸ்ரீமதி ஜி .பி. ஆசிய மக்களுக்குத் தேடித் தந்தார்.

இங்கிலாந்தில் படித்துக் கொண்டிருக்கும் போதுதான், ஸ்ரீமதி ஜி. பி. அவர்களின் 'மாணவி' வாழ்க்கை 'மண வாழ்க்கையாக' உருவாயிற்று. சென்னை ஹிந்துப் பத்திரிகையின் சிறந்த உதவியாசிரியரும், காலஞ்சென்ற இந்திய சர்க்கார் பாதுகாப்பு மந்திரி ஸ்ரீ என். கோபாலசாமி அய்யங்கார் அவர்களின் குமாரருமாகிய ஸ்ரீ ஜி. பார்த்தசாரதி அவர்களை இங்கிலாந்தில் சந்தித்தார். அந்தச் சந்திப்பு இல்லற வாழ்க்கையாகப் பரிணமிக்கலாயிற்று. இந்தக் காதல் கல்யாணத்துக்கு இரு பக்கங்களிலும் சாதி மதம் பற்றிய எதிர்ப்புகள் இருந்தன. இந்த எதிர்ப்புகளையெல்லாம் கடந்து இருவரும் மணம் புரிந்து கொண்டனர். ஸ்ரீமதி ஜி. பி. அவர்களுடைய கணவர் இந்தோனேஷியாவில் நம் பாரத நாட்டின் ஸ்தானிகராகப் பதவி வகித்து வருகிறார். ஸ்ரீமதி ஜி. பி. அவர்கள் தம்முடைய திருமணத்துக்குப் பிறகு சிறிது காலம் சென்னை அகில இந்திய ரேடியோ நிலையத்தில் கல்வி சம்பந்தமான நிகழ்ச்சிகளுக்கு அதிகாரியாகப் பணியாற்றி வந்தார். பிறகு புதிதாகத்தோற்றுவிக்கப்பட்ட சென்னை எதிராஜ் பெண்கள் கல்லூரியின் 'பிரின்ஸிபல்' பதவி ஏற்று அந்தக் கல்லூரி திறம்பட இயங்குவதற்குச் சில அரிய திட்டங்களை வகுத்துத் தந்தார். சென்னையின் பழமை மிக்க மேரி ராணிக் கல்லூரியில் ஆங்கில விரிவுரையாளராகவும் சேவை செய்து வந்திருக்கிறார்.

ஸ்ரீமதி ஜி. பி. அவர்கள் சிறந்ததோர் கல்வியாளர் மட்டுமல்ல, உயர்ந்த பண்பாடுகள் மிக்க குடும்பத் தலைவியாகவும் விளங்கி வசித்து, பார்ஸி இரு சமூகத்தினராலும் கொண்டாடப்படும் சிறந்த மாதர் குல திலகமாக விளங்கி வருகிறார்கள். தமது செல்வப் புதல்வன் "அசோக்"கின் கல்வி முன்னேற்றத்தில்கூடத் தமது இலட்சியங்களைக் கண்டிப்புடன் கடைப்பிடித்து வருகிறார்.


ஸ்ரீமதி ஜி. பி. அவர்கள் பெற்றுள்ள கல்விச் செல்வம் நல்லதோர் தீபத்துக்கு ஒப்பாகும். நாட்டின் அறியாமை இருளைப் போக்குவதில் இவ்வித தீபங்களே மிகத் தேவை.


திருவுடை அம்மனுக்குத் திருக்கவசம்

சென்ற ஞாயிற்றுக்கிழமை சித்திரா பௌர்ணமி அன்று, மாலை, சென்னைக்கு அடுத்த திருவொற்றியூர் ஆலயத்தில் குடிகொண்டுள்ள வடிவுடை அம்மனுக்குப் பக்தர் ஒருவரால் ஐயாயிரம் ரூபாய் மதிப்புள்ள பொலிவுமிகு வெள்ளிக் கவசம் சாத்தப் பெற்றது. இந்தத் திருப்பணி வைபவத்துக்கு ராஜாஜி, திரு பி. டி. ராஜன், 'ஹிந்து' பத்திரிகை அதிபர் திரு கே. சீனிவாசன் முதலியவர்கள் வந்திருந்து கைங்கரியத்தைச் சிறப்பித்தனர். சந்நிதியில் கூடியிருந்த பக்தர்களிடையே வடிவுடை அன்னையின் அருள் சக்தியை எடுத்துரைத்துத் திருப்புகழ் மணி ஸ்ரீ டி. எம். கிருஷ்ணசாமி அய்யர் சொற்பொழிவாற்றினார். "அதர்மத்தினின்று தர்மத்தைப் பாதுகாக்கும் கவசம் தரித்துவிட்ட வடிவுடை நாயகி நமக்குத் துணை நிற்பாள்" என்று திருப்புகழ் மணி கூறி, மெய் சிலிர்க்கச் செய்தார். கவசச் சாத்துவிழாக் காட்சிகளையும் கவசத்தை நிர்மாணித்த ஸ்தபதி கௌரிசங்கர் அவர்களையும் படத்தில் காணலாம்.

1. எத்தனையோ மகான்களுக்கு இருப்பிடமும் அடைக்கலமும் அளித்த புண்ணிய ஸ்தலமான திருவொற்றியூரில் இருக்கும் திருவுடையம்மனின் திருக்கோயில். 2. வெள்ளிக் கவசச் சாத்துபடியின் போது திரளாக வந்து குழுமியிருந்த திருக் கூட்டம். கூட்டத்தில் ராஜாஜி அவர்கள் நடுநாயகமாக நின்று கொண்டிருப்பதைக் கவனியுங்கள். 3. திருப்புகழ் மணி ஸ்ரீ டி. எம். கிருஷ்ணசாமி அய்யர் உணர்ச்சி வசமாகி, பக்திப் பெருக்கோடு சொற்பொழிவாற்றுகிறார். அவர் பேச்சை மெய்மறந்து கேட்டுக் கொண்டிருக்கும் கூட்டத்தின் ஒரு பகுதி. 4. பக்திக் கலை சொட்டத் திருக் கவசம் நிர்மாணித்த ஸ்தபதி திரு கௌரி சங்கரும், வெள்ளித் திருக்கவசங்களும்.




வெற்றிகரமாக நடைபெறுகிறது
சென்னை
சித்ரா
கிரௌன்
காமதேனு
சயானி
மற்றும்
தென்னாடெங்கும்
சரவணபவா
யூனிட்டியின்
வணங்காமுடி
டைரக்ஷன் :- P. புல்லையா, B.A.
ஸ்டுடியோ
நெப்ட்யூன்



அன்புக்குரிய சுஜாதா,

"பம்பாயிலிருந்து ஒரு பெண் தான் கல்லூரியில் படிப்பதாகவும், விடுமுறை தினங்களை எப்படிக் கழிப்ப தென்று தெரியவில்லை, பொழுது போகவில்லை என்னும் எழுதியிருக்கிறாள். அத்துடன் "எங்களைப் போன்ற மாணவிகளுக்கு ஒரு கடிதம் எழுதக்கூடாதா' என்றும் குறிப்பிட்டிருக்கிறாள். உனக்கு எழுதும் பதில் மாணவிகளுக்காக இருக்கும் என்று நம்புகிறேன்.

"விடுமுறை நாட்கள் ஆனந்தமாகக் கழிக்கவேண்டிய தினங்கள்; காலை வேளையில் அவசரம் அவசரமாகச் சாப்பிட்டு விட்டு, நாள் முழுதும் படித்து இரவு முழுதும் எழுதிக் குவித்து, எப்பொழுதும் அவசரம் அவசரமாக நடத்தும் தினங்களுக்கு ஒரு மாறுதல் அவசியம். சாவகாசமாய்க் குளித்துச் சாப்பிடுவதே ஒரு மன நிம்மதி. விடுமுறை நாட்களில் நிறையச் செலவு செய்து மலைப் பிரதேசங்களுக்குப் போனால்தான் உண்மை ஆனந்தம் என்பதில்லை; காரில் சுற்றினால்தான் சந்தோஷம் என்பதில்லை.

அன்பான உறவினர்கள், சிநேகிதர்கள் வீட்டுக்கு மாறுதலுக்காகப் போகலாம். ஆனால் இவைகளெல்லாம் எல்லோருக்குமே சாத்தியம் என்றில்லை. வசதி மிகப் பெற்றவர்களுக்குத்தான் கோடைகாலத்தில் மலைப் பிரதேசம் போக முடியும்.

வீட்டில் தாயிடமும், மற்றவர்களிடமும் கற்றுக் கொள்ளும் படிப்புகள் அநேகம் இருக்கின்றன. அந்த அறிவுகளை, அனுபவங்களை எவ்வளவு பொருள் செலவு செய்தாலும் எந்தக் கல்லூரியில் படித்தாலும் பெற முடியாது. அதற்கு ஏற்ற சந்தர்ப்பம் விடுமுறை தினங்கள்தாம்.

ஒரு சிநேகிதி வீட்டுக்குப் போயிருந்தேன். அவருக்குக் கல்லூரியில் படிக்கும் பெண்கள் இருவர் இருக்கிறார்கள். அவர்கள் தலையைப் பரட்டையாக விரித்துக் கொண்டு அடித் தலையில் ஒரு ரிப்பனைக் கட்டிக் கொண்டிருந்தார்கள். ஒரு வாயில் புடவையைச் 'சுற்றிக் கொண்டு உற்சாகமின்றிப் படுத்துக் கொண்டிருந்தார்கள். 'உடம்பு அசௌக்கியமா? ஏன் இப்படி இருக்கிறீர்கள்?' என்று கேட்டேன். 'கல்லூரி விடுமுறை. அதனால் பொழுது போகாமல் மிகவும் கஷ்டப்படுகிறோம்' என்று என் சிநேகிதியின் பெண் பெருமையாகச் சொன்னாள். "மாமி, எங்களுக்கு 'போர்' அடிக்கிறது. பொழுதைப் பிடித்துத் தள்ளுகிறோம்" என்றாள் இன்னொருத்தி. எனக்குச் சிரிப்புத்தான் வந்தது. மாணவிகள் 'போர்' அடிக்கிறது, 'டல்'லாக இருக்கிறது என்று சொல்லும் வார்த்தைகளை நான் விரும்பவில்லை.

என் மதிப்புக்கும், அன்புக்கும் உரிய சகோதரியின் பெண்கள் குடும்ப வேலைகளில் கை தேர்ந்தவர்களாக இருக்கிறார்கள். யார் வந்தாலும் புன்சிரிப்புடன் வரவேற்கும் முகம். வீட்டுக்குத் தேவையான சாமான்களைத் தாயுடன் ஒற்றுமையாகப் பார்ப்பது, பாது காப்பது, சமையலுக்கு ஏற்பாடு செய்வது, வீட்டுக் கணக்கு எழுதுவது எல்லாம் அநாயாசமாகச் செய்வதுடன் சங்கீதம், படிப்பு எல்லாவற்றிலும் வல்லவர்களாக இருக்கிறார்கள். அந்தப் பெண்களைப் பார்க்கும் போது எனக்குச் சந்தோஷமாக இருக்கிறது.

அன்னமிடும் கை பெண்களுடையது. மிகக் குறைந்த செலவில் நாக்குக்கு ருசியாகவும், போஷணைக்குத் தகுதியாகவும் சமையல் கற்றுக் கொள்ள விடுமுறை தினங்கள் உபயோகப்பட வேண்டும். தையல் வேலையில் தேர்ச்சி பெற்றால் கூலி, துணி இரண்டுமே லாபம். இன்னும் தங்கை தம்பிக்குத் தேவையானதைச் செய்யவும், புதிய மொழிகள் கற்கவும், சங்கீதம் பயிலவும் இப்படி அநேக பொழுதுபோக்குகள் இருக்கின்றன.


தினந்தோறும் நாம் புதியதாக ஏதாவது ஒன்று கற்றுக் கொண்டால் அதிலுள்ள ஆனந்தம்போல் வேறு எதிலும் இருப்பதில்லை. முக்கியமாக, வேலைகளைச் செய்வதே ஒரு ஆனந்தமாகப் பழகிக் கொள்ள வேண்டும். வேலை செய்வது கஷ்டம், கேவலம் என்ற மனப்பான்மை சின்னப் பெண்களுக்கு இருக்கக் கூடாது. இதயத்தில் சுத்தமான, பயமற்ற, கபடமற்ற, குற்றமற்ற, பகைமையற்ற எண்ணங்களை நிறுத்திக் கொண்டால் உடம்பில் தெய்வத்தன்மை விளங்கும் என்று ஔவையார் பாடியிருக்கிறார்.

"மாசற்ற கொள்கை மனத்தமைந்தக்கால்
ஈசனைக் காட்டும் உடம்பு!"

என்று அருளியிருக்கிறார் தமிழ் மூதாட்டி.

மாணவிகள் அலுப்பாக இருப்பதாகச் சொல்லி, சோம்பேறித்தனத்தினால் விடுமுறை நாட்களைக் கழிக்க வேண்டாம்; 'கற்றது கைம் மண் அளவு; கல்லாதது உலகளவு' என்ற முதுமொழியை நினைவு படுத்தி மாணவிகள் பல அரிய விஷயங்களைக் கற்றுத் தேர்வதே சாலச் சிறந்தது.

இப்படிக்கு,
பூமாதேவி



கற்பனை... சரியல்ல

கடிகாரத்தில் பதிக்கப்பட்டிருக்கும் ஜுவெல்கள் அதிக விலையுள்ளவையல்ல என்றும் அவை உயர்ந்த ரக ரத்தினங்களுமல்ல என்பது உங்களுக்குத் தெரியுமா? இதிலிருந்து நீங்கள் அறிந்துகொள்வது என்னவென்றால் கடிகாரத்தின் பெருமானத்தை, முக்கியமாக அதிலுள்ள ஜுவெல்களால் மாத்திரம் நிர்ணயிக்கக் கூடாது. கடிகாரத்திற்கு உபயோகப்படுத்தப்படும் ஜுவெல்கள் செயற்கை கற்களே. அவை தொழிற்சாலையில் தயாரானவை. அவைகளின் ஒவ்வொன்றின் விலை சில நயா பைசாக்களே. ஆனாலும் அவைகள் உயர்ந்த கடிகாரத்தில் இடம் பெற்றுவிட்டால் அவைகளின் மதிப்பு விலை மதிக்க முடியாததாக ஆகிவிடுகிறது. குறிப்பாக ஸ்விட்ஸர்லாந்தில் தயாரிக்கப்பட்ட ஒவ்வொரு ஜுவெல்ட் லீவர் கடிகாரத்தைக் குறிப்பிடுகிறோம்.

கடிகாரத்தில் உள்ள ஜுவெல்களின் வேலை என்னவென்றால் அதிலுள்ள அசையும் பாகங்கள் ஒன்றோடொன்று உராய்ந்து தேய்ந்து போகாமல் பாதுகாப்பதேயாகும் வெகுநாளைக்கு அதிகமாக நீடித்து சரியான மணி காட்டுவதற்கு ஜுவெல்கள் செயற்கை. பொருத்தத்தால் இயங்கும் முக்கியமான கேந்திர ஸ்தானங்களில் அணு பிசகாமல் அமைக்கப்படுகின்றன.

நீங்கள் வாங்கும் கடிகாரத்தின் தரம் அதிலுள்ள ஜுவெல்களை மட்டும் பொருத்ததல்ல. அந்த நம்பகமான வியாபாரியிடமிருந்தும் இதை நீங்கள் அறியலாம். உங்கள் கடிகார வியாபாரியின் அனுபவம் உங்களுக்கு ஆதரவு அளிக்கிறது.

ஜுவெல்கள் பொருத்தப்பட்ட ஸ்விஸ் லீவர் கடிகாரம் ஒரு அவசியமான தேவைப் பொருளேயன்றி ஆடம்பரத்திற்கல்ல.

ஸ்விட்ஸர்லாந்து கடிகார தயாரிப்பாளர்கள்

FH-21-TAM

மாலவல்லியின் தியாகம்



அத்தியாயம் 18


எனக்கு ஆபத்தா?

பரம நாஸ்திகவாதம் பேசும் பூதுகன் பரமேசுவரனைக் குறித்து இவ்வளவு பக்தி பரவசமாகப் பாடுவானென்று அவர் நினைக்கவேயில்லை. எத்தகைய இனிய குரல்! அவன் கைகள் எவ்வளவு லாவகமாக வீணையை மீட்டுகின்றன. அவர் உள்ளம் உருகி ரோமாஞ்சனம் ஏற்பட்டது. கரங்களைக் குவித்துக் கண்களை மூடிக் கொண்டு நின்றார். தேனார்மொழியாளுக்குக் கூடச் சிறிது ஆச்சரியமாகத் தானிருந்தது. ஆம்! அவளுக்கு இரண்டு விதத்தில் ஆச்சரியம். நாஸ்திகவாதம் பேசும் அவன் பரமேசுவரனைக் குறித்து உருகிப் பாடுவது மட்டும் ஆச்சர்யமல்ல; அதைவிட ஆச்சர்யம் அவன் இவ்வளவு இனிய குரலும் உயர்ந்த இசை ஞானமும் பெற்றவன் என்பதை அறிந்து கொண்டதுதான் ஆச்சரியம். அதிலும் அவன் மகேந்திர பல்லவன் கண்டு பிடித்த பரிவாதினி என்னும் வீணையை மீட்டுவதிலும் தேர்ச்சி பெற்றவனாக இருப்பது அவளுக்கு மிகவும் வியப்பைக் கொடுத்தது. மகேந்திர வர்மனுக்குப் பின் அத்தகைய யாழைக் கரங்களால் தொடத் தேனார்மொழி



கி.ரா.கோபாலன்





யாள் ஒருத்திக்குத்தான் யோக்கியதை உண்டு என்பதை உலகம் அறியும். அப்படியிருக்கப் பரிவாதினி யென்னும் யாழை வாசிப்பதில் இன்னொருவரும் தேர்ச்சி : பெற்றிருக்கிறார் என்பதை அவன் அறிந்தபோது அவளுக்குச் சிறிது பொறாமையும் கலக்கமும்தான் ஏற்பட்டன. நிச்சயம் அந்த யாழை வாசிப்பவன் ஒரு பெண்ணாக இருந்தால் அப்பொழுது அந்த இடத்திலேயே அந்தப் பெண்ணை அடித்துக் கொன்றிருப்பாள். ஆனால் அவன் ஒரு ஆண்மகன். அதோடு அவன் யாரிடம் உள்ளத்தைப் பறிகொடுத்து மயங்கி நின்றானோ அந்த மனிதரல்லவா யாழையெடுத்து மீட்டுகிறார்? அவளுக்கு ஏற்பட்ட பொறாமையைவிட ஆனந்தந்தான் அப்பொழுது அதிகமாக இருந்தது. யாழ் மீட்டிக் கொண்டே பாடும் பூதுகனின் அழகுருவில் மயங்கி அவனையே ஆர்வத்தோடு பார்த்துக் கொண்டு தன்னை மறந்து நின்றாள் தேனார்மொழியாள்.

ஈ அவன் பாட்டை முடித்து விட்டான். யாழை மெதுவாகக் கீழே வைத்து விட்டு அகத்தீசனடிகளின் முகத்தை யும், தேனர்மொழியாளின் முகத்தை யும் பார்த்தான்.

பூதுகன் தன் பாட்டை முடித்துக் கொண்டாலும் அகத்தீசனடியார் காதில் 'அன்பே சிவம், அருளே சிவம்' என்ற இசையோடு குழைந்த சொற்கள் சில விநாடிகள் அப்படியே ரீங்காரம் செய்துகொண்டுதா னிருந்திருக்கவேண் டும். அவர் குவித்த கரத்துடனேயே கண்களை மூடியவண்ணம் சில விநாடிகள் இருந்து விட்டுச் சட்டென்று ஏதோ கனவு உலகத்திலிருந்து விழித்தவர் போல் கண்களைத் திறந்து பூதுகனை ஆவலோடு பார்த்தார். பிறகு "அப சாரம், அபசாரம், எம்பெருமானின் பெருமையை இவ்வளவு பரவசத்தோடு பாடும் ஒரு மகா புருஷரை நான் பரம நாஸ்திகன் என்று நினைத்து விட்டது பெரிய அபசாரம்" என்றார்.

பூதுகன் சிரித்துக் கொண்டே எழுந்து அங்கிருந்த ஆசனத்தில் அமர்ந்து, "என்னை நாஸ்திகனென்று நினைத்ததில் அபசாரம் எதுவுமே இல்லை. நான் நாஸ் திகன்தான். நான் பாடியது சிவபெருமா னிடம் எனக்கேற்பட்ட பரம பக்தியினா லல்ல. எனக்கும் இசை ஞானமுண்டு என்பதைக் காட்டுவதற்காகத் தான். இசைக்கே இயற்கையான மனத்தை உருக்கும் வன்மையுண்டு. அதிலும் சில மனிதர்களுக்குப் பிடித்த பாட்டைப் பாடிவிட்டால் நிச்சயம் அந்த மனிதர் களின் மனம் இளகும். சிவனைப் பற்றிப் பாடினால் உங்கள் மனம் உருகுமென்று எண்ணிப் பாடினேன். என்னுடைய பாட்டைக் கேட்டு நீங்கள் பக்தி பரவச ராகி விட்டீர்கள். நீங்கள் நினைப்பது போல் நான் பக்திச் சுழலில் சிக்கித் தடு மாறவில்லை. இசைச் சுழலில் தான் சுற்றிக் கொண்டிருந்தேன்" என்றான்.

"உங்கள் கொள்கை எப்படிப்பட்ட தாயினும் இருக்கலாம். ஆனால் சிவசிவ என்ற இனிய வாய்ச்சொல் மனத்தை, பக்தி பரவசத்துள் ஆழ்த்திவிட்டது" என்றார் அகத்தீசனடிகள்.

பூதுகன் ஏளனமாகச் சிரித்தான். "என் கொள்கை இதுதான். எல்லா சமயமும் அன்பை வளர்க்கப் பாடு படுகிறது. நானும் அந்த அன்பைத் தான் வளர்க்கப் பாடுபடுகிறேன். எப்படி யிருந்தாலென்ன? அன்பே சிவ மானால் என்னிடம் நீங்கள் அன்பு செலுத்த முயற்சி செய்யுங்கள். துவே ஷத்தைக் களையப் பாடுபடுங்கள். துவே ஷத்தைக் களைந்தெறிந்து அன்பை உலகில் நிலை நிறுத்திவிட்டால் இவ்வுல கமே சுவர்க்கமாகிவிடும்..." என்றான்.

"அன்பு வழியையே கைக்கொள்ள வேண்டும் என்பதுதான் சிறந்தது என்று நான் உணர்கிறேன். நீங்கள் நாஸ்திகவாதியா யிருங்கள். உங்கள் கொள்கைகளைப்பரப்பப் பாடுபடுங்கள். ஆனால் குழப்பத்தை உண்டாக்கி அரசைக் கவிழ்க்க முயற்சி செய்யாதீர் கள். இதுதான் மனத்துக்குப் பிடிக்காம லிருக்கிறது" என்றார் அவர்.

"தாங்கள் இத்தகைய பல்லவ சாம் ராஜ்யத்தை அழிக்கச் சதி செய்யும் கூட்டத்தில் ஒருவனாக என்னையும் நினைத்து விட்டதுதான் பரிதாபம். எங்கள் நாட்டை ஆண்ட சோழ மன் னர்கள் யாவரும் சைவ சமயத்தைச் சேர்ந்தவர்கள். பிற மதத்தினரிடம் துவேஷ மனப்பான்மை யில்லாதவர் கள். இதை நான் உங்களுக்குச் சொல்ல வேண்டாம். கடந்த கால வரலாறுகள் உங்களுக்குச் சொல்லும். அத்தகைய



பெரிய வம்சம் இன்று சிலருடைய சாம்ராஜ்ய ஆசையால் உருக்குலைந்து போயிருப்பதைச் சோழ நாட்டில் பிறந்தவன் என்று சொல்லிக் கொள்ளும் யாராலும் சகித்துக் கொண்டிருக்க முடியாது. சாம்ராஜ்ய ஆசையின் காரணமாகத் தெற்கிலிருந்து படையெடுத்து வரும் பாண்டியர்களும், வடக்கிலிருந்து படை யெடுத்து வரும் பல்லவர்களும் ஒருவரோடு ஒருவர் மோதிப் போர்புரியும் குருக்ஷேத்திரம் போலாகி விட்டது. சோழவள நாடு. பெரிய பண்டாரமும் சிறைக் கோட்டமும் இருக்கும் குடந்தைப் பதியில் சிறைக் கோட்டம் தான் நிறைந்திருக்கிறது. பொக்கிஷம் துடைத்திருக்கிறது. பஞ்சம் 'இதோ வந்துவிட்டேன்; இதோ வந்துவிட்டேன்' என்று பயமுறுத்திக் கொண்டிருக்கிறது. பல்லவர்க்கு அடங்கித் தஞ்சையை ஆளும் முத்தரையர்களுக்குப் பதவியைக் காத்துக் கொள்ளப் போதிருக்கிறதே தவிர மக்கள் துயரைப் போக்க மனத்தைச் செலுத்த முடியாமல் இருக்கிறது. இந்தச் சிற்றரசர்களுக்குள்ளும் எவ்வளவோ பேதம். ஒருவர் பௌத்தர், ஒருவர் சமணர், ஒருவர் சைவர் - இப்படி. இந்த அரசர்களைத் தங்கள் வசப்படுத்திக் கொண்டு மதக்கொள்கைகளைப் பிரபலமாக்க மதவாதிகள் விரும்புகின்றனரே தவிர மக்களை நேரடியாக வந்து தாக்கும் வறுமையையும், பிணியையும் சிந்திப்பவர்களாக இல்லை. இந்த நிலையில் இங்கு ஒரு ஸ்திரமான அரசு இல்லையே என்று மக்கள் ஏங்குவதைத் தவிர வேறு வழி என்ன இருக்கிறது?'' என்றான் பூதுகன்.



''நீங்கள் சொல்வது யாவும் எனக்குப் புரிந்தது. ஆனால் மறுபடியும் சோழ வம்ச அரசத்தினர் ஆட்சிபுரிய வேண்டுமென்று நீங்கள் விரும்புகிறீர்கள். இல்லையா?'' என்றார் அகத்தீசனடிகள்.

'' நான் விரும்புவதுமட்டுமில்லை. மக்களின் விருப்பமும் அப்படித்தான். பழையாறை நகரை யாண்ட சோழ வம்சத்தினனாகிய சிற்றரசன் குமாராங்குஜனைத் தஞ்சையை ஆளும் முத்தரையரின் ஏவலாட்கள் வஞ்சனையாகக் கொன்றிருக்கின்றனர். வீரத்திலும், தர்மத்திலும், ஒழுக்கத்திலும் சிறந்த அம்மன்னன் மக்களின் மதிப்பைப் பெற்றிருக்கிறான் என்ற பொறாமையின் காரணமாகத் தான் தஞ்சை முத்தரையரும் மற்றும் சில சிற்றரசர்களும் வஞ்சனையாகக் கொன்றிருக்கிறார்கள் என்பது உறுதி. இப்பொழுது பழையாறை நகரில் அவனுடைய விதவைக் கோலம் பூண்ட மனைவி கங்கமாதேவி சோழர் குலமணியாக விளங்கும் தன் ஒரே புதல்வனை வளர்த்துக் கொண்டிருக்கிறாள். தங்கள் அரசராகிய குமாராங்குஜரிடம் வைத்த பெரு மதிப்பாலும் பக்தியாலும் பழையாறை மக்களும் அரசாங்கப் பிரதானிகளும் அக்குழந்தையைப் பத்திரமாகக் காப்பாற்றி வருகின்றனர். பெருநற்கிள்ளி, கரிகாலன், செங்கணான், நல்லடி போன்ற சோழ அரசர்களின் குலத்தில் உதித்த அவ்வீரக் குழந்தையையும் வஞ்சனையால் மாய்த்துவிட வேண்டும் என்று முடிவு செய்திருக்கின்றனர், சில துரோகிகள். இந்நிலையில் சோழ நாட்டின் சாதாரணப் பிரஜையாக என்னை நீங்கள் கருதிக் கொண்டு என் விருப்பம் எப்படிப்பட்டதாக இருக்கும் என்பதையும் நீங்கள் சிந்திக்கத் தெரிந்து கொள்ள வேண்டியதுதான். நீங்கள் ஆழ்ந்த சிவ பக்தி யுள்ளவர்கள். சமயப் பூசலை ஏற்படுத்த வேண்டும் என்பதற்காக உங்களிடம் நான் இதைச் சொல்லவில்லை, உங்கள் சமயப் பெரியாராகிய திருநாவுக்கரசு அடிகள் பழையாறை வடதளியில் எழுந்தருளியிருக்கும் இறைவனைத் தரிசிக்கச்சென்ற சமயம் தஞ்சைப் பேரரசன் முத்தரையரின் ஆதரவு பெற்ற சமணசமயத்தினர் சிலர் பழையாறை நகரில் அத்துமீறிப் பிரவேசித்து அத்திருக் கோயிலிலிருந்த சிவலிங்கத்தைப் பெயர்த்துக் கொண்டு மறைந்து விட்டனர். வலிமையுடைய தஞ்சை மன்னனின் ஆதரவு இருக்கிறதென்று அச்சமயம் இக்கொடுமையை அறிந்த திருநாவுக்கரசர் பழையாறையை ஆண்ட குமாராங்குஜனிடம் முறையிடவே, அம்மன்னன் சமணர்களைத் துரத்திச் சிவலிங்கத்தை மீட்டுத் திருநாவுக்கரசு அடிகள் மனத்தையும் மகிழ்வித்தான். இத்தகைய சைவப் பேரன்பு கொண்ட அரச பரம்பரையினரின் ஆட்சி நிலவ வேண்டுமென்று என்னைப் போன்ற நாஸ்திகன்கூட விரும்பினால் நீங்கள் மகிழ்ச்சியல்லவா

அவள் அழகில் வெற்றி இருக்கிறது **அவள் அழகில் ஒரு இரகசியம் இருக்கிறது**

"நான் வத்னியை உபயோகிக்கிறேன்"
என்று மதுபாலா கூறுகிறார்.

"மூன்று நல்ல காரணங்களுக்காக:

அது கடைசி செதில்வரை புதுமையும்
நறுமணமுமுள்ளது.

அது உயர்ந்த ரகமும்
ஸ்வதேசியுமானது.

அது கோத்ரெஜினால்
தயாரிக்கப்பட்டது"



மதுபாலா மேலும்
கோத்ரெஜ்
டாய்லெட் பவுடர்
கூந்தல் தைலம்
சலவை சோப்புத் தூள்களை
உபயோகிக்கிறார்

"அவைகள் மிகவும் நம்பக
மானது" என்று கூறுகிறார்.

100% இந்திய
நிர்வாகம்
மூலதனம்



கோத்ரெஜ்
ரிஜிஸ்டர்டு

வத்னி*

சாவி மார்க்

வத்னி 'பேபி' விலை 2¼ அணாதான்

*"தாய்நாடு" என்று அர்த்தங்கொண்ட 'வதன்'
என்ற வார்த்தையிலிருந்து திரிபு பெற்றது.


கொள்ள வேண்டும்? அத்துமீறித் தன் நாட்டில் நுழைந்து கோவிலில் இருந்த லிங்கத்தை ஒளித்த சமணர்களைத் துரத்தியதின் காரணமாக அன்றிலிருந்து சமண சமயத்தின் ஆதரவாளராக இருக்கும் முத்தரையருக்கும் சோழ மன்னர்களுக்கும் பகைமை ஏற்பட்டது. எப்படியாவது பழையாறை நகரையாளும் சோழ மன்னரின் குலத்தையே பூண்டோடு அழித்துவிட வேண்டுமென்று முத்தரையர்கள் முயன்றுவருகின்றனர். இது பேரரசாகிய பல்லவ மன்னருக்குத் தங்களைப் போன்றவர்கள் எடுத்துச் சொன்னால் தானே விளங்கப் போகிறது....? அப்படியே சமயப் பூசலின் காரணமாக அரசினருள் குழப்பங்கள் ஏற்பட்டு மக்கள் அல்லல்படுவதை நீங்கள் வரவேற்கிறீர்களா?'' என்றான்.

அகத்தீசனடிகள் சிறிது நேரம் யோசித்தார். ''நீங்கள் சொல்வதெல்லாம் உண்மையே. சோழமரபினர்கள் தீயவர்கள் என்ற உணர்ச்சி என்றும் மக்களின் மனத்தில் ஏற்படக் காரணமில்லை. சோழர்களின் பெருமையையும் அவர்களின் சீலத்தையும் நான் நன்கு உணர்ந்தவன். அவர்களை ஆதரிக்க வேண்டியதுதான். ஆயினும் இந்தப் பல்லவ சாம்ராஜ்யத்தை அடியோடு அழித்து ஒழித்துவிடாத வண்ணம் காப்பாற்ற வேண்டிய கடமையும் என்னைப் போன்றவர்களுக்கு உண்டு. சோழ மரபினர் நல்லவரென்பதற்காக அரசனைக் கொண்டு அவர்களைப் பாதுகாக்க ஏற்பாடு செய்யலாமே தவிர வேறு எதற்கும் வழியில்லை. சமயம் நேர்ந்த போதெல்லாம் சோழ மரபினருக்கு உதவியைச் செய்ய நான் எப்பொழுதும் காத்திருக்கிறேன். அதற்காக இந்தப் பேரரசைக் கவிழ்க்கும் வேலைகளில் யார் ஈடுபட்டாலும் நான் பொறுக்க மாட்டேன்'' என்றார்.

''இவ்வளவுதூரம் தங்கள்மனம் இரங்கியது பற்றி மிக்க வந்தனம், என்னைப் போன்றவன் சோழ பரம்பரைக்கு நலம் செய்ய வேண்டுமென்பதற்காகச் சதிவேலைகளில் சம்பந்தப்பட்டு ஏதேனும் செய்வேனென்று தாங்கள் நினைக்க வேண்டாம். குலத்தில் பிறந்த கோடரிக் காம்பு போல பல்லவ அரசினருக்கு அழிவைத் தேடப் பல்லவ மன்னரைச் சேர்ந்தவர்களே சித்தமாக இருக்கின்றனர் என்பதைத் தாங்கள் மறந்துவிட வேண்டாம். அவர்களுக்கு உதவியாகக் காஞ்சியிலிருந்து மதுரை வரையில் சதிகாரர்கள் திரிந்து கொண்டிருக்கிறார்கள் என்பதையும் மறக்க வேண்டாம். நீங்கள் உங்கள் இறைவனைப் பிரார்த்திக்க வேண்டுவதெல்லாம் ஒன்றுதான். 'மகாதேவா, என்றாவது இந்தப் பல்லவ சாம்ராஜ்யம் சிதைந்து போகுமானால் அந்த இடத்திலேயே சோழர்களின் அரசு உதயமாக வேண்டும்' என்பதுதான் அது'' என்றான்.

அகத்தீசனடிகள் அந்தச் சமயத்தில் எதுவும் பேசவில்லை. அவர் ஆழ்ந்த யோசனையிலிருந்து விட்டு, ''சரி, பார்ப்போம். எல்லாவற்றுக்கும் இந்த ஊரில் நீங்கள் அதிக நாட்கள் தங்குவது உங்களுக்கு மிகுந்த அபாயத்தை உண்டாக்கும். சிம்மவர்மனின் சூழ்ச்சிகள்தான் உங்களுக்கு அபாயத்தை உண்டாக்குமென்பதல்ல. நீங்கள் இந்த நகருக்கு வந்தது அரசாங்கத்தினரின் கவனத்துக்கும் வந்திருக்கிறது. அவர்களாலும் உங்களுக்கு அபாயமுண்டு. அரசாங்கத்து உளவாளிகள் நீங்கள் அரசாங்கத்துக்கெதிரிடையாகச் சூழ்ச்சிகள் செய்வதாகத்தான் உணர்ந்திருக்கின்றனர். இதனால் நீங்கள் அரசாங்கத்தின் தண்டனைக்கும் உள்ளாக நேரும். ஆகையால் அதிசீக்கிரமே நீங்கள் இந்நகரைவிட்டுப் போய்விடுவது நலம்...'' என்றார்.

''நானும் அதையெல்லாம் உணர்ந்துதானிருக்கிறேன். ஆனால் என்னுடைய நட்பை விரும்பும் சிம்மவர்மர் எனக்கு ஏதேனும் ஆபத்து நேர்ந்தாலும் அதிலிருந்து காப்பாற்றி விடுவாரென்று நினைக்கிறேன்'' என்றான் பூதுகன்.




இதைக் கேட்ட அகத்தீசனடியார் சிறிது கலக்கமும் திகைப்பும் அடைந்தார். "சிம்மவர்மன் உங்கள் நட்பை விரும்பலாம். ஆனால் உங்களுக்கு அவனுடைய நட்பு தகாது. இந்தப் பல்லவ சாம்ராஜ்யத்தை யார் சீர்குலைக்க நினைக்கிறார்களோ, அவர்களிடமே நீங்கள் நட்பு பாராட்ட விரும்புவது நீங்களும் தகாத செயல்களில் ஈடுபட்டவர் என்பதைத்தான் காட்டுகிறது" என்று கூறினார் அகத்தீசனடிகள்.

"நான் இவ்வளவு சொல்லியும் நீங்கள் என்னைப் புரிந்து கொள்ளவில்லையே என்றுதான் வருந்துகிறேன். நான் நெடு நாட்கள் இந்த ஊரில் தங்கியிருக்க விரும்பவில்லை. ஆனால் நான் சில விஷயங்களைத் தெரிந்து கொள்ளாத வரையில் இங்கிருந்து போய்விடுவதும் சரியாகாது. என்னைப்போலொரு காரியத்தில் இறங்கியவன் எதற்கும் பயப்படுவதில் அர்த்தமில்லை" என்றான் பூதுகன்.

அதற்கு மேல் அவனிடம் அதிகமாகப் பேச விரும்பவில்லை அகத்தீசனடிகள். எப்படியோ அவருக்கு அவன்மீது அன்பும் அனுதாபமும் ஏற்பட்டன. அவன் செயல்குறித்து,பச்சாத்தாபப்பட்டார். அதேசமயத்தில் அவருக்கு அவனிடம் சிறிது வெறுப்புணர்ச்சியும் ஏற்பட்டது. "உங்கள் சாமர்த்தியத்தில் உங்களுக்கு நம்பிக்கை யிருப்பது நல்லதே" என்று சொல்லிவிட்டுத் தேனார்மொழியாளைப் பார்த்து, "உன் அத்தை மகன் என்று சொல்லிக் கொள்ளும் இவரைக் காப்பாற்ற வேண்டியது உன்னுடைய பொறுப்பும் கடமையும் ஆகும், அம்மா. நான் சென்று வருகிறேன். நமச்சிவாய" என்று சொல்லிவிட்டு மெதுவாக நடந்தார்.

தேனார்மொழியாள் அவரை வாசல் வரையில் கொண்டுபோய் விட்டுவிட்டுக் கதவைத் தாளிட்டுக் கொண்டு உள்ளே வந்தாள். அவளுக்கு ஏதோ பெரிய பந்தத்திலிருந்து நீங்கியது போல் இருந்தது; பூசை சமயத்தில் கரடிபுகுந்தாற்போல் அகத்தீசனடிகள் திடீரென்று தோன்றியது அவளுக்கு மிகவும் தரும சங்கடத்தைத்தான் விளைவித்தது. அவர் வந்த வேகத்தில் என்ன நடைபெறுமோ என்று அஞ்சியே நடுங்கினாள் அவள். ஆனால் பூதுகன் மிகவும் சாமர்த்தியமாக நடந்து கொண்டது அவளுக்கு மிகுந்த ஆறுதலை அளித்ததோடு, அவன் மீது அவளுக்கு ஏற்பட்டிருந்த மதிப்பையும் காதலையும் அதிகமாக்கி விட்டது. அகத்தீசனடிகள் எப்பொழுது செல்வார் என்று துடிப்போடு காத்திருந்த அவள் ஒரு மோகனப் புன்னகை புரிந்த வண்ணம் ஆர்வத்தோடு பூதுகனை நெருங்கி மெதுவாக அவன் தோளில் தன் மெல்லிய கரத்தை வைத்தாள். "நீங்கள் இவ்வளவு அழகாகப் பாடுவீர்களென்று நான் நினைக்கவில்லை. அதிலும் மகேந்திர பல்லவர் சிருஷ்டித்த யாழாகிய இந்தப் 'பரிவாதினி'யை என்னைத் தவிர வேறு யாராலும் தொடக்கூட முடியாதென்ற கருத்தோடு நான் இருந்தேன். எதிர்பாராத வண்ணம் கணப் பொழுதில் கற்கோட்டைபோல் எழும்பி இருந்த என்னுடைய கர்வத்தை இடித்துத் தூள் தூளாக்கி விட்டீர்கள். அதனால் எனக்கு ஆத்திரமோ பொறாமையோ இல்லை. ஆனந்தம்தான். நான் மனதார விரும்பும் ஒரு மனிதர் என்னைப் போலவே நாத வித்தைகளில் தேர்ந்தவராய் இருப்பது எனது பாக்கியம்தானே!" என்று சொல்லி அவன் முகத்தைப் பார்த்தாள்.

பூதுகன் தன் தோள்மீதிருந்த அவள் கரங்களை எடுத்து அப்பால் விட்டு, "தேனார்மொழி! உனக்காக நான் இரக்கப்படுகிறேன். ஆனால் உலகில் எதையும் சிந்திக்காமல் யாரும் உணர்ச்சிகளுக்குப் பலியாகிவிடக் கூடாது. அதுவும் பெண்கள் உணர்ச்சி வசப்பட்டுத் தடுமாறி விட்டால் மிகுந்த அபாயமாக முடியும். வைகைமாலை என்னிடம் அளவில்லாத பற்றுதலுள்ளவள். நான்



அவனிடம் எல்லையற்ற பற்றுதலுடையவன். என்னுடைய இலட்சியமும் அவனுடைய இலட்சியமும் ஒன்று. அவன் அந்த இலட்சியத்துக்காகத் தன்னைத் தியாகம் செய்யச் சித்தமாய் இருக்கிறான். நானும் அப்படியே. இத்தகைய உன்னத நோக்கத்திலுள்ள நாங்கள் மனத்தை ஒரு கணம்கூட வேறு எதிலும் சிதறவிடச் சித்தமா யில்லை. தேனார்மொழி! இதை நீ உணர்ந்து கொள். உன்னுடைய மன ஆவலை அடக்கிக் கொள்வதுதான் உத்தமமான காரியமாகும்'' என்றான்.

தேனார்மொழிக்குப் பூதுகனின் வார்த்தைகள் பெருத்த ஏமாற்றத்தை யளித்தன. உன்னத எழில் கொண்ட அவள் எந்த ஆண்பிள்ளையிடமும் இதுவரை காதற் பிச்சை ஏந்திச் சென்றதில்லை. மன்னாதி மன்னர்களெல்லாம் அவளிடம் காதற் பிச்சைக்குக் கையேந்தி நின்றிருக்கிறார்கள். இந்த ஏமாற்றம் அவளுக்குப் பெருத்த அவமானத்தை உண்டாக்கியதில் அதிசயமென்ன? மோகவாகினி வீசும் அழகான விழிகள் கோபத்தால் சிவந்து விகாரமடைந்தன. சிவந்த உதடுகள் துடிக்க மார்பு பொருமியெழ, ''நான் நேசத்தோடும் ஆர்வத்தோடும் உங்களிடம் சமர்ப்பிக்க வந்த அன்பு மலரை நீங்கள் காலால் தேய்த்து நாசமாக்கி விட்டீர்கள். நீங்கள் மிகவும் சுயநலக்காரர். உங்களுடைய காரியத்தைச் சாதித்துக் கொள்வதற்காக என்னை நாடி வந்திருக்கிறீர்கள். உங்களுக்காக எதையும் செய்யச் சித்தமா யிருக்கும் என் அன்பை நீங்கள் நிராகரித்தது பெரிய பாதகம்; போகட்டும் — இனிமேல் உங்களிடம் அன்புப் பிச்சை கேட்க மாட்டேன். எனக்குப் புத்தி வந்தது. நீங்கள் பல்லவ சாம்ராஜ்யத்தின் கோட்டையாகிய இந்தக் காஞ்சிமா நகரில் வந்து ஆபத்திடையே சிக்கிக் கொண்டிருக்கிறீர்கள் என்பதை மறந்துவிட வேண்டாம். நிச்சயம் இதை மாத்திரம் நினைவில் வைத்துக் கொள்ளுங்கள். இந்தத் தேனார்மொழியாளை அலட்சியம் செய்துவிட்டு இந்தக் காஞ்சிமா நகரில் ஒரு கணம்கூடப் பத்திரமாக வாழ முடியாதென்பதை...'' என்று படபடப்போடு சொல்லிப் பூதுகனின் முகத்தைப் பார்த்தாள்.

பூதுகன் அதிர்ச்சியோ பயமோ அடைந்துவிடவில்லை. ''தேனார்மொழி! ஆத்திரமோ கோபமோ நன்மை யளிக்காது. ஆத்திரமும் கோபமும் அடைவதைவிடச் சிந்தித்து உணர்ந்து கொள்வது எவ்வளவோ நல்லது. நீ எனக்கு விரோதியாகி விட்டதனால் பெரிய ஆபத்து ஏதும் ஏற்பட்டுவிடப் போவதில்லை. என் மனம் அசைந்து விடாது. எனக்கு மதத் துறையிலும் எத்தனையோ விரோதிகள் உண்டு. பத்தோடு பதினொன்று என்பது போல் நீயும் ஒருத்தி என்றுதான் நான் கருதுவேன். நம்முடைய பகைமை உச்ச நிலை அடைவதற்கு முன்னால் உன்னிடமிருந்து நான் விடை பெற்றுக் கொள்ள விரும்புகிறேன்'' என்று சொல்லிச் சட்டென்று ஆசனத்திலிருந்து எழுந்தான்.

அவனுடைய அமைதி நிறைந்த வார்த்தைகள் தேனார்மொழியாளின் உள்ளத்தை உருக்கிவிட்டன. தான் சிறிதும் பொறுமை காட்டாமல் உணர்ச்சிப் பெருக்கினால் ஏதேதோ வார்த்தைகளைக் கொட்டி விட்டோம் என்பதை அப்பொழுதுதான் அவள் உணர்ந்தாள். தன்னுடைய தவறுதலுக்காக மன்னிப்புக் கேட்டு அவனைச் சமாதானம் செய்ய வேண்டுமென்று அவளுக்குத் தோன்றியது.

''என்னை மன்னித்து விடுங்கள். உணர்ச்சி வேகத்தில் ஏதேதோ சொல்லி விட்டேன். இந்த இரவு வேளையில் எங்கே கிளம்பினீர்கள்? நீங்கள் எங்கும் போக வேண்டாம். இங்கேயே தங்கியிருங்கள். என்னுடைய நாட்டிலிருந்து வந்த ஒரு அதிதியை இந்த வேளையில் நான் வேறெங்கும் அனுப்பமாட்டேன். அதுவும் உங்களுக்கு ஆபத்து சூழ்ந்திருக்கும் இந்த நேரத்தில் உங்களைக் காப்பாற்ற வேண்டிய பொறுப்பும் கடமையும் என்னுடையது'' என்று சொல்லிக் கொஞ்சும் முகத்தோடு அவன் இரு கரங்களையும் பிடித்துக் கொண்டாள்.

அவன் சட்டென்று அவளுடைய கரங்களை உதறித் தள்ளிவிட்டு வெளியில் வேகமாக நடந்தான். தேனார்மொழி அவனுக்கு முன்னதாக ஓடி வாசற் கதவின் தாளை அவன் திறந்து வெளியேறாத வண்ணம் கதவில் சாய்ந்து கொண்டு, ''போகாதீர்கள், ஆபத்து. வெளியே சென்றால் வஞ்சகர்கள் கையில் சிக்கிக் கொள்வீர்கள். நான் உங்களை வேண்டிக் கொள்கிறேன். இங்கிருந்து போக வேண்டாம். என்னைத் தவறாக நினைக்காதீர்கள்...!'' என்றாள்.

''ஆபத்தா? இங்கு இருப்பதுதான் எனக்குப் பேராபத்தாக இருக்கும் போலிருக்கிறது! வீண் பிடிவாதம் காட்டாதே. உன் ஆசை அனலில் வீழ்ந்து சாகும் விட்டில் பூச்சியல்ல நான்'' என்று சொல்லிச் சட்டென்று அவள் தோள்களைப் பிடித்து அப்பால் தள்ளி, தாளை நீக்கிக் கதவைத் திறந்து கொண்டு அவ்விடத்தை விட்டு வெளியேறினான் பூதுகன். (தொடரும்)



அகலாத அழகு



'சிலப்பதிகாரம்' மலிவுப் பதிப்பு ஒன்று,* போன வாரம் சென்னையில் கோலாகலமாக நடைபெற்ற இளங்கோவடிகள் விழாவில் வெளியாயிற்றே, அதை நீங்கள் பார்த்தீர்களா? அழகிய புத்தகம். 'நெஞ்சை அள்ளும்' காவியம். ஒரே ஒரு ரூபாய்தான்.

அம் மலிவுப் பதிப்புப் பிரதி ஒன்றைப் புரட்டிக் கொண்டிருந்தேன். வெளியிலே, எதிரே இருந்த தென்னந் தோப்பில், குயில் கூவியது. என் மனம், இரண்டாயிரம் வருஷங்களுக்கு அப்பால் உள்ள பழங்காலத்துக்குச் சென்றது. இன்று போலவே, அன்றும், குணவாயில் என்ற ஊரில், அங்கிருந்த சமணர்கள் மடத்தின் அருகில், குயில் கூவியது. 'என்ன சொல்கிறது இந்தக் குயில்?' என்று வியப்போடு வெளியிலே நோக்கினார் ஒருவர். அங்கே, பொய்கையில், தாமரை மலர்கள் இதழ் விரித்து நகைத்தன. மடத்துத் தோப்பில், மாமரங்களிலிருந்து, சிவந்த கொழுந்து தழற் பிழம்பாக ஒழுகியது. அசோக மலர்கள் மடல் அவிழ்ந்தன. இளவேனில் பவனி வருகிறான் அல்லவா, அதற்குத் தான் இத்தனை ஏற்பாடும் என்று இதையெல்லாம் பார்த்துப் பார்த்து உள்ளம் பூரித்த அவருக்குத் தோன்றியது. ஆமாம்,

---

*கிடைக்குமிடம்: மர்rே அண்டு கம்பெனி, 5, தம்புச் செட்டித் தெரு, சென்னை-1.



பேராசிரியர் அ. சீநிவாசராகவன்

இளவேனில் வந்து விட்டது, பூங்கொத்துக்களை வாரி, உடம்பெல்லாம் சூட்டிக் கொண்டு வந்தது இளவேனில் என்று பாடினார் அவர்:

செந்தாமரை விரியத் தேமாங் கொழுந்து ஒழுக
மைந்து ஆர் அசோகம் மடல் அவிழ— கொந்து ஆர்
இளவேனில் வந்ததால்....

[தே-தேன்; மைந்து-அழகு; ஆர்-பொருந்திய கொந்து-கொத்து. இங்கே பூங்கொத்து.]

இதற்காகத் தான் குயில் பாடியதோ? வசந்தமும் குயிலும், உலகிலும் சரி, இலக்கியத்திலும் சரி, சேர்ந்தே வருகின்றன. இதோ மிகப் பழைய ஆங்கிலப் பாடல் ஒன்று:

வேனில் வந்தது வந்தது.
விரைந்து பாடிடு குயிலே!
கான்புதர் ஒளிர்ந்தது. கவின்வெளி மலர்ந்தது
களித்திசை பாடிடு குயிலே!

தமிழ் நாட்டுக் குணவாயில் கோட்டத்திலிருந்து எங்கேயோ போய் விட்டேனே! வசந்தம் வருகிறது என்று குயில் கட்டியம் கூறுவதாக அந்தப் பழந் தமிழ்ப் புலவர் நினைத்தார். 'இந்தக் குயிலுக்கு, மன்மதனுடைய சேனையில் காளம் ஊதுகின்ற தொழில் போல் இருக்கிறது. கொடிகள் பின்னிச் செறிந்த சோலையே, சேனையின் செய்தி அறிவிப்பு மேடை. அங்கே நின்று கொண்டு மன்மதனுடைய படைகளை அழைத்து, எச்சரிக்கை செய்கிறது குயில். 'அன்னைல் இளவேனில் வருகிறார். நம் அரசர் மன்மதனுக்குத் துணைவரான இளவேனில்—தளபதி வருகிறார். பொதிகை மலையிலிருந்து தென்றல் என்ற தூதன் கொணர்ந்த செய்தி இது. அவன் தமிழ் முனிவராகிய அகத்தியர் மகன், ஆகவே அவனை நம்பலாம். இளவேனில் வருகிறார். மன்மதன் படை வீரர் அனைவரும், மாசுமறுவற்ற உடையும், கோலமும் புனைந்து அணிவகுத்து நிற்க வேண்டும், எச்சரிக்கை!' என்று குயில் எக்காளம் ஊதுகிறது.

இப்படியெல்லாம் எண்ணுகிறார் புலவர். இரண்டாயிரம் ஆண்டுகளைக் கடந்து, அவருடைய குரல் இன்று நம்முடைய காதில் விழுகிறது:

மன்னன் மாரன் மகிழ்துணை ஆகிய
இன் இளவேனில் வந்தது இவண்' என
வளம் கெழு பொதியில் மாமுனி பயந்த
இளங்-கால் தூதன் இசைத்தனன். ஆதலின்
மகர வெல் கொடி மைந்தன் சேனை!
புகர் அறுகோலம் கொள்ளும் என்பது போல்
கொடிமிடை சோலைக் குயிலோன் என்னும்
படையுள் படுவோன் பணிமொழி கூற.

[மாரன்-மன்மதன்; மகிழ்துணை-மகிழ்கின்ற துணைவன்; இன்-இனிமையான; இவண்-இங்கே; கெழு-பொருந்திய; பொதியில்-பொதிகை; பொதியில் மாமுனி-அகத்தியன்; இளங்-கால்-மெல்லிய காற்று. இங்கே, தென்றல்; மகர வெல்கொடி-வெற்றி உடைய மீன் கொடி; புகர் அறு-குற்றம் இல்லாத; கொடிமிடை-கொடிகள் செறிந்த; படையுள் படுவோன்-காளம் ஊதிச் செய்தி அறிவிக்கும் இறுவன்; பணிமொழி-கட்டளை]

யாருடைய குரல் இது? ஒரு துறவியின் குரல்; அரசுரிமையைத் துறந்து, குணவாயிற் கோட்டம் என்ற இடத்தில், வாழ்க்கையிலிருந்து ஒதுங்கி வாழ்ந்த இளங்கோ அடிகள் என்ற துறவியின் குரல். அரச போகத்தையும் செல்வாக்கையும், அதிகாரத்தையும், உரிமையையும் வேண்டாம் என்று கை விட்டார், சமுதாய வாழ்க்கையிலிருந்து விலகினார்; துறவி; என்றாலும், அழகுணர்ச்சி அவரைத் துறக்கவில்லை. 'சிலப்பதிகாரம்' என்ற பெயரில் அவர் தந்த காவியத்தில், இதை நெடுகிலும் காணலாம்.

இதோ பாருங்கள், காவிரியைப் பற்றி இந்தத் துறவி பேசுவதை: 'காவிரிப் பெண் அசைந்து அசைந்து நடந்து வருகிறாள். அவள் இருபுறமும் வண்டுகள் பாடுகின்றன. அழகிய மலர்களால் ஆன, மென்மையான பட்டுப் புடவை உடுத்தி, தன் கரிய மீன் விழிகளை அகல விரித்து, பிறகு அதை எண்ணித் தானே வெட்கமடைந்தவள் போல, சரேலென ஒதுங்கி, நடந்து வருகின்றாள்.'

★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★

அருள்வாக்கு

'எல்லா உபநிஷத்துக்களும் பசுக்களாம். அவைகளைக் கறக்கும் இடையன் ஸ்ரீ கிருஷ்ண பகவான். அப் பசுக்களின் கன்று அர்ஜுனன். அப் பசுக்களிடம் கறந்த பால் கீதை என்பதாகும். பாலைக் குடிப்பவர்கள் வித்வான்கள்.'

[கீதா மங்களாசரணம்—4]

லோகத்தில் ஒரு இடையன் பால் கறக்க வேண்டுமென்றால் மாட்டுடன் கன்றையும் கொண்டு போக வேண்டும். பால் கன்றுக்கும் மற்றவர்களுக்கும் உபயோகப்படுவது போல, கீதா சாஸ்திரம் யாருக்கு எவ்விதச் சந்தேகம் உதித்தாலும் அதைப் போக்கும். யார் எவ்விதக் கேள்வி கேட்டாலும் அதற்குப் பதில் அதில் இருக்கும்.

ஸ்ரீ சங்கராச்சாரியார், காமகோடி பீடம்

★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★

தெரியுமா உங்களுக்கு?

பூதேவி தன்னகத்தே எல்லையற்ற எத்தனையோ இரகசியங்களை மறைத்து வைத்துக் கொண்டிருக்கிறாள். அவற்றைக் கண்டு பிடிக்கும் முயற்சியில் விஞ்ஞானிகள் இடைவிடாது ஈடுபட்டு வருகிறார்கள். வைரம், தங்கம், வெள்ளி முதல் இரும்பு, ஈயம், நிலக்கரி வரையில் எத்தனையோ உலோகங்களையும், மனிதர் உள்பட எல்லா ஜீவராசிகளுக்கும் இன்றியமையாத உணவுப் பொருள்களையும் எல்லையின்றி வாரி வழங்கி உயிர் கொடுக்கும் பூதேவியே, ஆவேசம் கொண்டு பூகம்ப பத்ரகாளியாக விசுவ ரூபம் எடுக்கும் போது எல்லோரையும் பலி கொண்டு விடுகிறாள். பச்சை உடை உடுத்திப் புன் முறுவல் பூத்து, தானிய வகைகளையும், கனி வர்க்கங்களையும், பூக்களையும், அருமருந்துப் பச்சிலைகளையும் எல்லையின்றிக் கொடுக்கும் பூதேவியின் திருவுருவம் பயங்கரமாக மாறுவதற்குக் காரணம் என்ன?



இந்த உண்மையைக் கண்டு பிடிப்பதற்காக உலகில் உள்ள 55 நாடுகளைச் சேர்ந்த 5000 விஞ்ஞானிகள் ஆராய்ச்சியில் ஈடுபடத் தொடங்கியிருக்கிறார்கள். அவர்கள் கோஷ்டி கோஷ்டியாக உலகின் பல பாகங்களுக்கும் சென்று தங்கள் ஆராய்ச்சியை நடத்துவார்கள். உலகில் ஏற்படும் பூகம்பம், சூறாவளிக் காற்று, எரிமலைகளின் சீற்றம் முதலிய இயற்கை உற்பாதங்களின் காரணங்களைக் கண்டு பிடித்து அவற்றைத் தடுக்க முடியுமா, அல்லது அவற்றை முன் கூட்டியே தெரிந்து கொண்டு அவற்றின் உக்ரத்தைத் தணிக்க முடியுமா என்பதை ஆராய்ச்சி மூலம் கண்டுபிடிக்க உத்தேசித்திருக்கிறார்கள். வருஷத்தில் பல மாதங்கள் சூரிய வெளிச்சமின்றி இருள் சூழ்ந்திருக்கும் துருவப் பிரதேசங்களில் என்ன நடக்கின்றன என்பது எவருக்குமே தெரியாது. அவர்கள் அதையும் ஆராய்ச்சி செய்யத் தீர்மானித்திருக்கிறார்கள். பல விஞ்ஞானிகள் எண்பது கப்பல்களில் சமுத்திரத்தின் பல திசைகளுக்கும் சென்று கால நிலை மாறுதல்கள், பூகம்பங்கள், புயல் காற்று, பனி, குளிர் இவை சம்பந்தமான விஞ்ஞான உண்மைகளைக் கண்டு பிடிக்கவும் உறுதி கொண்டிருக்கிறார்கள். சிற்சில கடல்களிலே குறிப்பிட்ட மாதங்களில் தண்ணீர் மட்டம் பொங்கி அதிகமாகிறது. அதற்குக் காரணம் என்ன என்பதும் அவர்களுடைய ஆராய்ச்சி மூலம் தெரியவரும். கடலுக்குள்ளும் எத்தனையோ அதிசயங்கள் இருக்கின்றன. உதாரணமாக, பசிபிக் மகாசமுத்திரத்தின் ஒரு பகுதியில் தண்ணீருக்குள் உலகிலேயே வேறு எந்த இடத்திலும் இராத அளவு கொடிய உஷ்ணம் நிலவி வருகிறது. அதன் காரணத்தையும் விஞ்ஞானிகள் கண்டு பிடிப்பார்கள். அவர்கள் தங்கள் ஆராய்ச்சியின் பயனாக விஞ்ஞான உலகில் புரட்சிகரமான பல அற்புத வெற்றிகள் கிடைக்கலாமென்று எதிர்பார்க்கிறார்கள்.

மருங்கு வண்டு சிறந்து ஆர்ப்ப
  மணிப்பூ ஆடை — அது போர்த்து
கருங்கயல் — கண் விழித்து, ஒல்கி,
  நடந்தாய்; வாழி, காவேரி

[மருங்கு-பக்கத்தில்; கயல்-ஒரு வகை மீன்; ஒல்கி-ஒதுங்கி அசைந்து.]

அது மாத்திரமா? அரசியைப் போல; நீண்ட மணிமாலை மார்பிலே அசைய, குயில்கள் பாடியும், மயில்கள் ஆடியும் இருபுறமும் பரிவாரங்களாகச் சூழ்ந்து வர, கம்பீரமாக நடந்து வருகிறாள் காவிரிப் பெண்:

பூ ஆர் சோலை மயில் ஆல,
  புரிந்து குயில்கள் இசைபாட,
காமர் மாலை அருகு அசைய
  நடந்தாய் வாழி, காவேரி!

[ஆல-ஆட; புரிந்து-விரும்பி; காமர்-அழகுடைய]

காவிரியிலிருந்து வைகையாற்றங் கரைக்குப் போவோம். வைகை ஆற்று வெள்ளத்தில் மிதந்து வரும் பூக்களை எண்ணுகின்ற இந்தத் துறவி, ஒரே பரவசத்தில் ஆழ்ந்து, மலர்களின்

பெயர்களை மந்திர உச்சாடனம்போல அடுக்கிக் கொண்டு போகிறார்:

குரவமும், வகுளமும், கோங்கமும், வேங்கையும்,
மரவமும் நாகமும் திலகமும், மருதமும்,
சேடலும் செருந்தியும், செண்பக ஓங்கலும்
பாடலம்-தன்னொடு பல் மலர் விரிந்து

குரவமலரும், மகிழம் பூவும், கோங்கு மலரும், வேங்கை மலரும், வெண் கடம்ப மலரும், சரபுன்னை, மஞ்சாடி, மருதம், உச்சிச் செலுந்தல், செருந்தி, செண்பகம், பாதிரி - இவற்றின் மலர்களும் - அடேயப்பா இத்தனை விதமான மலர்களா... இருங்கள், இருங்கள், இன்னும் எத்தனை எத்தனையோ, முருக்கத்தி, செம்முல்லை, முசுட்டை, மல்லிகை, வெண்ணைக் கூதாளி, வெட்பாலை, மூங்கில், பகன்றை, பிடவம், இருவாட்சி எல்லாம் ஒன்றாகப் பின்னி மணம் வீசி, கரையின் வளைவோடு வளைந்த மேகலையாக மின்னுகின்றன. இந்த மேகலை இடையை நெருக்க, வைகைக் கன்னி வருகிறாள்.

குருகும், தளவமும், கொழுங்கொடி
முசுண்டையும்
விரிமலர் அதிரலும், வெண் கூதாளமும்,
குடசமும், வெதிரமும், கொழுங்கொடிப்
பகன்றையும்,
பிடவமும், மயிலையும், பிணங்கு அரில் மணந்த
கொடுங்கரை மேகலைக் கோவை யாங்கணும்
மிடைந்து

வைகையாறு அசைந்து செல்லும் அழகைப் பார்த்து, தண்ணீர் பாயும் நதியா இது, இல்லை, மலர் வெள்ளமே இங்கே பாய்கிறது.

புனல்யாறு அன்று; இது பூம்புனல் யாறு

என்று, ஆற்றின் அழகிலே தம்மை மறந்து கூவுகிறார் இந்தத் துறவி.

கல்யாண வீட்டில் பெண்கள் கூட்டமாக வருகிறார்கள். வாசனைத் திரவியங்களையும், மலர்களையும், விளக்குகளையும், சந்தனத்தையும், தானிய முளைகள் நிரம்பிய அகன்ற பாலிகைகளையும்; ஒளிவீசும் மாலைகளையும் ஏந்தி, கலகல வென்று பேசிப் பாடி, முகத்திலே முறுவல் மலர, ஒதுங்கி அங்கும் இங்கும் பாயும் கடைக்கண் பார்வையோடு, கூந்தல் கட்டுக் கட்டாகப் பூச்சூடி, மணம் நிரம்பிய பொற்கொடிபோல் துவண்டு நடந்து செல்லும் பெண்களின் அழகு, இந்தத் துறவியைக் கவர்கிறது:

விரையினர், மலரினர், விளங்கு மேனியர்
உரையினர், பாட்டினர், ஒசிந்த நோக்கினர்,
சாந்தினர், புகையினர், தயங்கு கோதையர்,
ஏந்து இளமுலையினர், இடித்த சுண்ணத்தர்,
விளக்கினர், கலத்தினர், விரிந்த பாலிகை,
முளைக்குடம் நிரையினர், முகிழ்த்த மூரலர்,
போதோடு விரி கூந்தல் பொலன் நறுங்கொடி
அன்னார்.

[விரை-வாசனை; ஒசிந்த-வளைந்த; சாந்து-சந்தனம்; புகை-அகில், சாம்பிராணி, தசாங்கம் முதலிய வாசனைப் புகை; தயங்கு-ஒளி வீசும்; சுண்ணம்-வாசனைப் பொடி, கலத்தினர்-ஆபரணம் அணிந்தவர்; நிரை-வரிசை; முகிழ்த்த-அரும்பிய; மூரலர்-புன்சிரிப்பு உடையவர்; போதொடு-பூக்களோடு; பொலன்-பொன்; அன்னார்-போன்றவர்கள்.]

எப்படி இருக்கிறது பார்த்தீர்கள் அல்லவா? இப்படித்தான், 'சிலப்பதிகாரம்' முழுவதிலும், அழகிலே திளைக்கும் இளங்கோவடிகளின் உள்ளம், அங்கங்கே தன்னை இனம் காட்டிக் கொள்ளுகிறது. அதுமாத்திரம் இல்லை. 'குணவாயிற் கோட்டத்து அரசு துறந்திருந்த' இந்தத் துறவியிடம் இன்னொரு விசித்திரமான பண்பையும் நாம் காண்கிறோம். அதை அடுத்த வாரம் பார்ப்போம். (தொடரும்)

பாரதீய சங்கீத கலைக் கழகம்

இந்தக் கலைக் கழகத்தின் நான்காவது ஆண்டு விழா சென்ற மாதம் பம்பாயில் வெகு சிறப்பாக நடந்தேறியது. பம்பாய்த் தொழிலதிபர் திரு பாபுபாய் சின்னுவ் விழாவை ஆரம்பித்து வைத்தார். இந்த விழாக்காட்சிகளை எதிர்ப்பக்கத்தில் காணலாம்.

1. விழாவுக்கு மகுடம் சூட்டியது போல் அமைந்த திரு ஏ. கே. சி. நடராஜன் கிளாரினெட் வாத்தியக் கச்சேரி. 2. சென்னை அடையாறு கலாக்ஷேத்திர திருமதி ருக்மிணி தேவி குழுவினரின் 'சீதா சுயம்வரம்' நாட்டிய நாடகத்தில் ஒரு காட்சி. 3. திரு மதுரை மணி ஐயரின் இசை விருந்து. 4. திருவிசைநல்லூர் திரு ராமசாமி சாஸ்திரியாரின் விகடக் கச்சேரி. 5. திரு டி. ஆர். மகாலிங்கத்தின் குழலிசை. 6. திரு ஜி. என். பாலசுப்பிரமணியத்தின் சங்கீதக் கச்சேரி. 7. பாலக்காட்டு ராம பாகவதரின் இன்னிசை. 8. வழுவூர் ராமையாப்பிள்ளையின் மாணவி குமாரி ஈ. வி. சரோஜாவின் பரதநாட்டியம். 9. மகாராஜபுரம் திரு விசுவநாத ஐயரின் கச்சேரி முடிந்தவுடன் அவருக்கு அளித்த ராஷ்டிரபதி விருதைப் பாராட்டிப் பரிசு வழங்கப்படுகிறது. இவை தவிர கேசரிபாயின் இந்துஸ்தானி சங்கீதமும், பிருதிவி ராஜ்கபூரின் 'பைசா' என்ற இந்தி நாடகமும், கேரள காந்தி சேவாசதனத்தாரின் கதக்களி நடனமும் நடைபெற்றன.


பம்பாயில் கலா விழா



ஒரு சிறிய சேனையைப்போல ஹிந்துஸ்தான் லீவர் கம்பெனியில் அணிவகுத்துள்ள நாங்கள், ஆண், பெண் அடங்கலாக 6500 பேர்; நாங்கள் அனைவருமே பொதுவான ஒருசில இலட்சியங்களால் பிணைக்கப்பட்டவர்கள். சோப்புக்களும், மேனியலங்காரப் பொருள்களும், சமையல் கொழுப்புக்களும் தயாரிப்பதோடு எங்கள் கடமை தீர்ந்துவிடுவதாக நாங்கள் கருதுவதேயில்லை — எந்தப் பண்டம் தயாரித்தாலும் அதனதன் தரம் குன்றாமல் உங்கள் தேவைகளைப் பூர்த்தி செய்ய முயல்வதே எங்கள் குறிக்கோளாக இருந்து வருகிறது. பாரத சமுதாயத்தின் குடும்பங்களாகிய நீங்கள் எமது சரக்குகளை நன்குணர்ந்து நம்பிக்கை பூண்டு பயன் படுத்திவர வேண்டுமென்பதே எமது மனோரதம்.

HLL. 2A-X29 TM

ஏறக்குறைய ஐம்பது வருஷ காலமாக, பெருகி வரும் உங்கள் தேவைகளை ஒட்டி நாங்களும் வளர்ந்து வந்துள்ளோம். பூத்துக் குலுங்கும் தருவைப்போல பரவசமூட்டும் புதுப் புது மலர்களை வழங்கத் தவறியதில்லை — தொழிற்சாலைகளில் நிகழ்த்தும் உற்பத்தியோடு நின்றுவிடாமல், தளரா ஊக்கத்துடன் புதிய புதிய முற்போக்குத் திட்டங்களை வகுத்து நிறைவேற்றுகிறோம். இந்நாட்டிலேயே தன்னிகரற்றதான எமது மார்க்கெட் ரிஸர்ச் இலாகா, உங்களுக்குப் பிடித்தமானவை எவையெவை, உங்கள் பழக்க வழக்கங்களும், கொள்கைகளும் என்னென்ன என்பனபற்றி நுட்பமாக ஆய்ந்தறிந்து, முடிவு செய்த உண்மைகளை உற்பத்தியாளர்களுக்கு உணர்த்துகிறது. கச்சாப் பொருளாகத் துவங்கும் கட்டத்திலிருந்து பூர்த்திபெற்ற சரக்காகும் கட்டம்வரை, ஒவ்வொரு சமயத்திலும் எமது க்வாலிடி கன்ட்ரோல் இலாகா நுணுக்கமான பரிசீலனை நடத்திவருகிறது. எமது தயாரிப்புகளை நன்கு பயன்படுத்துவது எப்படி என்னும் விஷயத்தில், டாக்டர் அட்வைஸரி ஸர்விஸும், வாஷிங் இன்பர்மேஷன் ஸர்விஸும் உங்களுக்குத் துணைபுரியச் சித்தமாயிருக்கின்றன.

நல்லது. அந்த சரக்குகள் எல்லாம் என்னென்ன என்று கேட்கிறீர்களோ? உங்களுக்குத் தெரியாதவையா என்ன — உதாரணமாக ஸன்லைட் சோப், . . . லைப்பாய் . . . லக்ஸ் . . . ரெக்ஸோனா . . . கிப்ஸ் எஸ். ஆர். டூத்பேஸ்ட் . . . டால்டா வனஸ்பதி ஆகியவைபோன்ற எல்லாமே உங்கள் குடும்ப நண்பர்களாக உங்களோடு பழகிவிட்டவை. உங்கள் ஒவ்வொருவர் வீட்டிலும் தினந்தோறும் உபயோகிப்பதற்கு எமது சரக்குகளைத் தேர்ந்தெடுத்துள்ளதை நினைத்துப் பெருமையடைகிறோம். இதே சமயம், உங்கள் பேராதரவுக்குக் கடமைப்பட்ட நாங்கள், எமது நடுநாயகமான இலட்சியத்தைக் கைவிடாமல், தரத்திலும், மதிப்பிலும் உன்னதமான சரக்குகளையே பொதுஜனங்களாகிய உங்களுக்கு என்றென்றும் வழங்கி வருவோம்!

குடும்பந்தோறும் தழைத்தோங்க — ஊழியம் புரிவது ஹிந்துஸ்தான் லீவர்

HLL. 2B-X29 TM



ஜன்னல்

கமல் ஜோஷி

மொழிபெயர்ப்பு: ரா. வீ.

தெருவின் இரு சாரிகளிலும் வீடுகள், எதிரும் புதிருமாக. இருபது இருபத்தைந்து முழத்துக்கு மேலிராது தெருவின் அகலம். இருசாரிக் கட்டடங்களுக்கும் இடையே உள்ள இடைவெளி குறைவுதான். இருந்தாலும் மனத்துக்கிடையே உள்ள இடைவெளி தான் ஏராளம்.

நான் இருக்கும் வீட்டுக்கு நேர் எதிர் வீட்டில்தான் அவர் இருக்கிறார். நல்ல வாளிப்பான உடற்கட்டு. முறுக்கி விடப்பட்ட மிடுக்கான மீசை. நல்ல ஆஜானுபாகுவான கம்பீரத் தோற்றம்.

எதிர் எதிர் வீட்டில் இருந்த பொழுதிலும் எங்கள் இருவருக்கும் நேரிடையான அறிமுகம் கிடையாது; பேச்சு வார்த்தை கிடையாது. இன்றுவரையில் ஒருவரை யொருவர் நெருக்கு நேர் நின்று நிமிர்ந்துகூடப் பார்த்துக் கொள்ள வில்லையென்றால், அறிமுகமாவது, மண்ணாங்கட்டியாவது? ஊர் பேர் தெரிந்து கொள்ளவோ, குசலப் பிரச்னம் செய்து கொள்ளவோ எங்கள் இருவருக்கும் இதுகாறும் வாய்ப்பே கிட்டியதில்லை.

இத்தனை அருகில் இருந்தும் ஒருவரை யொருவர் அறிமுகம் செய்து கொள்ளாமல் இருப்பதைக் காணும்பொழுது வியப்பாயிருக்கிறதல்லவா? ஆனால் நான் கேட்கிறேனே என்று கோபித்துக் கொள்ளக்கூடாது. இதில் வியப்புறுவதற்கு என்ன இருக்கிறது? இப்படியிருப்பதுதானே இந்தக் காலத்துப் பழக்கம், பண்பு, நாகரிகம் எல்லாம்!

தற்காலத்திய நாகரிகப் போரில் அல் அசலைப்பற்றியும் அக்கம் பக்கத்தைப் பற்றியும் தெரிந்துகொள்ள யாருக்குப் பொழுது இருக்கிறது? பொழுது இருந்தாலும் மனம் எங்கே இருக்கிறது? அவனவன், 'அவன் உண்டு, அவன் காரியமுண்டு' என்று தானே இருக்கிறான்? பக்கத்து வீட்டிலே ஒரு பிராணி இருக்கிறதே, 'அது இருக்கிறதா, இறந்து விட்டதா?' என்பதை எங்கே கவனிக்கிறான்?

எதிர் வீட்டுப் பிரமுகரோடு எனக்கு அறிமுகமே ஆகவில்லை. அவரை முன்பின் பார்த்ததாகக்கூட எனக்கு நினைவில்லை. உண்மையைக் கேட்கப்போனால், ஒரு மாதத்துக்கு முன்புதான் நான் முதன் முதலாக அவரைப் பார்த்தேன்.


பக்கத்திலேயே இருந்து கொண்டு பிறர் பார்வையிலேயேபடாமல் வாழும் மனிதர்கள் இந்த உலகத்தில் எத்தனை பேர் இல்லை?



இதற்குக் காரணம் கண்டு பிடிக்கும் முயற்சியில் இறங்கினால், 'பிறரை வசீகரிக்கும் ஆகர்ஷண சக்தி அவர்களிடம் இல்லை. அதனால்தான் அவர்கள் அப்படிப் பிறர் கண்களில் படாமலேயே வாழ்கிறார்கள்' என்ற முடிவுக்கு வரத்தோன்றும். இத்தனை பெரிய விஷயங்கள் நமக்கு எதற்கு? இன்னொரு விஷயம் நீங்களே யோசித்துப் பாருங்கள்! எத்தனை மனிதர்களிடம் நாம் நினைக்கும் இந்தத் தனித் தகைமையும் ஆகர்ஷண சக்தியும் இருக்கின்றன? இருந்தால் பெரும்பான்மையானவர்கள், அதாவது ரூபாய்க்குப் பதினைந்தணா விகிதாசாரத்தில் - பிறர் கண்களில் படாமலேயே, பிறர் கவனத்தைக்கவராமலேயே ஏன் வாழ வேண்டும்?

இத்தனை நாட்களும் இந்த மனிதரைப் பார்த்தும் பாராதது போல் நாம் இருந்து விட்டதற்குக்காரணம் என்னவென்று யோசித்துப் பார்த்தேன். கடைசியில் நான் வந்த முடிவு இதுதான்: அவரும் நானும் ஒரே மனோபாவம் கொண்டவர்களாகவோ, ஒரே யுகத்தைப் பிரதிபலிப்பவர்களாகவோ இல்லை. இதில் வேடிக்கை என்னவென்றால், எனக்கும் அவருக்கும் வயதில் அதிக ஏற்றத் தாழ்வு கிடையாது. நான் கல்வி கேள்வியிலும் நோக்கத்திலும் நவீன யுகத்தைச் சேர்ந்தவன். அவர் என்னைக் காட்டிலும் ஒரு யுகம் முந்தியவர். அவருடைய நீண்ட கூரான முறுக்கி விடப்பட்ட மீசை, கழுத்தையும் சேர்த்து மூடிய கோட்டு, முழங்காலுக்குச் சற்றுத் தழைந்த வேஷ்டி, நெற்றியில் சந்தனக் கீறு, மூக்குக்கு நேராகக் குங்குமப் பொட்டு. இவைகளை யெல்லாம் கண்ணுற்ற நான், நம் நாட்டில் ஒரே குடும்பத்தில் ஒவ்வொரு யுகத்தையும் பிரதிபலிக்கக் கூடிய மனிதர்கள் இருக்கிறார்கள் என்பதைக் கண்கூடாகக் கண்டேன். ஏன்? என்னைவிட வயதில் சிறியவர்களில்கூட எத்தனையோ பேர் நடை உடை பாவனைகளிலும் ஆசார - விசாரங்களிலும் பத்தாம் பசலிப் பேராக இருக்கவில்லையா? அதனால் அவர் என்ன செய்கிறார், ஏது செய்கிறார் என்று கேட்டுத் தெரிந்து கொள்ளாமலேயே என்னால் ஜோஸ்யம் கூற முடியும். அவர் யாராவது ஒரு தனவந்தர் வீட்டிலோ கடையிலோ கணக்குப் பிள்ளையாக இருக்க வேண்டும். இதைத் தவிர அவர் வேறு எதுவாகவும் இருக்க முடியாது.

கால் காசுக்குப் பிரயோசனமில்லாத இந்தப் பேச்சுக்களெல்லாம் நமக்கு எதற்கு? நேற்று வரை யார் இன்னார் என்று தெரிந்து கொள்ளாத மனிதரைப் பற்றி இவ்வளவு ஆராய்ச்சி செய்யத் தேவை என்ன? சொல்லச் சங்கோசமாயிருக்கிறது. உண்மையைக் கேட்டால், அவருக்காக இத்தனை ஆராய்ச்சி



நடக்கவில்லை. அவருடைய மனைவியின் காரணமாகத்தான் இத்தகைய உற்சாகம் பிறந்தது. அவருடைய மனைவியையும் அன்று நான் முதன் முதலாகப் பார்த்தேன்.

இரவு வேலையை முடித்துக் கொண்டு சற்று நேரத்துக்கு முன்பாகத்தான் வீடு திரும்பியிருந்தேன். மணி ஒன்பதரை அடித்திருக்கலாம். நான் ஒரு பத்திரிகைக் காரியாலயத்தில் உதவியாசிரியராகப் பணியாற்றி வருகிறேன். அதனால் இடையிடையே எனக்கு இரவு வேலை வந்து விடுவது உண்டு. தேநீர்க் கோப்பையை உறிஞ்சியதுமே இரவு கண் விழித்த களைப்பு நீங்கிவிட்டது. அதே சமயம் என் காதுகளில் யாரோ உரக்கச் சொல்வது விழுந்தது. எதிர் வீட்டில் யாரோ பேசினார்கள்: ''அடியே, நான் வெளியே போய் வருகிறேன். கதவைச் சாத்திக் கொள்!''

அந்தக் குரலோடு ஒரு கை வெளியே வந்தது. அந்தக் கை இரு கதவுகளையும் இழுத்து உட்புறமாகச் சாத்திக் கொண்டது.

பெண் ஒருத்தியும் பார்வையில் விழவில்லை. கடைந்தெடுக்கப் பட்டது போன்ற சிவந்த கைமட்டும் கண்களில் பட்டது. கையில் அணிந்திருந்த தங்க நிற வளையல்கள் சூரியனின் கிரணங்களில் பளிச்சிட்டன. அந்தத் தளிர்க் கரத்தாள் கட்டாயம் எழிலரசியாகத்தான் இருக்க வேண்டும். சிறிதும் சந்தேகம் இல்லை. அவள் இப்பொழுது படியேறி மேலே வந்து கொண்டிருப்பாள். அட! அதோ வந்து விட்டாளே! முகத்தைப் பார்க்க வேண்டும் என்று ஆசையாக இருந்தது. ஆனால் சரியாகத் தெரியவில்லை. அந்தப் பெண்மணி எதிர்த்தாற் போலிருந்த அறைக்குள் நுழைந்ததும் படுத்துக் கொண்டு விட்டாள். அவள் படுத்துக் கொண்டதைப் பார்த்தால் மிகவும் களைத்துப் போயிருப்பதாகத் தோன்றியது. அவள் அவிழ்ந்திருந்த தலைமயிரைத் தன் மார்பகத்தின் மீது எடுத்துப் போட்டுக் கொண்டாள்.

இத்தனை நாளும் இல்லாமல் அன்றுதான் திடீரென்று என் மூளைக்கு ஒரு புது விஷயம் எட்டியது. எப்படித்தான் இத்தனை நாளும் அதைச் சிந்திக்காமல் இருந்து விட்டேனோ. எனக்கே விளங்கவில்லை.

ஒவ்வொரு குடும்பத்திலும் கணவன் என்று ஒரு ஜீவன் வாழ்கிறது. அது உருவத்தில் சிறிதாக இருந்தாலும், குடும்பத்தில் மற்றவர்களைக் காட்டிலும் அதிகமான பகுதியைப் பொத்திக் கொள்கிறது. அதற்கு மனைவி என்று வாய்த்தவள் காலையில் சூரியோதயத்துக்கு முன்னால் எழுந்து கணவனின் காரியங்களைக் கவனிக்கத் தொடங்கினாலும், ஒன்பது மணி வரைக்கும் மூச்சுவிட அவளுக்குப் பொழுது இருப்பதில்லை. கணவன் வீட்டை விட்டு வெளியே போனால் தான் அவளுக்கு விடுதலை கிடைக்கிறது; இளைப்பாறப் பொழுது கிடைக்கிறது.

இந்த விஷயத்தை நான் எதிர் வீட்டுப் பிரமுகரின் மனைவியைப் பார்த்தபின் தான் முதன் முதலாகப் புரிந்து கொண்டேன்.

வேடிக்கையைப் பார்த்தீர்களா? நான் ஒரு பத்திரிகாலயத்தில் வேலைபார்க்கிறேன். ஊர், உலகம் முதலியவற்றின் செய்திகளை யெல்லாம் நன்கு அறிந்து வைத்திருக்கிறேன். ஆனால் அருகில் இருக்கும் அண்டை வீட்டு எதிர்வீட்டு விஷயங்களைப் பற்றி எனக்கு எதுவுமே சரிவரத் தெரியாது.

இன்றையப் பத்திரிகையில் வந்திருக்கும் புதுச் செய்தி என்னவென்று கேட்கிறீர்களா? இதோ சொல்கிறேன். பாராகுவாயிலோ அல்லது வேறு நாட்டிலோ கிளர்ச்சி மூள வழியிருக்கிறது. இது எத்தனை தொலை தூரத்து விஷயம். அங்கே கிளர்ச்சி மூண்டால் நமக்கு என்ன? மூளாவிட்டால் நமக்கு என்ன? ஆனால் இதோ கூப்பிடு தூரத்தில் இருக்கும் எதிர் வீட்டில் எத்தனை பயங்கரக் கிளர்ச்சி மூளவிருக்கிறது?--இந்த விவரம் யாருக்காவது தெரியுமா?

அந்த யுவதியின் அவிழ்ந்த கேசங்களில், களைப்புற்றுச் சோர்ந்து போன அங்கங்களில் எத்தனை பயங்கரப் புரட்சி உருவாகிக் கொண்டிருக்கிறது? வீட்டுக்கு வீடு வாசற்படிதான் என்பது எத்தனை பேருக்குத் தெரியும்?

நான் ஒரு நாகரிகம் வாய்ந்த அமைதியே உருவான மனிதன். சற்றுச் சிந்தித்துப் பாருங்கள்! தங்கக் கூண்டில் அடைபட்டிருக்கும் நாகரிகம் தோய்ந்த நல்ல மனிதனுக்கு நான் நீலவானின் சுதந்திரக் கதையைச் சொல்ல ஆரம்பித்தால் எப்படியிருக்கும்? பத்திரிகை வாயிலாக நான் எத்தனையோ நாட்கள் ராஜத் துரோகப் பிரசாரம் செய்திருக்கிறேன். இப்பொழுது நான் இங்கே உட்கார்ந்தபடியே கணவனுக்கு எதிராகக் கிளர்ச்சியைப் பிரசாரம் செய்யத் தொடங்கி விட்டால் என்ன ஆகும்? இப்படி யோசித்தவாறே நான் சிந்தனையில் ஆழ்ந்து விட்டேன். திடுதிப்பென்று கீதா உள்ளே நுழைந்து என் தியானத்தைக் கலைத்து விட்டாள். ''இன்னும் தேநீர் அருந்த வில்லையா நீங்கள்?'' என்று அவள் கேட்ட பின்தான் எனக்குச் சுய உணர்வு திரும்பி வந்தது.


நான் கல்யாணமாகாதவன் என்று ஒரு வேளை இது வரை நீங்கள் எண்ணிக் கொண்டிருக்கலாம். அப்படி எண்ணினால் அது உங்கள் தவறு தான். கீதா என் மனைவி. நான் அவள் கணவன். ஆனால் ஒன்று. நான் பொய் சொல்ல மாட்டேன். கணவனாக இருந்த பொழுதிலும் என்னிடம் உள்ள கணவன்-குணம் மிகமிகக் குறைவு. நான் இந்தக் காலத்து ஆசாமி என்று சொன்னேன் அல்லவா? அதே போல் என் மனைவியும் இந்தக் காலத்தைச் சேர்ந்தவள். கல்லூரியில் சேர்ந்து பி. ஏ. வரை படித்திருக்கிறாள்.

உங்களுக்குத் தெரியுமோ தெரியாதோ, எனக்குத் தெரியாது. தற்காலத்து நாகரிகத்திலே பல சௌகரியங்கள் இருக்கின்றன. முக்கியமாக இந்தக் காலத்திலே ஒரு பழக்கம் என்னவென்றால், முடிந்த மட்டில் கணவன் மனைவிமார்களுடைய உடலுக்கும் உள்ளத்துக்கும் இடையே ஒரு ஒற்றுமை நிலவக் கூடாது என்பதுதான். நாகரிகம் வாய்ந்த சமூகத்திலே நட்பு, தாம்பத்தியம் இவ்விரண்டுக்கும் இடையே உள்ள உள் கூடு ஒரு எல்லைக்கு உட்பட்டதுதான். இது நல்லதா, கெட்டதா என்பதைப் பற்றி ஒன்றும் கூற முடியாது. நாங்கள் கணவனும் மனைவியும் உணவருந்த உட்காரும் பொழுது கொரியாவையும் இந்தோ சீனாவையும் பற்றித்தான்



சென்னை மிட்லண்ட், மஹாராணி, ராஜகுமாரி, மஹாலக்ஷ்மி (பெரம்பூர்)

மற்றும் தமிழ் நாடெங்கும்


முயற்சிக்கு
அவசியமானது சக்தி
நீங்கள் சரீர தளர்ச்சி அடையாமலிருந்தால் இன்னும் அதிகமான வேலைகளைச் செய்யக்கூடும். நீங்கள் சரீர தளர்ச்சி அடைவதற்குக் காரணம் என்னவென்றால் உங்கள் சரீரமும் மூளையும் சக்தியற்றவைகளாக இருப்பதால்தான். அவை சக்தியற்றவைகளாக இருப்பதற்குக் காரணம் உங்கள் ரத்தத்தில் சர்க்கரையின் அளவு மிகவும் குறைவாக இருப்பதால்தான். க்ளுகோவிடாவில் மிகவும் அவசியமான ரத்தத்திற்கு வேண்டிய சர்க்கரைகள் அடங்கியுள்ளன. இவை வெகு சீக்கிரத்தில் ரத்தத்துடன் கலந்து உங்களுக்குத் தேவையான சக்தியை உடனேயே அளிக்கிறது. அத்துடன் க்ளுகோவிடாவிலுள்ள விடமின்களும் உலோகப் பொருள்களும் உங்களை பலமுள்ளவர்களாக்கி, சுறுசுறுப்புடனும் ஆரோக்கியத்துடனும் இருக்கச்செய்கின்றன.
நீங்கள் கடினமான வேலைகளைச் செய்யவேண்டியிருந்தால் முதலில் க்ளுகோவிடாவை உட்கொள்ளுங்கள்.
க்ளுகோவிடா
வெகு சீக்கிரத்தில்
சக்தியூட்டுகிறது
டார்ன் ப்ராடெக்ஸ் கம்பெனி (இந்தியா) ப்ரைவேட் லிட்

பேசுகிறோம். பேச்சு எத்தனைக் கெத்தனை தூரத்தில் இருக்கிறதோ, அத்தனைக்கத்தனை தாம்பத்தியத்துக்கு க்ஷேமம். நெருங்க நெருங்கத்தான் தீது.

சரி, அது போகட்டும். நான் என்ன சொன்னேன்? என் மனைவி கல்லூரிப் படிப்புப் படித்திருக்கிறாள் என்று தானே? படிப்பில் எத்தனைக் கெத்தனை கவனம் செலுத்தியிருக்கிறாளோ, அத்தனைக் கத்தனை உடலை அலட்சியம் செய்திருக்கிறாள்.

அவளுக்குத் தலைவலி. தீராத வியாதி. ஆமாம், மூக்கு உள்ள மட்டும் சளி உண்டு என்பது போல் தலை இருக்கும் வரை வலி இருக்கத்தானே செய்யும்? இதில் ஆச்சரியப் படுவதற்கோ, அதிசயப் படுவதற்கோ என்ன இருக்கிறது? எங்கள் திருமணம் 'கோர்ட்ஷிப்'புக்கு அப்புறம் நடந்தது. கோர்ட்ஷிப்'பின் பொழுது தலைவலி என்ற பேச்சையை காணோம். அப்பொழுதெல்லாம் ஷெல்லி, கீட்ஸ், ரவீந்திரநாத டாகுர் முதலியவர்களின் கவிதையைப் பற்றியேதான் பேச்சு. அதேபோல் எனக்கு அடிக்கடி 'டிஸ்பெப்ஸியா' கோளாறு வருவதுண்டு என்று சீதாவுக்கும் தெரியாது.

ஆனால் நான் ஒன்று மட்டும் நிச்சயமாகக் கூறமுடியும். எதிர் வீட்டு யுவதிக்குத் தலைவலி என்ற நோயே கிடையாது.. என்னைப் போல் அவள் கணவருக்கு டாக்டரின் வீட்டு வாசலில் போய் நின்று பழி கிடக்க வேண்டிய அவசியமும் ஏற்படவில்லை.

"மூந்தாநாள் டாக்டர் கொடுத்த மருந்து நல்ல மருந்து. அதையே வாங்கி வாருங்கள்!" என்றாள் சீதா.

நானும், "சரி, சாயந்திரம் வாங்கி வருகிறேன்!" என்று பதில் அளித்தேன்.

அன்று மாலை அந்த யுவதியின் கணவரைப் பார்த்தேன். அவர் தம் வீட்டு வராந்தாவில் உட்கார்ந்திருந்தார். சட்டை கிட்டை போட்டுக் கொள்ளாமல் தொந்தி தெரிய. அவர் எதிரே துருப்பிடித்த பெருங்காயப் பெட்டி ஒன்று இருந்தது. அது தான் அவருடைய வெற்றிலைச் செல்லம். மொத்தத்தில் பார்க்குமிடத்து, அவர் மீது பெண்ணின் ஆட்சி ஓங்கியிருப்பதாகத் தோன்றியது. அவர் என் கண்களுக்குக் கணவராக மட்டும் காட்சி அளிக்காமல் காதலராகவும் காட்சியளித்திருந்தால், அவர் மீது லக்ஷ்மிகடாக்ஷம் ஏற்பட்டிருப்பதாகவே நான் கூறியிருப்பேன். அவருக்கு இரண்டு மூன்று குழந்தைகள். அவை அவரைச் சுற்றி உட்கார்ந்திருந்தன. அவரைப் பற்றி இவ்வளவு கூறும் பொழுது எனக்குக் குழந்தைகள் கிடையாது என்பது சொல்லியா தெரிய வேண்டும்?

அதற்குப் பிறகு நான் அந்த யுவதியை அநேகம் தடவைகள், அநேக நிலைகளில் கண்டிருக்கிறேன். அவள் அங்காடிக் கூடைக்காரர்களைக் கூப்பிட்டுப் பேரம் பேசுவதைக் கண்டிருக்கிறேன். ரிப்பன், பித்தான், ஊசி முதலியவை வாங்கக் கண்டிருக்கிறேன்.

மாலை வேளைகளில் அவள் சோகமே உருவாக ஜன்னல் கம்பிகளைப் பிடித்துக் கொண்டு நிற்பாள். தெருவில் போவோர் வருவோர்களை ஆவல் ததும்பும் விழிகளுடன் கண்டு பெரு மூச்செறிவாள். அவளுடைய முகத்தில் ஒரு புதுமை, ஒரு பசுமை, ஒரு கவர்ச்சி தாண்டவமாடியது. அந்தச் சோகத்திலும், மூன்று குழந்தைகளுக்குத் தாயாராகி விட்ட பொழுதிலும் அவள் இளமையாகவே காட்சி அளித்தாள். உண்மையில் அவள் நல்ல அழகி. என்னதான் சொல்லுங்கள், ஒரு அழகிய கவர்ச்சிகரமான உருவம் என்றால் அதைப் படைத்தவனின் அபூர்வசிருஷ்டி என்று நான் ஒப்புக் கொள்ள வேண்டும். உண்மையைக் கேட்கப் போனால், அவள் எத்தனை தான் ஒருவனுக்கு மனைவியாக இருந்த பொழுதிலும் நல்ல அழகி.

நாகரிகம் முதிர்ந்த சமூகத்திலே பிறமாதர்களைப் பற்றி இத்தனை ஆர்வம் காட்டுவது தவறு என்பதை அறிவேன். ஆனால் ஒரு விஷயம். நாகரிகம், நாகரிகம் என்று சொல்கிறோமே, அது அழகை அலட்சியம் செய்யுமானால், அந்த நாகரிகத்தின் மீது எனக்குச் சிறிதும் அநுதாபம் கிடையாது; நம்பிக்கையும் கிடையாது. இதை எங்கே வந்து சொல்லவேண்டும் என்று சொன்னாலும், நான் கொஞ்சங்கூடத் தயங்க மாட்டேன். ஆதிகாலத்திலே பிறர் மனைவி என்ற பொருளே கிடையாது. ஆண் மகன் மட்டுமே தான் இருந்தான்.

அவனோடு பெண்ணும் இருந்தாள். நாகரிக உலகத்தில் தான் ஒரு ஆணுக்கு ஒரு மனைவி என்ற சட்டம். மற்றவர்கள் எல்லாரும் அவனுக்குப் பிறர் மனைவிகள். இதன் பலன் என்னவாயிற்று? ஆண் மகன் என்று சொல்லிக் கொள்பவன் தொடை நடுங்கியாகி விட்டான். நாகரிகம் வளர வளரப் புருஷன் கோழையாகிப் பிறமாதர்களுக்காக ஏங்கவும், ஆவலை அதிகம் காட்டவும் தொடங்கி விட்டான். அந்தக் காலத்திலே ஆண் மகன் ஆண் மகனாக இருந்தான். பெண் மகள் பெண் மகளாக இருந்தாள். யாரும் யாரிடமும் வாலாட்ட முடியாமல் இருந்தது. இப்பொழுது....? பஸ் ஸ்டாண்டிலும் ரயிலடியிலும் பிற பெண்களைப் பார்த்து விட்டு முதுகில் 'டின்' கட்டிக் கொள்கிறான் ஆண் மகன். இதெல்லாம் ஏன்? நாகரிகத்தினால் வந்த வினை!

"எதிர் வீட்டுப் பெண்ணோடு அவள் சிநேகம் செய்து கொண்டாளா, இல்லையா?" என்று ஒருநாள் நான்சீதாவைக்கேட்டேன். "இல்லை. அவளுக்குக் குடும்பத் தொல்லைகளிலிருந்தும் குழந்தைகளிடமிருந்தும் விடுதலை கிடைத்தால் அல்லவா பேசப் பொழுது கிடைப்பதற்கு?" என்று சொல்லி விட்டாள் அவள்.

"நீயோ இங்கே தனியாகக் கிடக்கிறாய். சிநேகம் பிடித்துக் கொண்டால், பேசப் போக உனக்கு ஒரு தோழி கிடைப்பாள் அல்லவா?" என்று கேட்டேன்.

சீதா பதிலுக்கு உதட்டைக் கோணிக் கொண்டு, "போதும், போதும்! எனக்குத் தோழியும் வேண்டாம், கீழியும் வேண்டாம்!" என்று சொல்லி விட்டாள்.

நான் முன்பே சொன்னேன் அல்லவா? அந்த மனிதர் கொஞ்சம் பழைய காலத்தைச் சேர்ந்தவர் என்று! ஆனால் கொஞ்ச நாட்களாக அவரிடமும் சில மாறுதல்களைக் காண்கிறேன். இரண்டொரு நாகரிகப் பேய்கள் அவரையும் பிடித்துக் கொண்டு ஆட்டத் தொடங்கி

போபால் மன்னரின் தர்பாரிலே சங்கீத விழா நடந்துகொண்டிருந்தது. அன்றுதான் மூன்றாவது நாள்; கடைசி நாள். அந்த விழாவில் பாரதத்தின் புகழ் பெற்ற பல கலைஞர்கள் பங்கு கொண்டிருந்தார்கள். முதல் இரண்டு தினங்களிலும் கலைஞர்கள் எதிர்பார்த்தபடி மன்னர் வெகுமதி எதுவுமே கொடுக்கவில்லை. 'எங்களுக்கு வெகுமதி கொடுங்கள்!' என்று மன்னரிடம் கேட்க முடியுமா? எனவே, எல்லோரும் சங்கோசத்தினால் பேசாமலே இருந்தார்கள்.

இதன் இடையிலேதான் நடனங்களிலே ஒன்றான கதக் நடனத்திலே, மன்னர் என்று பெயர் பெற்ற சம்பு மகராஜ் அபிநயம் பிடிக்கத் தொடங்கினார். கலை ரசிகர்கள் தங்களையும் மீறி, 'ஆகா! சபாஷ்!' என்று புகழ் மொழிகளை வாய்கொண்ட மட்டும் வாரி வழங்கலாயினர். உடனே சம்பு மகராஜ் தமது நீண்ட சட்டையின் தலைப்பைத் தூக்கிப் பிச்சை பெறும் பாவனையில் அபிநயம் பிடிக்கலானார்.

அதைக் கண்ட மன்னர், ''இதென்ன, மகாராஜ்!'' என்று சம்பு மகராஜைப் பார்த்துக் கேட்டார்.

''புகழ்மொழிகளைத் திரட்டிக்கொண்டிருக்கிறேன், மகராஜ்!'' என்று கூறிய சம்பு மகராஜ், ''வீட்டுக்குப் போனதும் குழந்தைகளுக்கு உணவு அளிக்க ஏதாவது வேண்டும் அல்லவா?'' என்றார் தைரியமாக.

மன்னருக்கு ஒரே வெட்கமாகப் போய்விட்டது. உடனே கலைஞர்கள் அனைவருக்கும் உசிதமான பொருளை வெகுமதியாக அளிக்க உத்தரவிட்டார்.

விட்டன. பேய் என்று சொன்னதற்குக் காரணம், அவை விசித்திரமாயிருந்தன.

அன்று அவர் தம் மனைவியைச் சினிமாவுக்கு அழைத்துப் போய்க் கொண்டிருந்தார் என்று நினைக்கிறேன். அவர் மனைவி இந்தக் காலத்து நாகரிகப் பெண்களைப் போல் அலங்காரம் செய்து கொண்டிருந்தாள். குதிகால் உயர்ந்த செருப்பைப் போட்டுக் கொண்டு நடக்க அவளுக்கு வரவில்லை. ரொம்பக் கஷ்டப்பட்டாள். அதைக் காண எனக்குக் கஷ்டமாயிருந்தது; மனத்தில் இரக்கமும் உண்டாயிற்று.

இயல்பான அவள் அழகை இல்லாத 'அப்டு டேட்' ஆக்க முயற்சிப்பானேன்? மூன்று குழந்தைகளுக்குத் தாயார் ஆனபிறகு ஹேமாவும் இப்படிச் செயற்கை அலங்காரம் செய்து கொள்ள முற்பட்டால் அது பரிதாபப்பட வேண்டிய விஷயம்தானே?

வெகு நாட்களாக என் மனத்திலே ஒரு பயம் சூழ்ந்து கொண்டு ஆட்டி வைக்கிறது. அந்த அழகியைச் சுற்றிச் சுற்றி என் மனத்தில் எண்ண அலைகள் எழும்பிய வண்ணமாயிருக்கின்றன. அதைப் பற்றி ஹேமாவுக்கு ஏதாவது தெரிந்திருக்குமோ?

கொஞ்ச நாட்களாக என் அறையின் ஜன்னல் கதவு சாத்தியே இருக்கிறது. எதிர் வீட்டை என்னால் பார்க்க முடிவதில்லை. அந்தப் பெண்ணை நான் பார்க்கக் கூடாது என்பதற்காகவே ஹேமா ஜன்னல் கதவைச் சாத்தி வைக்கிறாளா, என்ன? எனக்கு மனத்துள் ஆத்திரம் ஆத்திரமாக வந்தது. பி. ஏ. பாஸ் செய்துவிட்டால் மட்டும் ஆயிற்று? பொறாமையும் சந்தேகமும் மற்றப் பெண்களைப் போலவே தானே இருக்கின்றன? பெண்ணின் குணம் எங்கேயாவது போகுமா?

நமக்கு இப்படி ஆத்திரம் வருகிறதே! முன்னாடியும் இப்படியே கதவைச் சாத்தி வைத்திருந்தாளானால்......? நான் இதுவரை இதைக் கவனிக்காமலே இருந்திருக்கலாம் அல்லவா? அதோடு நான் பகல் வேளையில் எத்தனை நேரம் இப்படி வீட்டில் தங்கி இருந்திருக்கிறேன்?

பயத்தினால் நான் வெகு நாட்கள் வரை ஜன்னல் கதவைத் திறக்கவில்லை. ஆனால் ஆவலும் ஆசையும் நாளுக்கு நாள் என்னையும் மீறி அதிகரிக்கத் தொடங்கின. ஆயினும் அவளை எப்படிக் கேட்பது?

அன்று அறைக்குள் நுழைந்ததும், ஹேமா கொரியா யுத்தத்தைப் பற்றி ஆரம்பித்து விட்டாள். நான் பதில் ஒன்றும் பேசாமல் வேகமாக எழுந்து சென்று ஜன்னல் கதவைத் திறந்தேன். அவள் என்ன நினைத்தாலும் நினைத்துவிட்டுப் போகட்டும், அதையெல்லாம் நாம் லட்சியம் செய்யக் கூடாது என்று தீர்மானித்துவிட்டேன்.

ஹேமா ஒன்றும் பதில் சொல்லவில்லை. ஜன்னலுக்கு நேரே உட்காராமல் சற்றுத் தள்ளி வேறு ஒரு நாற்காலியில் உட்கார்ந்தாள்.

நான் கடுமையான குரலில், ''எப்பொழுது பார்த்தாலும் இந்த ஜன்னல் கதவைச் சாத்தியே வைக்கிறாயே, ஏன்?'' என்றேன்.

ஹேமா என் குரலில் தொனித்த கடுமையைக் கண்டு சற்றுத் திகைத்தாள். பிறகு சில கணங்கள் பேசாமலே உட்கார்ந்திருந்தாள். அப்புறம் என் அருகில் வந்து நின்று மெதுவான குரலில், ''எதற்காகக் கேட்கிறீர்கள்? இந்த ஜன்னல் கதவைத் திறந்து விட்டால், எதிர் வீட்டுத் தடியனுக்குக் குருவிக்கு மூக்கில் வியர்த்த கதையாக எப்படியோ தெரிந்து விடுகிறது. ஜன்னல் அருகில் வந்து நின்றுகொண்டு பட்டிக்காட்டான் யானையைப் பார்ப்பதுபோல் என்னையே உற்றுப் பார்க்கிறான். அவன் பார்க்கும் பார்வை அப்படியே என்னை விழுங்கி விடுவான் போலிருக்கிறது. மூன்று பிள்ளைகள் பெற்ற பின்பும் பெண்களையே பார்க்காதவன் போல்.... மானம், வெட்கம், சூடு சொரணை ஏதாவது இருந்தால்தானே...?'' என்றாள்.

நான் வியப்பு மேலிட்டு அவளையே பார்த்துக் கொண்டிருந்தேன். ஆகா! எத்தனை நாட்களுக்குப் பிறகு வெட்கத்தினால் தாமரையாகச் சிவந்து விட்ட ஹேமாவின் முகத்தைப் பார்க்கும் பாக்கியம் கிடைத்தது! வெட்கத்தினால் ஹேமாவின் முகம் சிவந்தால், நான் மதி மயங்கி மெய்ம் மறந்து பார்ப்பது வழக்கம்.


எங்கள் இருவர் விழிகளும் ஒன்றையொன்று தழுவின. நாங்கள் கலகலவென நகைத்தோம்.

பிறகு மெதுவாக நானே எழுந்து சென்று ஜன்னல் கதவைச் சாத்தி விட்டேன்.



ஜிம்மியும் சங்கரும்!

சங்கர் ஜிம்மி என்ற நாயை வளர்த்து வந்தார். அது படுத்துக் கொள்வதற்காக ஒரு சாக்கு போட்டிருந்தார். ஜிம்மியோ சாக்கில் படுத்துக் கொள்ளாமல் சங்கரின் மெத்தையில்தான் வந்து படுத்துக் கொள்ளும். சங்கர் அதைக் கொண்டுபோய் அந்தச் சாக்கில் விட்டுவிடுவார். ஒரு நாள் சங்கர் வெளியில் போய்விட்டு வந்தார். ஜிம்மி தன்னுடைய படுக்கையில் படுத்திருப்பதைப் பார்த்தார். என்ன ஆச்சரியம்! ஜிம்மி தன்னுடைய சாக்கைக் கொண்டு வந்து சங்கரின் படுக்கையில் போட்டுப் படுத்திருந்தது. சாக்கில் படுக்க வேண்டியதுதானே முக்கியம் என்று ஜிம்மி நினைத்தது போலும்!





படத்தில் ஒரு பையன் எதையோ பிடித்துக் கொண்டு நடக்கிறான். ஒன்றிலிருந்து எழுபத்தொன்று வரை பென்சில் கோடு இழுத்துக் கொண்டு வந்தால், அது என்ன மிருகம் என்பது தெரியும்.





தாயார் : விஷமம் செய்யாமல் இருப்பதற்கு உனக்கு பப்பர்மெண்டு கொடுத்தேனே! மறுபடியும் எதற்கு விஷமம் செய்கிறாய்?

மணி : இன்னும் கொஞ்சம் பப்பரமெண்டு வேணும்போல் இருந்தது, அதுதான் அம்மா!


மிருங்காவதி
சித்திரத் தொடர் கதை
14
மகனே! வருந்தாதே! நீ தான் என் குழந்தை. உன்னைத் தவிர எனக்கு வேறு குழந்தையில்லை. ஒரு காலத்தில் மந்திர சக்தியால் யக்ஷ வகுப்பைச் சேர்ந்த ஒரு பெண்ணை அடிமையாக்கினேன். அவள் ....
இவள் எனக்கு ஐயாயிரம் குதிரைகளும் ஏராளமான தங்க நாணயங்களும் தந்தாள். அவை பத்திரமாயிருக்கின்றன. அவற்றைக் கொண்டு நீ பெரும் படை திரட்டி வெற்றி பெறலாம்."
என் மிருங்காவதி தங்கள் மாளிகையில் தான் இருக்கிறாளா?
ஆம். அவளை நீ மனைவியாக்கிக் கொள்வதில் ஆட்சேபணையில்லை. ஆனால் நீ எடுத்துக் கொண்டிருக்கும் காரியத்தை நிறைவேற்றிய பின்னரே அவளை மணம் புரிந்து கொள்ள வேண்டும்.
இருவரும் இப்படிப் பேசிக்கொண்டிருக்கும்போதே மிருங்காவதி கையில் அறுசுவை உண்டி ஏந்தித் தேவிதத்தனைக் காண வந்தாள். பிரிந்தவர் கூடிப் பேசாமலே மகிழ்ந்தார்கள்.
அவர்களையும் தேடிக் கண்டு பிடித்து விக்கிரமனின் நாட்டையும் அடிமைப் படுத்தும் நோக்கத்துடன் தேவிதத்தன் புறப்பட்டான். அமைச்சர் விஜயபாயா அவளையும் மிருங்காவதியையும் ஒரு பல்லக்கில் அனுப்பி வைத்தார்.


9 விந்திய மலைச் சாரலை அடைந்த பொழுது ஒரு கொள்ளைக் கூட்டத்தினர் தேவிதத்தனின் படை மீது அம்புமாரி பொழிந்து திக்கு முக்காடச் செய்து விட்டனர்.
10 தேவிதத்தன் தனியாளாக எத்தனை நேரம் தான் போரிடுவான்? களைத்துப் போய் மூர்ச்சையுற்று விழுந்து விட்டான். கொள்ளைக் கூட்டத்தினர் மிருகாங்காவதியையும் தேவிதத்தனையும் தங்கள் கிராமத்திற்குத் தூக்கிச் சென்றனர்.
11 பல்லக்குத் தூக்கிகளில் ஒருவன் தப்பியோடி அமைச்சர் விகதபாயாவிடம் சென்று தேவிதத்தனுக்கு நேர்ந்த விபத்தைப் பற்றிச் சொன்னான்.
தேவிதத்தனுக்கு ஆபத்து! ஆபத்து!
ஆ!
யார் அங்கே? 13
படை தயாராகட்டும்.
உத்தரவு
15 தேவிதத்தனை மீட்பதற்காக அமைச்சர் விகதபாயாவே ஒரு படையுடன் புறப்பட்டுவிட்டார்.
16 கொள்ளைக் கூட்டத்தினர் தாரை தப்பட்டை முழங்கத் தேவிதத்தனை மலர் மாலைகளால் அலங்கரித்துத் தண்டிகையில் ஏற்றிப் பவனி அழைத்துச் சென்றனர். மிருகாங்காவதியும் கண்ணீரும் கம்பலையுமாகப் பின்தொடர்ந்தாள்.
(தொடரும்)



4. பயங்கர மந்திரவாதி

"அம்மா! அம்மா! யாரைத் தேடுகிறீர்கள்? ஜனங்களே நடமாட்டமில்லாத இந்த இடத்தில் இந்த நேரத்தில் என்ன செய்கிறீர்கள்?" என்று யாரோ அன்போடு கலாவிடம் கேட்பது போல் இருந்தது. அந்தச் சமயத்தில் புதிய இடத்தில் தன்னுடன் அன்பு காட்டிப் பேசுவதைப் பார்த்தவுடன், சந்தோஷம் கொண்டு "யார்?" என்று திரும்பிப் பார்த்தாள். நடுத்தர வயதுள்ள ஒரு அழகான பெண்மணி கலா நின்று கொண்டிருக்கும் இடத்தை நோக்கி வந்து கொண்டிருந்தாள். அவள் சமீபத்தில் நெருங்கியவுடன் கலா, "நீங்கள் யார், அம்மா? சற்று முன் அங்கு நடந்த கூட்டத்திலிருந்துதானா நீங்கள் வருகிறீர்கள்?" என்று கேட்டாள்.

"ஆமாம் அங்கிருந்துதான் நான் வருகிறேன். எனக்கு இந்த ஊர்தான். என் பெயர் 'கார்குரி'. உன் பெயர் என்ன?" என்று அப்புதிய பெண்மணி கேட்டாள்.

"என் பெயர் கலா."

"நீ இந்த ஊருக்குப் புதியவளா? எங்கிருந்து வருகிறாய்? இங்கு நீ யாரைத் தேடிக் கொண்டிருக்கிறாய்?"

"அம்மா! நானும் என் அண்ணனும் பிரசித்திபெற்ற மந்திரவாதி மாலிமாவின் குழந்தைகள். நாங்கள் எங்கள் தகப்பனு விருப்பப்படி பல தேசங்களைச் சுற்றிப் பார்த்து வரக் கிளம்பினோம். இங்கு தங்கிய போது என் அண்ணனை இந்த மரத்தடியில் இருக்கச் சொல்லி விட்டு நான் பெண்கள் விளையாடும் இடத்திற்குச் சென்று வேடிக்கை பார்த்துவிட்டு வருவதாகச் சொல்லிப் போனேன். ஆனால் திரும்பி வந்தவுடன் இந்த இடத்தில் அண்ணனைக் காணவில்லை. நான் அண்ணனைத் தேடிக் கொண்டிருக்கும் சமயத்தில் நீங்கள் எனக்கு ஆதரவு அளிப்பது போல இங்கு வந்தீர்கள்" என்றாள் கலா.

அதைக் கேட்டதும் கார்குரி, "சரி, நீ பயப்படாதே. சமீபத்தில்தான் என் வீடு இருக்கிறது. இரவு நீ அங்கு தங்கிவிட்டு நாளைக் காலையில் உன் அண்ணனைத் தேடலாம். வா, போகலாம்" என்று கூறிக் கலாவின் கையைப் பிடித்து இழுத்தாள்.

"அம்மா, உன் அன்புக்கு மிகவும் நன்றி. நான் எப்படியாவது என் அண்ணனைக் கண்டு பிடித்து விட்டுத்தான் இவ்விடத்தை விட்டுச் செல்லுவேன். சற்று நேரம் இருந்தால் கட்டாயம் என் அண்ணு வந்து விடுவான்."

"என்ன பெண்ணே இது? என்னை நீ யார் என்று தெரிந்து கொள்ளாமல் பேசு

கிறாய். நீ இப்பொழுது என்னுடன் வரப் போகிறாயா இல்லையா?" என்று சற்றுப் பலத்த குரலுடன் கார்குரி கேட்டவுடன் அவள் குரலைக் கேட்டுச் சற்றுப் பயந்தாள் கலா. இருந்தாலும் தைரியத்தைக் கைவிடாமல், "என்ன அம்மா! நான் வரவில்லை என்றால் நீங்கள் ஏன் தொந்தரவு செய்கிறீர்கள்? அண்ணா வந்தவுடன் எங்கே நாங்கள் போகவேண்டும் என்பதைப் பற்றி யோசிக்க வேண்டும்" என்று கூறினாள்.

"சரி, நீ என்னுடன் வரவேண்டாம். நீ வைத்துக் கொண்டிருக்கிறாயே பறக்கும் ஜமக்காளம், அதை எப்படிப் பறக்கவிடுவது என்பதை மாத்திரம் காண்பித்து விடு. பார்த்து விட்டு நான் போகிறேன். நான் உன்னை ஒன்றும் செய்யவில்லை ஜமக்காளம் பறக்கும் விதம் தெரிந்தால் போதும்!" என்றாள் அவள். பறக்கும் ஜமக்காளம் என்று கார் குரி சொன்னவுடன் கலாவுக்குத் தூக்கிவாரிப்போட்டது. பதில் ஒன்றும் சொல்லாமல் தயங்கி நின்றாள்.

"என்ன கலா, எப்படி எனக்கு உன்னிடம் இருக்கும் பறக்கும் ஜமக்காளத்தைப் பற்றித் தெரிந்தது என்றுதானே யோசிக்கிறாய்? சொல்லுகிறேன் கேள். எனக்குப் பறக்கும் ஜமக்காளம் என்றாலே மிகவும் ஆசை. என் வாழ்க்கையில் எவ்வளவோ முயன்றும் எனக்குக் கிடைக்கவில்லை. வானத்தில் ஜிவ்வென்று பறக்கும் ஜமக்காளத்தைப் பார்த்தவுடன் சந்தோஷங் கொண்டு ஜமக்காளத்தைப் பார்த்துக்கொண்டிருந்தேன். அதிர்ஷ்ட வசமாக நான் வசிக்கும் இடத்துக்கு அருகிலேயே நீங்கள் இருவரும் இறங்கினீர்கள். தயவுசெய்து அந்த ஜமக்காளத்தை எப்படி ஆகாயத்தில் பறக்கச் செய்வது என்பதை மாத்திரம் சற்றுக் காண்பித்துவிடு."


"அண்ணா வரட்டும். பிறகு ஜமக்காளத்தை எப்படி உபயோகிப்பதுஎன்பதைக் காட்டச் சொல்லுகிறேன்."


"எதற்காக அண்ணா வரவேண்டும்? ஜமக்காளத்தில் நீதான் முதலில் உட்கார்ந்து கொண்டு பறந்து வந்தாய். உடனே அந்த ஜமக்காளத்தை வெளியே எடுத்து எப்படி உபயோகிப்பது என்பதைக் காண்பிக்கப் போகிறாயா, இல்லையா? உன் அண்ணா இனிமேல் உன்னிடம் வராதபடியே செய்கிறேன். என்னை யார் என்று நினைத்தாய். இதோ பார், நான் யார் என்று? நான் கார்குரி அல்ல. நான்தான் பிரபல மந்திரவாதி 'கார்குர்'" என்று சொல்லி முடிப்பதற்குள், கலாவின் எதிரில் கார்குரிக்குப் பதிலாக மந்திரவாதி கார்குர் தோன்றினான். அப்பப்பா, என்ன பயங்கரம்! எத்தனை பெரிய உருவம்!

கலாவின் தகப்பனார் சொல்லியபடியே நீண்ட தாடி, பெரிய மீசை, பரட்டை, செம்பட்டைத் தலைமயிர், பெரிய மூக்கு அதற்கு ஏற்றாற்போலக் காதுகளும், கண்களும் அவனுக்கு இருந்தன. அவனைப் பார்த்தவுடன் நடுங்கினாள் கலா.

அவனுடைய தோற்றத்தைக் கண்டு பயந்து விட்டதைப் போலவே, அவனுடைய மிரட்டுதலைக் கேட்டுக் கதி கலங்கிப் போனாள் கலா. அவன் எவ்வாறெல்லாம் தன்னைத் துன்புறுத்துவானோ என்று பயந்தாள்.

கார்குர் தனது வலது கையை ஆகாயத்தை நோக்கி நீட்டினான். அவன் கையில் ஒரு மந்திரக்கோல் வந்தது. அந்த மந்திரக் கோலினால் கலா நின்ற இடத்தைச் சுற்றி மூன்று முறை மந்திரக்





கோலினால் பூமியில் ஒரு கோடு போட்டான். 'இந்த இடத்தைவிட்டு நீ வெளியே போகக் கூடாது' என்று உத்தரவிட்டான். "கலா! சற்றுப்பொறு. உன்னை ஒருவரும் கண்டு பிடிக்க முடியாதபடி ஒரு உயர்ந்த இடத்துக்கு அழைத்துப் போகிறேன்" என்று சொல்லிக் கொண்டிருக்கும் பொழுதே கார்குர் திடீரென்று நின்று கொண்ட இடத்திலிருந்து மறைந்தான்.

அதைப் பார்த்த கலா சந்தோஷமடைந்து நாலாபக்கமும் பார்த்தாள். ஒருவரையும் காணவில்லை. எங்கேயாவது தப்பி ஓடிவிடலாம் என்று நினைத்தாள். மெதுவாக ஓடுவதற்குக் காலைத் தூக்கி வைத்தாள். கால மந்திரவாதி மந்திரக் கோலினால் போட்ட கோட்டைத் தாண்டி வைக்க முடியவில்லை. எவ்வளவோ முயன்று பார்த்தாள். அந்த இடத்தை விட்டு நகர முடியவில்லை. ஆனால் சில நிமிஷத்துக் கெல்லாம் அவள் நின்று கொண்டிருந்த இடத்தைச் சுற்றிலும் கார்குர் கோடிட்ட இடத்தில் பூமியில் ஒரு பிளவு ஏற்பட்டது. உடனே ஏதோ ஒரு சக்தி கலாவை வானத்தை நோக்கி 'விர்' என்று இழுத்துச் சென்றது. கலா உரக்கக் கத்தினாள். உரக்கக் கத்தி என்ன பிரயோசனம்? அந்த இருட்டில் யார் அங்கு வந்து உதவி புரிவார்கள்?

வானத்தை நோக்கி இழுத்துச் செல்லப்பட்ட கலா வானத்தில் பளிங்குக் கற்களினால் கட்டப்பட்டிருந்த ஒரு பெரிய பங்களாவுக்குள் நுழைந்தாள். "ஆஹா. எவ்வளவு அழகான கட்டடம். பல வர்ணமுள்ள பிரகாசமான விளக்குகள். இந்த இடத்தில் எப்படி இதுமாதிரியான வீடு வந்தது? என்னை யார் இங்கு கொண்டு வந்தது? இதைவிட்டு எப்படி வெளியே போவது?" என்று கலங்கினாள் கலா.

"என்ன அம்மா யோசிக்கிறாய்? அஸ்திவாரம் இல்லாமல் ஆகாயத்தில் கோட்டை மாதிரி ஒரு வீடு எப்படி வந்தது என்று தானே. அது யோசிக்க வேண்டிய விஷயம்தான். பிரத்தியேகமாக உனக்காகவே தான் மந்திர சக்தியினால் இந்தப் பங்களாவை உண்டாக்கினேன். உன்னுடைய பறக்கும் ஜமக்காளத்தை எப்படி உபயோகப்படுத்துவது என்பதை நீ சற்று நேரத்துக் கெல்லாம் தெரியப் படுத்தாவிட்டால் பிறகு உனக்கு என்ன நேரிடும் என்பது எனக்கே தெரியாது. இனிமேல் நீயும் உன் அண்ணனைக் காண முடியாது. அண்ணனும் உன்னைப் பார்க்கச் சந்தர்ப்பம் கிடைக்காது. உனக்கு யோசிக்கச் சற்று அவகாசம் கொடுக்கிறேன். நீ கெட்டிக்காரப் பெண்ணாக இருந்தால் இங்கிருந்து உயிர் தப்பிப் பிழைக்கலாம். இல்லாவிட்டால் ஆகாரம் இல்லாமல் இங்கேயே இறக்க வேண்டியதுதான். இந்தப் பங்களாவின் நான்கு பக்கங்களிலும் ஆகாயம் தான் இருக்கிறது. ஆதலால் இந்தப் பங்களாவை விட்டு நகர்ந்தால் நீ கீழே விழுந்து இறக்க வேண்டியதுதான். ஆதலால் நீ தப்பிப் போவதற்கு வழி கிடையாது. நன்றாக யோசனை செய். நான் இதோ அரை நொடியில் வந்துவிடுகிறேன்" என்று கூறினான். பிறகு அவன் அவ்விடத்தை விட்டு அகன்றான்.

பாவம், கலா என்ன செய்வாள்? அவள் கண்ணீர் பெருக்கினாள். (தொடரும்)

மலைச்சாரல் மாதவி



அத்தியாயம் 13

மாதவியின் மனநிலை

மலைச்சாரல் பங்களாவுக்குப் போய் வந்த மறுநாளும், சிவசங்கரனுக்கு ஏதோ காரணத்தால் கோர்ட்டில் விடுமுறை. ஆகவே காலையில் அவர் எழுந்தவுடன் மலைப் பாதையை நோக்கிப் புறப்பட்டார். அவர் அந்தப் பங்களாவுக்குப் போய்ச் சேர்ந்தபொழுது மாதவி தோட்டத்தில் நிற்கிறாளா என்று அவருடைய கண்கள் தேடின.

இவர் வீட்டைத் தாண்டியபோது மாதவி பெருக்கிய குப்பையை வாசலில் போடுவதற்காக எடுத்துக் கொண்டு வெளியே வந்தாள். சிவசங்கரன் மலைப்பாதைக்கருகில் நிற்பதைப் பார்த்ததும் குப்பையைக் கூடக் கீழே போட மறந்து அப்படியே திகைத்து நின்றாள்.

சிவசங்கரன் தம்மையும் அறியாமல் புன்னகை புரிந்தார். மாதவியும் இலேசாகப் பற்கள் தெரியும்படி சிரித்தாள். சிவசங்கரனின் இதயம் மகிழ்ச்சியால் நிறைந்தது.

"நீங்கள் இன்று அருவிக்குப் போகவில்லையா?" என்று கேட்டார் சிவசங்கரன்.

"இதோ, போகப் போகிறேன்" என்றாள் மாதவி புன்முறுவல் பூத்தபடியே.

அதற்கு மேல் அங்கே நிற்பது அவருக்கு உசிதமாகப் படவில்லை. மெதுவாக அங்கிருந்து போக மனமில்லாமல் 'வருகிறேன்' என்று கூறிவிட்டு நகர்ந்தார்.

கொஞ்ச தூரம் சென்றபிறகு ஆவல் உந்தித் தள்ளத் திரும்பிப் பார்த்தார். மாதவி தமக்குப் பின்னால் வருவதைக் கண்டு அவருக்கு ஆனந்தம் பொங்கிப் பெருகியது. இரண்டு மூன்று தடவைகள் திரும்பிப் பார்த்துவிட்டு நடந்தார். கூடவே ஏதோ சங்கடமாகவும் இருந்தது. யாராவது

ஆனந்தி

பார்த்துத் தவறாக எண்ணிக் கொண்டு விட்டால் என்ன செய்வது என்று கவலைப்பட்டார். அவருடைய மனப் போராட்டம் இன்னும் தீராதபடியால் மாதவிக்கும் தனக்கும் உள்ள தொடர்பைப் பற்றி யாரும் தம் இஷ்டப்படி பேசுவதை அவர் விரும்பவில்லை.

ஆயினும் அவருடைய நடையின் வேகம் குறைந்தது. ஒரு சந்தன மரத்தை அண்ணாந்து பார்த்தார். இரண்டடிக்குப் பிறகு ஒரு புதரைக் குனிந்து பார்த்தார். நாலடிக்குப் பின் ஒரு நாக்கமரக் கிளையில் உட்கார்ந்து உல்லாசமாக ஊஞ்சலாடிக் கொண்டிருந்த மரங்கொத்திப் பறவையை ஊன்றிக் கவனித்தார். பத்தடி நடந்த பின் தன் குட்டியை வயிற்றோடுசேர்த்து அணைத்துக் கொண்டு சோம்பேறித்



தனத்தோடு மரத்தடியில் உட்கார்ந்திருந்த குரங்கைப் பார்த்துவிட்டு நின்றார். குரங்குக்குட்டி அன்னையின் அணைப்பிலிருந்து தன்னை விடுவித்துக் கொண்டு கீழே கிடந்த எதையோ பொறுக்கித் தின்றது. பிறகு தன் தாயின் வாலைப்பிடித்து இழுத்து விளையாடியது.

சிவசங்கரன் தம் கையை ஓங்கித் தட்டினார். அடுத்த கணம் குட்டியை மார்போடு அணைத்துக் கொண்டு அந்தக் குரங்கு ஒரே தாவலில் மரத்தின் உச்சிக்குப் போய் உட்கார்ந்து கொண்டு அவரைப் பார்த்துக் ''கொர்'' என்று உறுமியது. அது ஆத்திரத்தால் இப்படிச் சீறியதா? அல்லது தன்னை அழகு காட்டிப் பழிக்கிறதா என்பது சிவசங்கரனுக்குத் தெரியவில்லை.

மாதவி அருகில் வந்து விட்டதை உணர்ந்தார் சிவசங்கரன். அவருக்குச் சிரிப்பு வந்தது. எதற்காக என்பது தான் புரியவில்லை. சிரித்துக் கொண்டே மாதவியைத் திரும்பிப் பார்த்தார். மாதவியும் இவர் செய்ததை யெல்லாம் பார்த்துக் கொண்டே வந்தபடியால் அவளுக்கும் சிரிப்பு வந்து விட்டது.

இரண்டு பேருக்கும் அதே நிமிஷத்தில் தங்களுடைய மனநிலை தெளிவாகப் புரிந்து விட்டது. காரணமில்லாமல் சிரித்த சிரிப்பு அவர்களுடைய அன்பை ஊர்ஜிதப் படுத்துவதற்குக் காரணமாக அமைந்து விட்டது. அவர்களுக்கே தெரியாமல் ஒரு பக்கத்தில் பதுங்கிக் கொண்டிருந்த அந்தப் பற்றுதல் இந்தச் சிரிப்பின் மூலம் தைரியமாக வெளியே வந்து உலாவத் தொடங்கியது. மாதவியின் உள்ளத்திலும் தன்னைப் போலவே அந்தப் பாச உணர்ச்சி ஏற்பட்டிருக்கிறது என்பதைச் சிவசங்கரன் நன்கு உணர்ந்து கொண்டார்.

அதுவரையில் அவர் மனத்தில் சங்கடப் படுத்திக் கொண்டிருந்த குழப்பங்களெல்லாம் அடியோடு மறைந்து போய் விட்டன. மாதவியின் களங்கமற்ற, மகிழ்ச்சி ததும்பும் பொன் முகத்தைப் பார்த்துக் கொண்டே இருப்பதற்காகத் தான் தம்மை இறைவன் படைத்திருக்க வேண்டும் என்று எண்ணினார்.

மாதவியின் உள்ளத்திலும் கிட்டத்தட்ட இதேமாதிரி உணர்ச்சி அலைகள் எழும்பி, விழுந்து நடம் செய்தன. சிவசங்கரனிடம் அன்று மணிபர்ஸைக் கொடுத்தபோதே தன் இதயத்தையும் சேர்த்துக் கொடுத்து விட்டதை அப்போதுதான் அறிந்தாள். அவருடைய குழந்தைத்தனமான சுபாவம் அவளைக் கவர்ந்து விட்டது.

நிர்மலமான வெள்ளை மனமுடைய சிவசங்கரன்மீது மாதவிக்கு அன்பு சுரந்ததில் ஏதும் அதிசயப் படுவதற்கில்லை. அவருடைய தோற்றம் எவ்வளவு தூய்மையாகவும், சுத்தமாகவும் இருந்ததோ, அதேபோல் அவரது இதயமும் சுத்தமானது என்பது அவளுக்கு நன்றாகப் புரிந்து விட்டது.

அவளுடைய உள்ளத்திலும் இத்தனை நாட்களாகப் பலவித போராட்டங்கள் நடந்து கொண்டுதான் இருந்தன. யாருக்குமே தன் மனத்தில் இடம் கொடுக்காமல் மாதவி அதி ஜாக்கிரதையாக இருந்து வந்தாள். அவளுடைய

வாழ்க்கையில் சிறு வயதிலேயே பலவிதமான துன்பங்கள் ஒன்றன்பின் ஒன்றாக ஏற்பட்டு விட்டன. உண்பதற்கும் உடுப்பதற்கும் ஒன்றுமில்லாமல் தெருவில் நிற்கவில்லை என்றாலும், மனத் துயரங்களும், சண்டை பூசல்களும் அவள் நெஞ்சை மிகவும் நோகச் செய்து விட்டிருந்தன. அத்தனை துன்பங்களையும் சமாளிப்பதற்காகத் தன்னுடைய கோமளமான பூப்போன்ற இதயத்தை, இரும்பையொத்த கடினமுடையதாகச் செய்து கொண்டு விட்டாள். அதாவது அதுவரையில் அவ்வாறு எண்ணியிருந்தாள். 'தன் நெஞ்சு இரும்பாகி விட்டது: தன் தம்பி ஒருவனிடம் தவிர வேறு யாருக்கும் தன் நெஞ்சில் இடம் கிடையாது. அவனுக்காகவே தான் உழைக்க வேண்டும். அவனுடைய சந்தோஷத்தைக் கண்டு, தான் திருப்தி அடைய வேண்டும்' என்று நினைத்தாள். தனக்கென்று தனியாக இனிமேல் எதுவுமே கிடையாது என்று மாதவி உறுதியுடன் இருந்தாள்.

ஆனால் சிவசங்கரனைப் பார்த்தது முதல் தான் இரும்பு என்று நினைத்த தன் இதயம் உள்ளே இன்னும் மிருதுவாகத்தான் இருக்கிறது என்பதையும், வெளியே இரும்பாகத் தோன்றுவது வெறும் கவசம்போன்றதுதான் என்றும் உணர்ந்து கொண்டாள்.

இளநீர் சீவும்போது சிவசங்கரன் பரிவோடு காயம்பட்டு விடப் போகிறதே என்று கவலைப்பட்டதைக் கண்டு அவள் நெஞ்சம் இளகியது. மாதவியின் வாழ்நாளில் அவளுக்காக ஒருவர் கவலைப்பட்டது இதுதான் முதல் தடவை. மற்ற அனைவரும் அவளைப் பெரியவளாக மதித்து நடந்தார்கள். சிற்றப்பா வீட்டில் அவளுக்கு ஏதும் தெரியாமல் இருக்கக் கூடாது என்று நினைத்தார்கள். எதையும் தெரியாதென்று சொல்லி அங்கே பிழைக்க முடியாது. "குட்டிச் சுவராட்டமா வயசாச்சு. தெரியாது என்று சொல்ல வெட்கமாக இல்லையா?" என்று யாராவது சீறுவார்கள்.

அங்கே யிருந்து பிய்த்துக் கொண்டு கிளம்பிய பிறகு கருணாகரன் அவளைத் தெய்வமாகப் போற்றினான். தனக்கு என்ன கஷ்டம் இருந்தாலும் தமக்கையிடம் கூறி ஆறுதல் பெறுவான். அவள்தான் "இதைச் செய்யாதே. அதைப் பண்ணாதே" என்று அவனுக்கு யோசனை கூறுவாள். அவனைப் பற்றிக் கவலையும் படுவாள். கருணாகரன் தன் தமக்கையைத் தெய்வமாகப் போற்றியதால் அவளைப் பற்றிக் கவலைப்பட்டதில்லை. நாம் இறைவனைப் போற்றுகிறோம். அவரைப்பற்றி, அவருக்குஎன்ன வேண்டுமோ என்னமோ என்று கவலைப் படுகிறோமா? அதுபோலவே அவனுக்கும் தன் அக்காளைப் பற்றி அதிக சிந்தனை கிடையாது. தான் ஆறுதல் பெறுவதற்காக வென்றே இறைவனால் அவள் படைக்கப்பட்டிருக்கிறாள் என்று நினைத்து வந்தான் கருணாகரன்.

மாதவிக்கும் தான் பெரியவளாக இருந்தே வழக்கமாகி விட்டிருந்தது. இப்போது சிவசங்கரன் தன்னைப் பற்றி அக்கறை எடுத்துக் கொண்டது அவளுக்கு முதலில் விநோதமாக இருந்தாலும், மனத்துக்கு இதமாகவும், திருப்தியாகவும் இருந்தது.

எந்தக் காரியம் செய்தாலும் அதில் முன்போலத் தன்னால் கவனம் செலுத்த முடிவதில்லை என்பதை மாதவி சீக்கிரம் கண்டு கொண்டாள்.

அந்தப் புதிய மனிதரைப் பற்றியே தன் மனம் சிந்தனை செய்து கொண்டிருப்பதை அறிந்து வியப்படைந்தாள். "இந்த மனிதரிடம் அப்படி என்ன இருக்கிறது?" என்று தன்னையே கேட்டுக் கொண்டாள்.

முதல் தடவை அவரைப் பார்த்த போதே அவளுக்கு ஒருவிதக் குதூகலம் உண்டாயிற்று. தன்னைப் பார்த்த உடனே அவர் தலையைக் குனிந்து கொண்டதையும், தான் அவரைத் தாண்டிய பிறகு ஆவலுடன் திரும்பிப் பார்த்ததையும் நினைத்தாலே அவளுக்குச் சிரிப்பு வந்தது.

அத்தியாயம் 14.
மலர்ப் பாதை

கிருஷ்ணன் குட்டியும், அவரும் அன்று வீட்டுக்கு வந்து விட்டுப் போன பிறகுதான் எவ்வளவு தூரம் தன் மனம் சிவசங்கரனிடம் ஈடுபட்டிருக்கிறதென்பதை நன்றாக அறிந்து கொண்டாள் மாதவி.

அவர்கள் சென்றதும் மாதவி கருணாகரனிடம், "ஏன் தம்பி! எல்லாரிடமும் இவ்வளவு வெகுளித்தனமாகப் பேசுகிறாய்? அவர்கள் ஏதாவது நினைத்துக்கொள்ளமாட்டார்களா?" என்றாள்.

கருணாகரன், "நினைத்துக் கொள்ளட்டுமே. தமக்கென்ன? கிருஷ்ணன் குட்டி என்னைப் பற்றி நன்றாக அறிந்தவர். சிவசங்கரனுக்கு என்னைப் பிடிக்காவிட்டால் ரொம்ப நல்லதாய்ப் போச்சு.



துப்பாக்கியை நிமிர்த்திப் பிடிப்பதா, தலைகீழாகப் பிடிப்பதா என்று தெரியாதவனுடன் நான் வேட்டைக்குப் போக வேண்டிய அவசியமிராது'' என்றான்.

''எல்லோரையுமே அப்படித் தூக்கி எறிந்து பேசாதே, தம்பி! அது உனக்கு நல்லதல்ல'' என்றாள் அருமைத் தமக்கை மாதவி. சிவசங்கரனைப் பற்றி அவன் அவ்வாறு பேசியது அவளுக்குச் சிறிதும் பிடிக்கவில்லை.

''தூக்கி எறிவதா? சிவசங்கரனைத் தூக்கி எறிய நான் இன்னும் நான்கு வருஷங்களாவது ஹடயோகம் செய்ய வேண்டும். உடம்பால் உழைக்காமல் சாப்பிட்டால் அப்படித்தான்'' என்றான் கருணாகரன்.

மாதவிக்கு இன்னும் வருத்தமாக இருந்தது. சிவசங்கரன் நல்ல உடற்கட்டு உடையவர்தான். கருணாகரன் சற்று மெலிந்தவன். அதனால் அவனுக்குக் கொஞ்சம் நன்றாக இருப்பவர்களைப் பரிகசிப்பதில் உற்சாகம்.

''அவர் ஒன்றும் நீ கூறுவதுபோலச் சோம்பேறியாக இருக்க முடியாது. பெரிய பொறுப்பான பதவி வகிப்பவர் சோம்பேறியாக இருக்க முடியுமா? நீ இப்படியே பேசி எல்லாரிடமும் கெட்ட பெயர் வாங்கிக் கொள்கிறாய். மற்றவர்களை மதித்து நடக்க நீ கொஞ்சம் கற்றுக்கொள்ள வேண்டும்'' என்று கடுமையாகக் கூறினாள் மாதவி.

கருணாகரனுக்கு அவளுடைய குரலில் தொனித்த கடுமை வியப்பை அளித்தது. சிறிது தயக்கத்தோடு ஏதோ சொல்ல வந்தவன், ''சரி அக்கா!'' என்று கூறிவிட்டு எழுந்து வெளியே போய் விட்டான்.

மாதவிக்கு அவன் போன பிறகுதான் அவ்வளவு கடுமையாகப் பேசியிருக்க வேண்டியதில்லை என்று பட்டது. ஆனாலும் சிவசங்கரனைப் பற்றித் தன் அருமைத் தம்பியே சற்றுக் குறைத்துச் சொன்னாலும் அதைத் தன்னால் சிறிதும் விரும்ப முடியாது என்பது அவளுக்குத் தெளிவாகப் புலனாகி விட்டது.

இன்றுஇந்த மலைப்பாதையில் அர்த்தமில்லாமல் சிரித்துக்கொண்டு நின்ற பொழுது அவர்மீது தனக்கு எத்தகைய பாச உணர்ச்சி ஏற்பட்டிருக்கிறது என்பதை மாதவி நன்றாக உணர்ந்துகொண்டாள். கொஞ்ச நஞ்ச மிருந்த குழப்பமும் அவரோடு பேச ஆரம்பித்த உடனே தீர்ந்து போய்விட்டது.

''சிறு குழந்தை மாதிரி விளையாடுகிறீர்களே?'' என்றாள் மாதவி.

''எனக்கு அம்மா இருக்கும் வரை நான் குழந்தைதானே!'' என்றார் சிவசங்கரன். இதைப் பல தடவைகள் பல பேர்கள் கூறி மாதவி கேட்டிருந்த போதிலும் அப்போது அவளுக்கு அது புதிதாகத்தான் தோன்றியது.

''இங்கேயே நிற்கவேண்டாம். மேலே போகலாம் வாருங்கள்'' என்று குயிலினுமினிய குரலில் அழைத்தாள் மாதவி.

வாழ்க்கைப் பாதையில் தன்னோடு துணையாக வரும்படி அவள் அழைப்பதாகவே சிவசங்கரனுக்குப் பட்டது. அந்த நிமிஷம் முதல் அவர் தமக்குத் தெரியாமலேயே மாதவியின் வாழ்க்கையில் பிணைந்து விட்டார்.

மலைமீது சிறிது தூரம் மௌனமாக ஏறிச் சென்றார்கள். சிவசங்கரனுக்குத் தாம் பூவுலகத்தில் நடப்பதாகவே தோன்றவில்லை. மாதவிக்கோ அந்தக் கூழாங் கற்கள் நிறைந்த பாதை அப்போது மணம் பொருந்திய பாரிஜாத மலர்களும், மிருதுவான ரோஜா இதழ்களும், மென்மையும், சுகந்தமும் பொருந்திய சண்பக மலர்களும் தூவப்பட்ட சுவர்க்கபுரிக்குச்செல்லும் பாதையாகத் தோன்றியது. அங்கங்கே பாதையின் குறுக்கே சலசலவென்று ஓடிய சிறிய ஜலதாரைகள் பொற் கலசத்திலிருந்து பொங்கி வரும் அமுதம் என்று மாதவிக்குத் தோன்றியது.

வழக்கமாகக் கேட்டு வரும் பட்சிஜாலங்களின் கலகலத் தொனி இன்று மதுர கீதமாக அவர்கள் காதில் ஒலித்தது. தினந்தோறும் பார்க்கும் மலைச்சாரல் இன்று புதிய சோபையுடன் பொலிவுற்றுத் திகழ்ந்தது.

அருவிக்கரையை அடையும் வரையில் அவர்களுக்கு ஒன்றுமே பேசத் தோன்றவில்லை. இருவருக்கும் மகிழ்ச்சியால் மனம் நிறைந்திருந்தது.

அருவியின் அருகில் சென்றதும் மாதவி ஒரு பாறை மீது உட்கார்ந்தாள். சிவசங்கரனுக்குத் தாம் என்ன செய்ய வேண்டும் என்பதைப் பற்றிச் சந்தேகம் வந்து விட்டது. தான் அங்கே இருப்பது உசிதமாக இருக்காது என்று



தோன்றியது. ஆனால் மாதவி உட்கார்ந்திருப்பதைப் பார்த்தால், தானும் அங்கே இருக்க வேண்டுமென்று எதிர் பார்ப்பது போலத் தோன்றியது.

ஒரு நிமிஷம் தயங்கிய பிறகு, "நானும் இங்கே உட்காரலாமா?" என்று கேட்டார் சிவசங்கரன்.

அருவி நீர் பாறைகளில் விழுந்து நாலாபுறமும் தெறிப்பதை உற்றுப் பார்த்துக் கொண்டிருந்த மாதவி, "இந்த இடம் எனக்கு மாத்திரம் சொந்தமா என்ன? தாராளமாக உட்காருங்கள்" என்றாள்.

அடர்ந்த மரங்களால் சூழப்பட்டுக் குளுமையாக விளங்கிய அந்த இடம் அவர்களுடைய உள்ளத்திலும் குளுமையை நிலைபெறச் செய்தது. காற்றடிக்கும் போது அருவியிலிருந்து எழும்பிய சாரல் பனி பெய்வது போல் அவர்கள்மீது பட்டது.

புகைப் படலத்தைப் போல அந்தச் சாரல் அருகே நெருங்கி வந்து உடலில் படும் பொழுது விவரிக்க முடியாத சுகம் உண்டாயிற்று. மாதவியின் தளிர்க் கரங்களின் ஸ்பரிசம் இவ்வாறுதான் இருக்கும் என்று சிவசங்கரன் எண்ணிமிட்டு மகிழ்ந்தார். அதையே மாதவியும் நினைத்து மகிழ்ந்தாள்.

இருவரும் வெகு நேரம் அங்கேயே உட்கார்ந்திருந்தார்கள். சிவசங்கரனுக்குத் தாம் பார்த்த சினிமாக்களில் காதலர்கள் சந்திக்கும் இடங்களெல்லாம் ஞாபகம் வந்தது. அவர்கள் எப்படிப் பேசினார்கள் என்று நினைத்துப் பார்த்தார். ஆனால் எதுவும் உபயோகப் படவில்லை. பிரியமாக எந்த வார்த்தையும் சொல்ல வரவில்லை.

'காற்றடிக்கிறது', 'மரங்கள் பசுமையாக இருக்கிறது', 'தண்ணீர் குளுமையாக இருக்கிறது', 'வானம் நீலமாக இருக்கிறது' என்று நான்காம் வகுப்புச் சிறுவன் வியாசம் எழுதுவது போல் வாக்கியங்களைக் கோத்துக் கோத்துச் சொல்லிக் கொண்டிருந்தார்.

மாதவிதான் அவரைப் பற்றிக் கேள்விகள் கேட்டாள்.

"இங்கே உங்களுடன் உங்கள் தாயார் இருப்பதாகக் கேள்விப் பட்டேன். உங்களுக்கு உடன் பிறந்தவர்கள் இருக்கிறார்களா?" என்று கேட்டாள் மாதவி.

"ஒரு தமக்கையும், ஒரு தங்கையும் இருக்கிறார்கள். இருவரும் விவாகமாகிப் புருஷன் வீட்டில் இருக்கிறார்கள்."

"உங்கள் வீட்டுக்கு இன்னும் யாரும் வரவில்லை போலிருக்கிறது!"

"ஏன்? வருவார்களே. கமுகமலைக்கு வந்த பிறகுதான் வரவில்லை. கோடை காலத்தில் என்னுடைய தாயாரைப் பார்க்க வருவார்கள்."

மாதவி கல கல வென்று வாய்விட்டுச் சிரித்தாள். அருவியின் 'சோ' என்ற ஓசையோடும், பட்சி ஜாலங்களின் கல கலத்தொனியோடும், மாதவியின் சிரிப்பு இழைந்து, கலந்து, அந்த மலைப் பிரதேச மெங்கும் எதிரொலித்தது.

விஷயம் புரியாமல் அவர், "எதற்குச் சிரிக்கிறீர்கள்?" என்று கேட்டார்.

"நான் உங்கள் சகோதரிகளைப் பற்றிக் கேட்கவில்லை. உங்களைக் கணவனாக அடையும் பாக்கியம் இன்னும் யாருக்கும் கிடைக்கவில்லை போலிருக்கிறது என்று சொன்னேன்" என்று விளக்கம் கூறினாள் மாதவி.

சிவசங்கரனுக்கும் இப்போது சிரிப்பு வந்தது. "இல்லை. இன்னும் நான் விவாகம் செய்து கொள்ளவில்லை. அதை ஏன் கேட்கிறீர்கள்?" என்று கேட்டார் சிவசங்கரன்.

மாதவியின் முகம் குங்குமமாகச் சிவந்தது. அதற்கு அவள் பதில் சொல்லாமல், "நீங்கள் எங்கள் வீட்டுக்கு அடிக்கடி வரவேண்டும்" என்றாள்.

"நீங்களும் என் வீட்டுக்கு வர வேண்டும்" என்றார் சிவசங்கரன்.

"என் தம்பியின் சுபாவம் உங்களுக்கு ஒரு வேளை பிடிக்காது. சற்றுப் படபடப்பாகப் பேசுவான். ஆனால் அவன் பொல்லாதவன் அல்ல. அவனைப் பற்றி நீங்கள் தவறாக நினைத்துவிடாதீர்கள்."

"ஒரு நாளும் இல்லை. அவன் எப்படிப் பேசினாலும் அது என்னைப் பாதிக்காது. வயதில் சிறியவன்தானே. அவனுடைய வயதில் நானும் இப்படித்தான் இருந்தேன். எல்லாம் தானாகச் சரியாகப் போய்விடும்."

"அப்படியானால் ஞாயிற்றுக்கிழமை காலை நம் வீட்டுக்கு வந்து விடுங்கள். அங்கேயே பலகாரம் சாப்பிட்டு விட்டுப் பிறகு மலைக்கு வரலாம். நீங்கள் ஒரு வேளை வராமலிருந்து விடுவீர்களோ என்று எனக்குப் பயமாக இருந்தது."

"இப்போது அந்தப் பயம் நீங்கி விட்டதல்லவா?"


"நீங்கி விட்டது, கட்டாயம் வருவீர்கள் என்ற நம்பிக்கைகூட ஏற்பட்டு விட்டது. நீங்கள் இப்போது என்ன செய்யப் போகிறீர்கள்?"

"ஆமாம்! வெகு நேரமாகி விட்டது. நான் இன்னும் கொஞ்ச தூரம் மலை ஏறி விட்டுப் பிறகுதான் வீட்டுக்குப் போகப் போகிறேன்."

"எனக்கும் நேரமாகி விட்டது! ஸ்நானம் செய்து விட்டுச் சீக்கிரம் ஓட வேண்டும்" என்று கூறிக்கொண்டே எழுந்தாள் மாதவி. (தொடரும்)

உங்கள் அழகை அதிகரிக்கிறது பாதுகாக்கவும் செய்கிறது!

அற்புத நறுமணமூட்டப்பட்ட சார்மிஸ் ஸ்னோ உங்கள் சருமத்தை அழகுறச் செய்கிறது, பாதுகாக்கிறது. எல்லா பருவ காலங்களிலும் சருமத்தை மிருதுவாகவும், வெல்வெட் போல வழவழப்பாகவும் வைக்கிறது. பவுடருக்கு ஆதாரமானது. எண்ணைப் பசையில்லாதது. சார்மிஸ் ஸ்னோ சொற சொறப்பும், வரிகளும், கோடுகளும், புண்களும் ஏற்படாமல் சிறந்த முறையில் தடுக்கிறது. பூச்சிக்கடிகள், வெடிப்புகளினின்றும் பாதுகாக்கிறது.





ஒரு கால்கேட்
உயர்தர சரக்கு

சார்மிஸ் ஸ்னோ

CSG/3

சார்மிஸ் பலகாரிய க்ரீமையும் டால்கம் பவுடரையும் பரீட்சித்திருக்கிறீர்களா?



எல்லா சோதனைகளிலும்
தேர்ச்சி பெற்ற
ஆதர்ச டூத் பிரஷ்
இன்றே வாங்குங்கள்-
அதன் குணாங்
களை தெரிந்து
கொள்ளுங்கள்
எல்லா
கடைகளிலும்
கிடைக்கும்
Aryan
இந்தியாவிலேயே மிக்க
அனுபவம் வாய்ந்த டூத் பிரஷ்
தயாரிப்பவர்கள்



சுலேகா
பேனாக்கள்
திருப்திகரமான
சேவைக்கு
SULEKHA
SOLD EVERYWHERE
Sole Distributors:
PENMAN'S INDUSTRIAL SERVICES
KANDIVLI, BOMBAY (S. D.)



HEWLETT'S
MIXTURE
HEWLETT'S MIXTURE
ஹியூலெட்ஸ்
மிக்ஸர்
80 ஆண்டுகளுக்கு மேலாக இந்த ஔஷதம் அஜீர்ணம், வயிற்றுக் கோளாறுகள், நெஞ்செரிச்சல், வாயு பொருமல் புளிப்பு, குடல் வியாதிகள் இவற்றிற்கு முக்கிய பரிகாரமாக உலக முற்றிலும் பெயர் பெற்று விளங்கி வருகிறது. அபினி சேர்த்தும், அல்லாமலும் 4 அவுன்ஸ், 10 அவுன்ஸ் அளவுகளில் எல்லா மருந்துக் கடைகளிலும் கிடைக்கும்.
C. J. HEWLETT & SON
(INDIA) PRIVATE LTD.,
MADRAS-3.

[அகமதாபாத் நவஜீவன் காரியாலயத்தினர் பிரசுரம் செய்திருக்கும் 'சத்தியமே தெய்வம்' என்னும் காந்தி வசன மஞ்சரியிலிருந்து ராஜாஜி எடுத்து எழுதியது]

76

அரசியல் என்பது மக்களுடைய க்ஷேம நலத்தைப் பற்றிய விவகாரம். மக்களுடைய க்ஷேம நலத்துக்காகப் பணி செய்யும் தகுதி யார் உடையவர் கள்? தெய்வத்தையும் மெய்ப் பொருளை யும் நாடும் மனிதர்களே அந்தப் பணி யில் ஈடுபட வேண்டும். தெய்வ பக்தி யில்லாதவர்கள் அரசியல் முயற்சிகளில் சேராம லிருப்பதே நலம்.

உண்மை தெய்வ பக்தி கொண்ட வர்கள் மக்களுடைய க்ஷேமத்தைப் பற் றிக் கவலைப்பட்டே தீரவேண்டும். ஆன படியால் அரசியலில் அவர்கள் சம்பந் தப்படாமல் இருக்க முடியாது. அரசியல் விவகாரங்களில் ஆண்டவனுடைய ஆட் சியை உணர்ந்து நிலைநாட்ட வேண்டும். தெய்வ பக்தியைப் புறக்கணித்த அரசி யலானது அழுக்குக்குச் சமானமாகும். அதைத் தீண்டலாகாது.

[யங் இந்தியா 18—6—25]

மக்களுடைய க்ஷேமத்தையும் நலனை யும் கவனியாத ஒருவன் எப்படி சமய வாழ்க்கை நடத்த முடியும்? பக்தர்கள் அரசியலில் புகுவதில் வியப்பில்லை. வாழ்க்கை முழுவதும் ஒன்றே. அதை இலாக்காக்களாகப் பிரித்து ஒன்றுக் கொன்று சம்பந்த மில்லாமல் 'இது சமூகத் தொண்டு, இது பொருள் நிலைத் தொண்டு. இது அரசியல் தொண்டு. இது வேறொன்றிலும் சம்பந்தப் படாத சமயத் தொண்டு' என்று பிரிவினை செய்து வாழ்க்கை நடத்த இயலாது. வாழ்க்கைக்குச் சம் பந்தப்படாத தெய்வ பக்தி எனக்கு விளங்காது. நன்னெறியே எல்லா முயற்சிகளுக்கும் பணிகளுக்கும் ஆதா ரம். சன்மார்க்கத்தோடு இணைக்கப் படாத பணிகள் வெறும் 'ஆகுல நீர'; அதாவது வெற்று ஆர்ப்பாட்டமே, பொருளற்ற வீண் முயற்சிகள்.

[ஹரிஜன், 24—12—38]

* * *

நம்முடைய உடலானது ஆரோக்கி யமிழந்து நோய்ப்பட்டால் அதைப் பற்றிக் கவனிக்க வேண்டிய கடமை நம தாகும். ஆரோக்கியம் இழப்பது நம் முடைய குற்றம், நோயைக் கவனிக்காம லிருப்பது அதைவிடப் பெரிய குற்றம். செய்து விட்ட குற்றத்தைத் திருத்திக் கொள்வது ஒருவனுடைய கடமை யாகும். நேற்று பிழை செய்தோம் என்று, இன்று அந்தப் பிழையைத் திருத்துவதற்கு வேண்டிய முயற்சியை எடுக்கச் சோம்பக் கூடாது. ஏன் நோய்ப்பட்டேன் என்று ஆராய்ந்து கவலைப்பட்டுத்தான் தீர வேண்டும். எந்த நியதியைப் புறக்கணித்தேன் என்று ஆராய்ந்து பார்த்து நோயைத் தீர்த்துக் கொள்ள வேண்டும்.

எல்லாம் விதிப்படி நடக்கும் என்று நாம் சும்மா இருக்கலாகாது. ஆண்டவ னுடைய இச்சைப்படி அனைத்தும் நடப் பது உண்மை. அவன் நம்மைப் போல் கண்டபடி நடப்பதில்லை. அவனுடைய இலக்கணம் வேறு; நம்முடைய இலக் கணம் வேறு. நியதிக்கு நியதியானவன் அவன். நியதி எப்போதும் தவறாது. உலகம் எல்லாம் மாறி மாறி இயங்கும். அவனுடைய நியதியோ, மாறாத நியதி.

[ஹரிஜன் 28—7—46]

முன்னேற்றம் என்பது ஒரே அடி யாக வந்து விடாது. பிழைகள் செய்து, அறிவடைந்து பிழைகளைத் திருத்திக் கொண்டேதான் முன்னேற்றமடைய முடியும். முற்றிலும் நன்மையாக ஆண்டவன் நமக்கு எதையும் தர மாட்டான். மீண்டும் மீண்டும் செய்த பிழைகளைத் திருத்திக் கொண்டுதான் பல தோல்விகளுக்குப் பின் வெற்றி அடைய முடியும். இதுவே தனி மனித னுடைய முன்னேற்றத்தைப் பற்றிய நியதி. அந்த நியதிப்படியே சமூக முன்னேற்றமும் அரசியல் முன்னேற்ற மும் நடைபெறும். பிழை செய்யும் உரிமையும் அதைத் திருத்திக் கொள் ளும் உரிமையும் நமக்கு உண்டு. அதுவே முன்னேற்றத்துக்கு வழி.

[கட்டுரைகள் 1933]

பிழையும் திருத்தமும் செய்து கொண்டேதான் மக்கட் சமூகங்கள் முன் னேற்றமடைந்திருக்கின்றன. சிலசமயம் புரட்சிகரமான மாறுதல்களும் செய்து முன்னேற்றமடைந்திருக்கின்றன. படிப் படியாகச் செல்லும் முறையும் புரட்சி முறையும் இரண்டுமே முன்னேற்றத்

துக்கு வேண்டும். பிரபஞ்சத்தில் மரணம் பிறப்பு என்று இரண்டு உண்டல்லவா? மரணம் என்பது புரட்சிகரம். பிறப்பும் உயிர் வாழ்வும் மெதுவாக நடைபெறும் விஷயம். படிப்படியாக வளர்ந்து வாழ்க்கை நடைபெறுகிறது. மரணம் அவ்வாறல்ல. திடீர் என்று நடைபெறுகிறது. மனித வர்க்கத்துக்கு உயிரைப் போலவே மரணமும் அவசியம். ஈசுவரன் பெரிய புரட்சிக்காரன். அவன் அனுப்பும் புயல்காற்றுகளுக்கும் பூகம்பங்களுக்கும் வெள்ளங்களுக்கும் சமானம் வேறு எந்தப் புரட்சிகரமான நிகழ்ச்சியுண்டு. பல்லாயிரம் ஆண்டுகளில் வளர்ந்த மலையும் நிலப் பிரதேசமும் ஒரு விநாடியில் அழிந்து போகும்படியான நிகழ்ச்சிகளை நடத்துகிறான். ஒரு மேகமும் காணப்படாத நிர்மலமான வானம் ஒரு நிமிஷத்தில் மேக மயமாகிப் போய் ஒரே வெள்ளமாகப் பெய்து கிராமங்களை அழித்து விடுவதைக் கண்டிருக்கிறேன். உலகத்தின் சரித்திர மெல்லாம் முன்னேற்றமும் புரட்சியும் கலந்த சரித்திரம்.

ஆன்மாவுக்கு மரணத்துக்குப் பின் மறுபிறப்பு உண்டு. முன் ஜென்மத்தில் அடைந்த சம்ஸ்காரங்கள் ஆன்மாவின் மறு பிறப்பில் தொடர்ந்து வரும். இந்த இந்துமதக் கொள்கையை நான் முற்றிலும் ஒப்புக் கொள்கிறேன்.

[ஹரிஜன் 18-8-40]

சமயங்கள் சர்க்காரினுடைய உதவியை எதிர்பார்க்கலாகாது. அரசாட்சியின் உதவியால் நிலைத்து நிற்கலாம் என்று எண்ணும் சமயங்கள் அழிந்து போகும். அத்தகைய சமயங்களில் சக்தி இல்லை என்றே வைத்துக் கொள்ளலாம். அரசாட்சியினுடைய ஆதரவைப் பெற்று நடைபெறும் சமயங்கள் நாட்டுக்கு நன்மை தரமாட்டா. தத்தம் பலத்தையும் உறுதியையும் கொண்டே சமயங்கள் நிலைபெற்று மக்களுடைய பக்தியை அடைய வேண்டும்.


[ஹரிஜன் 31—8—47]

வாழ்க்கையில் பூரணமாக நடத்தி வெற்றி பெற இயலாது என்பது எந்த தர்மத்தைப் பற்றியும் ஒரு ஆட்சேபணையாகாது. சமயமும் தார்மிகக் கொள்கையும் பக்தியோடு கலந்து குறிக்கோள்களாக இருக்குமே யொழிய ஊனுடலில் வாழும் மக்கள் சம்பூரணமாக அந்தக் கொள்கைகளின்படி வாழ்க்கை நடத்தி விட்டு வெற்றியைக் கொண்டாட முடியாது. உயர்ந்து உயர்ந்து சென்று கொண்டேயிருக்க வேண்டும். ஆன்மாவின் முன்னேற்றம் முடிந்து விட்டது என்று எந்தச் சமயத்திலும் திருப்தியடைய முடியாது. தர்ம வாழ்க்கை என்பது இந்த ஜென்மத்தில் முடிவு பெறாத யாத்திரை. இதனாலேதான் சமயங்கள் வேறுபாடும், கொள்கைகள் வேறுபாடுகளும் உலகத்தில் இருந்து வருகின்றன. எல்லாருக்கும் ஒரு கொள்கை அல்லது ஒரு மதம் என்பது முடியாத காரியம்.


இப்படி மேல்நோக்கிச் செல்வதற்கு முடிவில்லையாயினும் மேல் நோக்கிச் செல்லும் பக்தன் தினத்துக்குத் தினம் அதை நெருங்கிக் கொண்டே செல்வான். குறையாத பக்தியுடன் செல்வான். அதை அடைந்துவிட முடியாது என்பதனால் யாத்திரையில் தளரமாட்டான். இப்படித் தளர்ச்சி அடையாமல், பக்தியை இழக்காமல் குறிக்கோளை நோக்கிச் செல்வதே உண்மை வாழ்க்கை.

[யங் இந்தியா 22—11—28]

('ரகுபதி ராகவ' தொடர் கட்டுரைகள் அடுத்த இதழில் முடியும்)



இந்தியா உழைப்பு
இந்தியா மூலதனம்
இந்தியா சுய முயற்சி
இந்தியா சைக்கிள்
மாடல்கள்
• ரோட்ஸ்டர்
• ஸூப்பர் டீலக்ஸ்
இந்தியா ஸைக்கிள்
மானுபாக்சரிங் கோ. லிட்.,
கல்கத்தா-1
IC-ITH-ADF



தொன்றுதொட்டே
புகழ் பெற்றது
புராதன காலத்திலிருந்தே கிருமிகளை அடியோடு கொன்று வலுவூட்டுவதற்கு மிகச் சிறந்தது நீம் (வேம்பு) என இந்தியாவெங்கும் ஒப்புக்கொள்ளப் பட்டது.
வேம்பின் இயல்பான இக் குணங்கள் நீம் டூத் பேஸ்டில் அபரிமிதமாக இருப்பதே அதன் சிறப்புக்கு முக்கிய காரணம். பற்கள், ஈறுகள் நன்கு பாதுகாக்கப்பட, இன்றைய பல் வைத்தியத்தில் கையாளப்படும் பொருள்கள் யாவும் இதிலிருக்கின்றன. நீம் டூத் பேஸ்டுடன் வேறு எந்த பற்பசையையும் ஒப்பிட முடியாது.
நீம் டூத் பேஸ்ட்
Neem TOOTH-PASTE
கல்கத்தா கெமிகல் கோ., லிட்., கல்கத்தா-29. தென்னிந்திய ஆபீஸ்: 5/149, பிராட்வே, சென்னை-1

'அனஸின்'

மிகச்சிறந்தது, அதில் நான்கு மருந்துகள் சேர்ந்துள்ளன

1. க்வினைன் சல்பேட் 2. காப்பின்
3. பினஸிடின் 4. ஆஸிடில்ஸாலிஸிலிக் ஆஸிட்

வலிகளுக்கு நிவாரணமளிப்பதில் புகழ் பெற்ற 'அனஸின்' விஞ்ஞான முறையில் சேர்க்கப்பட்ட நான்கு மருந்துகளின் கலப்பாகும். இவைகள் நரம்புகளின் கேந்திர ஸ்தானங்களில் கூட்டாக வேலை செய்து, தலைவலி, ஜலதோஷம் ஜுரம், பல்வலி, மற்றும் தசைவலிகளுக்குத் துரிதமாயும் அபாயமின்றியும் நிச்சயமாயும் நிவாரணம் அளிக்கிறது. வலிகளுக்குத் துரித நிவாரணமளிப்பதில் அனஸினுக்கு இணையொன்றில்லை... அனஸினைப் போல் தீங்கு விளைவிக்காத வில்லை வேறொன்றில்லை. ஆகவே ஞாபகமிருக்கட்டும் 'அனஸின்' ஒரு டாக்டரின் குறிப்புக்கு ஒப்பாகும். அது ஹிருதயத்திற்குத் தீங்கு விளைவிக்கவோ அல்லது வயிற்றுக் கோளாறுகள் உண்டு பண்ணவோ செய்யாது. 'அனஸின்' லக்ஷக்கணக்கான மக்களுக்கு நிவாரணம் அளிக்கிறது. 'அனஸின்' விலை ஒவ்வொருவர் சக்திக்கும் ஏற்றது. ஒரு பாக்கெட்டின் விலை அணா 2 மட்டுமே



நான்கு
மருந்துகளின்
சேர்க்கையான
'அனஸின்'
வேண்டுமென்றே
கேளுங்கள்

V 184



வாலிபன் ஒருவன் தனது காதலியின் தகப்பனாரிடம் சென்று, தனக்கு அவளை மணம் புரிந்துகொள்ள விருப்பம் என்று கூறுகிறான்.

பெண்ணின் தந்தை :—உங்களுக்கு மாச வருமானம் என்ன?

வாலிபன் :—இனி இருநூறு ரூபாய் வரும்!

பெண்ணின் தந்தை :—அப்படியா? அவளுக்கு மாதம் நான் நூறு ரூபாய் கொடுப்பது வழக்கம். அதைச் சேர்த்துப் பார்த்தால்....

வாலிபன் :— நீங்கள் அதைச் சேர்க்க வேண்டாம். என் சம்பளத்தில் அதை முன்பே சேர்த்துத்தான் உங்களிடம் சொன்னேன்!

★



மனைவி :— இந்தாங்கோ! இந்தக் கோடை விடுமுறையிலாவது உதகமண்டலம் போகணும்! நம்ப உடம்புக்கு அந்த இடம் ஒத்துக் கொள்ளுமோ?

கணவன் :—பேஷாக உடம்புக்கு ஒத்துக்கொள்ளும்; நம்ப பர்ஸுக்குத்தான் அது ஒத்துக் கொள்ளாது!

★

அவசரம் அவசரமாகப் பல நோயாளிகளைப் பார்வையிடுகிறார் டாக்டர். அப்பொழுது ஒருவரை டாக்டர் பரிசோதித்துப் பார்த்து விட்டு:—உங்களுக்கு உடம்புக்கு ஒன்றுமில்லையே?

வந்தவர் :—நான் இராத்திரி பகல் தூங்குவதே இல்லை!

டாக்டர் :—அப்படின்னா நீங்கள் ஒரு மாதம் ஓய்வு எடுத்துக் கொள்ளுங்கள். சரியாகப் போய் விடும்!

வந்தவர்:—நான்தான் உங்கள் கம்பௌண்டர். எனக்கு ஒருமாதம் லீவு தந்ததற்கு ரொம்ப சந்தோஷம்!

★



சாஸ்திரிகள் :—என்ன நடிகர் ஸார்! உங்களைக் கண்ணிலே காண்கிறது ரொம்ப அபூர்வமாக இருக்கே!

நடிகர் :—என்ன போங்கோ! நமக்கு விசிறிகளுக்குப் பஞ்சமாகப் போச்சு! என்னைக் கூப்பிடுகிறவன் யாரும் இல்லை!

சாஸ்திரிகள் :—என்னைக் கூப்பிட்டிருக்கக் கூடாதோ? நான் ஆயிரம் விசிறிகள் வேணுமானாலும் கொடுத்திருப்பேனே!

முதல் குமாஸ்தா (தன் நண்பனிடம்) :—இனிமேல் இந்தக் காரியாலயத்தில் எனக்கு எதிர்காலம் இல்லை.

இரண்டாவது குமாஸ்தா :—ஏன்? எதனால் அப்படிச் சொல்கிறாய்?

முதல் குமாஸ்தா :— முதலாளி அவர் பெண்ணை எனக்கு மணம் செய்து கொடுப்பதாகச் சொல்லி விட்டார்!

★



ஆசிரியர் :— பூமியைக் குடைந்து எடுக்கிறார்களே, எதற்குத் தெரியுமா?

பையன் :—கருமி தன் காசைத் தொலைத்திருப்பான். அதைத் தேடி எடுக்கத் தோண்டுவார்கள்! இதில் என்ன அதிசயம்?

★

வாலிபன் :—நேற்று நான் ஒரு அழகான பெண்ணை மணந்து கொண்டதாகக் கனவு கண்டேன்.

காதலி:—உங்கள் கனவு பலித்து விட்டதாக்கும்!

வாலிபன் :—தூக்கம் கலைந்தது; கனவு சிதைந்தது. நீ எதிரே நின்றாய்!

★

கார் சொந்தக்காரர் :—நீங்கள் உடனே சிகரெட் பிடிப்பதை நிறுத்த வேண்டும்!

மற்றவர் :— ஏன்! அது அவ்வளவு தீங்கானதா?

கார் சொந்தக்காரர் :—இல்லை! நீங்க பிடிக்கிற அழகிலே கார் தீப்பற்றி எரிந்துவிடும் போலிருக்கிறது!

★



டாக்டர் :— கவலைப் படாதீங்க. உங்களை நான் காலையிலே வந்து பார்க்கிறேன்!

நோயாளி :— நீங்க வந்து பார்ப்பீர்கள் என்பதில் எனக்குச் சிறிதும் சந்தேகம் இல்லை. ஆனால் நான் உங்களைப் பார்க்க முடியுமா?

★

தாயார் :—இந்த வீட்டிலே யார் ஒருவாரம் குறும்பு செய்யாமல் என் சொற்படி கேட்டுக் கொண்டிருப்பார்களோ, அவர்களுக்கு ஒரு ரூபாய் கொடுப்பேன்!

குறும்புக்காரப் பையன் :—அம்மா! இந்தப் பரிசுத் திட்டம் வேண்டாம். இந்தப் பரிசை அப்பாதான் தட்டிண்டு போயிடுவார்!

காலத்துக்த



அன்றையக் காலைத் தபாலில் ஒரேயொரு கடிதந்தான் வந்திருந்தது. பிரித்துப் பார்த்தேன். விக்கிரமசிங்க புரத்திலிருந்து வீரராகவன் எழுதியிருந்தான். வழக்கமான குசலப் பிரச்னைக்கு அப்புறம் கீழ்க்கண்ட விவரம் அதில் எழுதப்பட்டிருந்தது.

"வருகிற ஆடி அமாவாசைக்குப் பாண தீர்த்தம் போகலாம் என்று தீர்மானித்திருக்கிறோம். நீங்களும் அம்மாவை அழைத்துக் கொண்டு வர வேண்டும் என்பதுதான் என் ஆசை. கட்டாயம் நாலு நாட்களுக்கு முன்பாகவே புறப்பட்டு வாருங்கள்."

"இந்தா...உன்னைத்தானே?....தூக்கமா? உன் பிள்ளையாண்டான் விக்கிரமசிங்கபுரத்திலிருந்து கடுதாசி எழுதியிருக்கிறான்."

அடுக்களைக் காரியத்தை முடித்த அலுப்புடன் ரேழி வாசற்படியில் தலை வைத்துப் படுத்துக் கொண்டிருந்த அவள் எழுந்திருந்தாள்.


"ஆடி அமாவாசைக்குப் பாணதீர்த்தம் போகிறார்களாம். உன்னையும் என்னையும் புறப்பட்டு வரச்சொல்லி எழுதியிருக்கிறான்."

"நாம் அவசியம் அங்கே போகணும்!"

"பாணதீர்த்தம் பார்க்க வேண்டியது தான். அதை நான் ஆட்சேபிக்கவில்லை. ஆனால் இராமேசுவரம், குற்றாலம், கொடைக்கானல், உதகமண்டலம் இந்த மாதிரி வேறே எங்கேயாவது போகலாமே? பாணதீர்த்தத்துக்கு எதற்கு? அங்கே போய்த் திரும்புவது ரொம்பக் கஷ்டம். வேண்டாம்."

"நானும் பார்த்துக் கொண்டே வருகிறேன். நான்கு வருஷங்களாக நீங்கள் இப்படித்தான் தட்டிக் கழிக்கிறீர்கள். 'பாண தீர்த்தம்' என்ற பெயரை எடுத்தாலே உங்கள் மனம் சம்மதிக்கிறதில்லை."

"சரி,சரி. சண்டைக்குக் கிளம்பி விடாதே. போவதா, வேண்டாமா என்று நாளைக்



வணக்கம்

நா. பார்த்தசாரதி

குள்ளே முடிவு செய்யலாம். அப்புறம் வீரராகவனுக்குக் கடிதம் எழுதுவோம்'' என்று சொல்லி விட்டு என் அறையை நோக்கி நடந்தேன்.

பெட்டிக்குள் நாற்பது வருஷ காலம் நான் தவறாமல் எழுதிய டைரிகள் குவிந்து கிடந்தன. அவை வெறும் டைரிகளா? அல்ல. எழுபதாவது வயதை எட்டிக் கொண்டிருக்கும் ஒரு கிழவன் கடந்த காலத்தில் கண்ட அனுபவங்கள்.

டைரிகள் எல்லாவற்றையும் மேலும் கீழுமாகப் புரட்டியபோது 1929 வது வருஷத்து டைரி மேலே வந்தது. உத்தியோக வாழ்க்கையில் மறக்க முடியாத நினைவை உண்டாக்கியதும், அந்த முரட்டு உத்தியோகத்தையே விட்டு விடுவதற்குக் காரணமாயிருந்ததும் 1929ம் வருஷம். நினைவுப் புண்ணுக்கு மருந்து ஏது?



1929 ஜனவரி

அம்பாசமுத்திரம் ரூரல் போலீஸ் ஸ்டேஷனுக்கு மாற்றலாகிய புதிது. பழைய சப்-இன்ஸ்பெக்டர் அரைகுறையாக வைத்து விட்டுப் போயிருந்த கேஸ்களின் பைல்களை யெல்லாம் புரட்டினேன். தேச சுதந்திரப் போராட்டத்துக்காக ஒத்துழையாமை இயக்கத்தில் ஈடுபட்டுப் பல குற்றங்கள் செய்தவனும், சர்க்காருக்கு எதிராகப் பல சதிச் செயல்களில் தலைமை தாங்கி நடத்தியவனுமான ஊர்க்காடு ரங்கநாதன் என்னும் இளைஞனைப் பற்றிய ஸ்டேட்மெண்டுகள் அதிகமாக இருந்தன. தலைமறைவாகப் பொதிகைமலைக் காடுகளில் திரிந்துவரும் அந்த ரங்கநாதனை முன்பிருந்த இன்ஸ்பெக்டர் எவ்வளவோ முயன்றும் கண்டுபிடிக்க முடியவில்லை. ரங்கநாதனோடு புரட்சி இயக்கத்தில் சம்பந்தப் பட்டிருந்த பத்துப் பன்னிரண்டு வாலிபர்களின் பெயரும் 'காத்தியாயினி' என்ற ஒரு பெண்ணின் பெயரும் ஸ்டேட்மெண்டிலும் பைல்களிலும் இருந்தன.



அப்போது திருநெல்வேலியில் சர்க்கிளாக இருந்தவர் ஒரு ஆங்கிலோ இந்தியர். பாளையங்கோட்டையி லிருந்து என்னை அம்பாசமுத்திரத்துக்கு மாற்றி உத்தரவு போட்டது அவர்தான். நான் மேற்படி ரங்கநாதனையும் அவன் கோஷ்டியைச் சேர்ந்த தேச பக்தர்களையும் சீக்கிரம் எப்படியாவது மடக்கிப் பிடித்துப் போட்டு விடுவேன் என்று அவருக்கு அளவற்ற நம்பிக்கை.

பிப்ரவரி

மாதம் ஒன்று கழிந்துவிட்டது. இன்னும் உருப்படியாக ஒரு காரியமும் செய்யவில்லை. நாலைந்து நாட்களுக்கு முன்

ரங்கநாதன் பிறந்த ஊராகிய ஊர்க்காட்டுக்குப் போய்ச் சில விவரங்களைச் சேகரித்துக் கொண்டு வந்தேன். 'காத்தியாயினி' என்ற பெண்ணைப் பற்றியும் சில முக்கியமான செய்திகள் அங்கே தெரிய வந்தன.

அக்காலத்தில் வண்ணார் பேட்டையில் நாகராஜ சர்மா என்று ஒரு வக்கீல் இருந்தார். அவருக்கு ஒரே ஒரு பெண் காத்தியாயினி. தாயில்லாக் குழந்தை. பெண்ணுக்கு அளவுக்கு மீறிச் செல்லம் கொடுத்து வளர்த்தார். சாதாரணமாக ஹைஸ்கூல் படிப்புக்கே பெண்களை அனுப்புவதற்குத் தயங்கும் காலம் அது. ஆனால் நாகராஜ சர்மாவோ ஹைஸ்கூல் படிப்பு முடிந்ததோடு நிறுத்திவிடாமல் காத்தியாயினியைக் காலேஜிலும் சேர்த்துவிட்டார்.

ரங்கநாதனும் காத்தியாயினியும் ஒரே வகுப்பில் ஒரே பிரிவில் படித்து வந்தனர். காத்தியாயினிக்கு அவன் பிரசங்கங்கள் என்றால் உயிர். திலகருடைய கொள்கைகளில் அசைக்க முடியாத ஆர்வம் அவளுக்கு உண்டு.

ஊர்க்காட்டில் இருந்த ரங்கநாதனின் தாயார் நிலபுலன்களிலிருந்து வரும் குத்தகை வருமானத்தை மாதம் தவறாமல் ஒரு குறிப்பிட்ட தொகை வீதம் அவனுடைய படிப்புச் செலவுக்கு அனுப்புவாள். ரங்கநாதனின் தகப்பனார் அவன் சிறுவனாக இருந்த போதே காலமாகி விட்டார். 'ரங்கநாதனின் நடவடிக்கைகளால் அவன் படிப்புக் கெட்டுப் போகும்' என்று விஷயம் தெரிந்த இரண்டொருவர் அவன் தாயிடம் புகார் செய்தனர். ஆனால் 'கைக்கு மீறி வளர்ந்து விட்ட பிள்ளையை எப்படிக் கண்டிப்பது?' என்று பேசாமல் விட்டு விட்டாள் அந்த அம்மாள்.

அங்கே நாகராஜ சர்மாவின் நிலையும் அப்படித்தான் இருந்தது. இளமையிலிருந்தே செல்வமாக வளர்ந்த பெண் கண்டிப்புக்கு அடங்கவில்லை. நாலு வார்த்தை இரைந்து பேசினால் கண்ணைக் கசக்கிக் கொண்டு அழ ஆரம்பித்து விடுகிறாள். வெள்ளை அரசாங்கத்தின் தயவில் நடந்து வந்த கல்லூரியில் எவ்வளவு நாட்கள்தான் இப்படிப்பட்ட மாணவர்களை வைத்துக் கொண்டிருப்பார்கள்?

ஒரு நாள் திடீரென்று ரங்கநாதனும் அவனுக்கு ஆதரவாளர்களாகக் கருதப்பட்ட ஏழெட்டு மாணவர்களும் காத்தியாயினியும் காலேஜிலிருந்து சஸ்பெண்டு செய்யப்பட்டிருப்பதாகப் பிரின்ஸிபல் அறிவித்தார்.

நாகராஜ சர்மா வழக்கத்தை மீறிப் பெண்ணைக் கண்டித்தார். அவளை வீட்டை விட்டு வெளியேறாமல் கண்காணிக்கத் தொடங்கினார்.

ரங்கநாதனோ சஸ்பெண்டு ஆனபின்னும் ஊருக்குப் போகவில்லை. அவனும் கோஷ்டியாருமாகச் சேர்ந்துகொண்டு கைலாசபுரத்தில் ஓர் வீட்டை வாடகைக்குப் பேசி அதிலிருந்து இயக்க வேலைகளில் ஈடுபட்டனர்.

ஊர்க்காட்டில் முக்கியமாக நான் விசாரித்தறிந்துகொண்ட விவரங்கள் இவ்வளவுதான்.

மார்ச் - ஏப்ரல் - மே

அப்பப்பா! இந்த மூன்று மாதங்களிலும் நான் அலைந்த அலைச்சல் சொல்லி மாளாது. பாளையங்கோட்டைக்கும், தூத்துக்குடிக்கும், பாபநாசத்துக்குமாக அலைந்தேன்.

தன்னைப் பெரிய குற்றவாளியாகச் சர்க்கார் கருதும்படியான வேறோர் காரியத்தையும் ரங்கநாதன் செய்தான். ஒரு விழாவுக்காகத் திருநெல்வேலி கலெக்டர் பாளையங்கோட்டைக்கு விஜயம் செய்ய ஏற்பாடாகி இருந்தது. கலெக்டருடைய கார் தாமிரபரணியில் கயிலாசன முதலியார் பாலத்தைக் கடக்கின்ற சமயம் பாலத்தைத் தகர்க்க வெடிகுண்டுகள் மூலம் ரங்கநாதன் கோஷ்டியார் சதித்திட்டமிட்டிருந்தனர். ஆனால் துரதிர்ஷ்டவசமாகத் திட்டம் நிறைவேறுவதற்கு முன்பு இரகசியங்கள் வெளியாகி விட்டன.

திட்டம் வெளியான அன்று ரங்கநாதன் கோஷ்டியார் தலைமறைவாக ஒளிய இடம் தேடித் திருநெல்வேலியிலிருந்து ஓட்டம்பிடித்தனர். அதே தினம் வண்ணார்பேட்டையில் காத்தியாயினி காணாமற் போய் விட்டாள்.

சர்மா பதறிப் போய்ப் 'பெண்ணைக் காணோம்' என்று போலீசுக்கு ரிப்போர்ட் செய்தார். 'ரங்கநாதன் கோஷ்டியார் ஊர் எல்லையிலிருந்து தப்பிச் சென்று விட்டனர்' என்ற செய்தியும் போலீஸாருக்குத் தெரிந்தது. இரண்டையும் சம்பந்தப்படுத்தி யோசித்த போலீஸார் சர்மாவை அழைத்து, 'உம்முடைய பெண்ணுக்கும் ரங்கநாதனுக்கும் தொடர்பு உண்டா?' என்று விசாரித்தனர். சர்மா 'காலேஜில் படிக்கும்போது பழக்கம் உண்டு' என்று கூறவே காத்தியாயினி ரங்கநாதன் கோஷ்டியோடு சென்றிருக்க வேண்டும் என்று அனுமானித்தனர்.

இதன் பிறகு ஆறு மாதங்கள் போலீஸாருக்கு ஒரு தகவலும் தெரியவில்லை. பெண் போய் விட்டாளே என்ற ஏக்கத்தினால் நாகராஜ சர்மா மனமுடைந்து உயிரை விட்டார்.

ஜூன் - ஜூலை

ஜூன் மாதம் மூன்றாந் தேதி தூத்துக்குடியில் சட்டத்தை மீறி உப்புக் காய்ச்சப் போவதாகத் துண்டுப் பிரசுரங்கள் இரகசியமாக விநியோகிக்கப் பட்டிருந்தன. தகவல் எனக்கு எட்டி விட்டது.

இரண்டாந் தேதி சாயங்காலமே பாளையங்கோட்டை சென்று சர்க்கிளிடம் கூறினேன். 'மப்டியில்' நாலைந்து போலீஸ்காரர்களுடன் என்னையே தூத்துக்குடிக்கு அனுப்பினார்.

தூத்துக்குடிக்கும் மணப்பாட்டுக்கும் நடுவே ஜன நடமாட்டம் அதிகமில்லாத ஒரு பகுதியில் உப்புக் காய்ச்ச ஏற்பாடாகி இருந்தது. நானும் போலீஸ்காரர்களும் அந்த இடத்துக்குப் போனபோது உடைந்த பானைகளும் இடிந்த அடுப்புகளும் தான் எங்களை வரவேற்றன.

விசாரித்ததில் இரண்டாந்தேதி சாயங்காலமே யாரோ பத்துப் பன்னிரண்டு ஆண் பிள்ளைகளும் ஒரு பெண்ணும் வந்து உப்புக் காய்ச்சிவிட்டுப் போய் விட்டதாக அக்கம் பக்கத்துக் கிராமத்தார்கள் கூறினர்.

மேலும் புலன் விசாரித்ததில், 'திருநெல்வேலியிலிருந்து தப்பி ஓடிய மறு மாதமே காத்தியாயினியும் ரங்கநாதனும் பாபநாசம் சிவன் கோவிலில் கல்யாணம் செய்து கொண்டார்கள். அவர்கள் தம்பதிகளாகி

நீரிழிவு

குணமாகும்

சிறு நீரில் சர்க்கரை காண்பது நீரிழிவு (DIABETES) நோயின் முக்கிய அறிகுறி. உங்களுக்குப் பசியும் தாகமும் அதிகமாயிருந்தாலும், உடல் உருகிக் கொண்டு வந்தாலும் அடிக்கடி நீர் இறங்கினாலும் உங்களுக்கு நீரிழிவு நோய் இருக்கிறது என்பதில் சந்தேகமில்லை. இக் கொடிய உடல் உருக்கி நோய், தான் பற்றினவர்களைக் கடைசி மூச்சு உள்ள வரையில் விடுவதில்லை; கொஞ்சம் கொஞ்சமாக அவர்களை மரண வாயிலுக்கு இழுத்துச் செல்லும். நீரிழிவு வியாதியைக் குணப்படுத்த இஞ்செக்ஷன்கள் போடப்படுகின்றன; ஆனால் அவற்றினால் வியாதி கொஞ்சமும் குணமாவதில்லை. இஞ்செக்ஷன்கள் நீரில் சர்க்கரையைக் குறைக்கின்றன — அதுவும் மருந்துச் சக்தி உள்ள வரையில்தான். ஆகவே, உபாதையைத் தடுக்க வாழ்நாள் முழுவதும் ஊசிகள் போட வேண்டியதுதான். இதனால் அதிகச் செலவு ஏற்படுவதோடு கஷ்டமும் உண்டாகிறது. நோய் குணப்படுத்தாத போனால் நீங்கள் புண்களினாலும், கண் நோய், பல் நோய், வயிற்றுக் கோளாறு முதலிய பலவித வேதனைகளால் சிரமப்பட நேருகிறது.

நீரிழிவு வியாதியை, வீனஸ் சார்ம் மாத்திரைகளை உபயோகித்து, சிக்கனமாகவும், சுலபமாகவும் நிச்சயமாகவும், பத்திரமாகவும் சிகிச்சை பெறுங்கள்.

பண்டைக்கால யுனானி வைத்திய முறையைக் கொண்டு, அரிய மூலிகைகளின் சேர்க்கையுடன் தயார் செய்யப்படும் வீனஸ் சார்ம் மாத்திரைகள், நோயை அடியோடு அகற்றுவதுடன், எத்தனையோ பேர்களை இன்செக்ஷன் அல்லது ஒருவிதமான பட்டினி இல்லாமல் குணமாக்கியிருக்கிறது. இதை உபயோகித்துப் பல ஆயிரக் கணக்கானவர்கள்; இந்நோயின் மரணப் பிடியிலிருந்து தப்பி யிருக்கிறார்கள். இம் மருந்தை உபயோகிக்கத் தொடங்கிய இரண்டு மூன்று நாட்களுக்கெல்லாம், நீரில் சர்க்கரை குறைகிறது; அத்துடன் அதிக நீர் இறங்குவதும் நிற்கிறது. சில நாட்கள் உபயோகித்தாலே நோய் தணிந்து திருப்தி ஏற்படுகிறது. வீட்டிலிருந்தபடி வீனஸ் சார்ம் சிகிச்சையைத் துவங்குங்கள். விசேஷ பத்தியம் எதுவும் இல்லை. நீங்களே அதன் குணத்தை அறிவீர்கள். இதுபற்றிய விரிவான இலவச ஆங்கிலப் பிரசுரத்தை வரவழைத்துப் பாருங்கள்.


50 மாத்திரைகள் கொண்ட புட்டி ஒன்றின் விலை 6-12-0

(பாக்கிங் தபாற் செலவு இனாம்)

வீனஸ் ரிஸர்ச் லாபரேட்டரி (K. M.)

தபால் பெட்டி நெ. 587. கல்கத்தா

காஸல்ஸ்



ஏர்மாஸ்டர்

மிக சமீபத்திய டிஸைனில் உருவாக்கப்பட்டது
உழைப்பில் சிறந்தது

மார்வெல் எலெக்ட்ரிகல்ஸ் (இந்தியா) லிட்.,
புது டில்லி
போன்: 27871 & 27872
பாக்டரிகள்: புதுடில்லி

தென்னிந்தியாவிற்கு பூரண விற்பனை ஏஜண்டுகள்
M/s. கார்டன் உட்ரோபி & கோ. (மதராஸ்) பிரைவேட் லிட்.
த. பெ. 42, சென்னை-1; போன்: 2978 (3 லைன்கள்)

நண்பர் ஒரு நல்ல செய்தியைச் சொல்கிறார். அடிக்கடி எப்ரிலைம் உட்கொள்வதால், அவர் ஆஸ்த்மா உபாதையால் தற்போது துன்பப்படுவதில்லை



EPHRILIME

எப்ரிலைம்

நீண்ட நாள்பட்டதும், மிக்க உபாதை தரக்கூடியதுமான மார்ச்சளி, ஆஸ்த்மா முதலிய நோய்களுக்கு ஓர் சிறந்த ஹானியற்ற மருந்து.

யூனியன் டிரக் கம்பெனி, லிட்.

மதராஸ் டிப்போ:
2, ஜோன்ஸ் லேன் :: மதராஸ்-1

ஒன்றேகால் வருஷத்துக்கு மேல் ஆகப் போகிறது. ரங்கநாதன் கோஷ்டியார் பொதிகை மலையில் பாண தீர்த்தத்துக்கு அருகில் ஒரு ஆசிரமம் மாதிரி அமைத்துக் கொண்டு அங்கே அஞ்ஞாத வாசம் செய்கிறார்கள். அவர்கள் அடிக்கடி மாறு வேடங்களில் ஊருக்குள் வந்து தேசியப் போராட்டங்களுக்கும் பிரசங்கங்களுக்கும் தூண்டுகிறார்கள். தூத்துக்குடியில் உப்புக் காய்ச்சி விட்டுப் போனது அவர்கள்தான்' என்று தெரிய வந்தது.

அதோடு, இரண்டு மூன்று மாசமாகக் காத்தியாயினி ஆசிரமத்தை விட்டு வெளியேறுவது இல்லையென்றும் அவள் வயிறும் பிள்ளையுமாக நிறை மாசமாக இருக்கிறாள் என்றும்கூடத் தெரியவந்தன.''

போராட்டத்துக்கும் அஞ்ஞாத வாசத்துக்கும் இடையே தாம்பத்திய உறவும் வளர்ந்து கனிந்திருப்பதை எண்ணும்போது எனக்கு வியப்பாக இருந்தது.

''சரி! உங்களுக்குத் தேவையான விவரங்களை எல்லாம் விசாரித்துத் தெரிந்து கொண்டாயிற்று. இனிமேல் தேடிப் பிடித்து உள்ளே தள்ள வேண்டியது உங்கள் பொறுப்பு'' என்று எனக்கு உத்தரவிட்டார் சர்க்கிள்.

ஆகஸ்டு-செப்டம்பர்

இந்த இரண்டு மாதங்களிலும் உத்தியோகக் காரியங்களில் இருந்த கவலையைவிட வீட்டுக் கவலை அதிகமாக இருந்தது. அப்போது என் மனைவிக்குப் பிரசவ சமயம். இது அவளுக்கு மூன்றாவது பிரசவம். முதல் இரண்டும் கசப்பு நிறைந்த அனுபவங்களாக முடிந்து விட்டன. தலைச்சன் குழந்தை வயிற்றிலேயே இறந்து பிறந்தது. இரண்டாவது குழந்தை பிறந்த மறுநாள் இறந்தது. இந்த இரு ஏமாற்றங்களால் அதிர்ச்சியும், பயமும் கொண்டிருந்தாள் அவள். அம்பாசமுத்திரம் எங்களுக்குப் புதிய ஊர். என்னையும் அவளையும், வேலைக்காரியாக நியமிக்கப்பட்டிருந்த ஒரு வயதான கிழவியையும் தவிர, ஒத்தாசைக்கு வேறு ஆட்கள் இல்லை. நானோ அடிக்கடி வெளியூருக்கும் அங்கும் இங்குமாக அலைந்து கொண்டிருந்தேன். வீட்டில் தங்கி அவள் மனத்தைத் தேற்றவோ, ஆறுதல் கூறவோ எனக்கு நேரமில்லை.

''இந்தாருங்கள்! எவன் வேண்டுமானாலும் எங்கே வேண்டுமானாலும் உப்பையோ புளியையோ காய்ச்சித் தொலைத்துப் போகட்டும். நீங்கள் பேசாமல் மூன்று மாதத்துக்கு லீவு போடுங்கோ, திருநெல்வேலிக்குப் போய் விடலாம். எனக்கென்னவோ மாசம் நெருங்க நெருங்கப் பயமாக இருக்கிறது'' என்றாள் அவள். எனக்கும் அவள் சொல்வது சரியென்றே பட்டது. 'இந்த அம்பாசமுத்திரத்தில் நமக்கு வேண்டிய உறவினர்களும் இல்லை. ஆஸ்பத்திரியில் சேர்த்துவிடலாம் என்றால், பிரசவ ஆஸ்பத்திரியே கிடையாது. பேசாமல் திருநெல்வேலிக்குப் போய்விட்டால் வீட்டில் வைத்துக் கொண்டாலும், ஆஸ்பத்திரியில் சேர்த்தாலும், சொந்தக்காரர்கள் ஒத்தாசை கிடைக்கும். முந்தின இரண்டும்தான் அப்படி ஆகிவிட்டது. இந்தப் பிரசவத்திலேயாவது பெற்றுப் பிழைத்துத் தேறவேண்டுமே?'' என்ற கவலை எனக்கு.

இதையெல்லாம் நினைத்துத்தான் சர்க்கிளிடம் மூன்று மாதங்கள் லீவு கேட்க எண்ணியிருந்தேன். ஆனால் நிலைமை லீவைப் பற்றிப் பிரஸ்தாபிக்கவே இடம் கொடுக்கவில்லை. கிடைத்திருந்த செய்திகளால் நான் சுறுசுறுப்பாக வேலையில் ஈடுபட வேண்டிய கட்டத்தில் இருந்தேன். நான் பாளையங்கோட்டையிலிருந்து திரும்பியபோது லீவு பெற்று வந்திருப்பேன் என்று அவள் ஆவலோடு எதிர்பார்த்துக் கொண்டிருந்தாள்.

''என்ன, லீவு கிடைச்சதா?''

''சும்மா நச்சரிக்காதே. இப்போது லீவு கேட்கவே வழியில்லை. கேட்டாலும் கிடைக்காது. பிரசவத்துக்கு இங்கேதான்!'' என்று எரிந்து விழுவதுபோல் பதில் சொன்னேன்.

அவளுக்கு அழுகை வந்துவிட்டது. விசித்துக் கொண்டே விக்கி விக்கி அழத் தொடங்கிவிட்டாள். என் கோபம் மாறியது.

''சே! இதென்ன? அசடுமாதிரி இப்படியா அழுவது? என்ன செய்யலாம்? நமக்கு வாய்த்த உத்தியோகம் அப்படி இருக்கிறதே!'' என்று கூறி அவளைச் சமாதானப்படுத்தினேன்.

''இந்தத் தடவையாவது நான் முழுசா உயிரோடு பெத்துப் பிழைக்கணுமே என்று உங்களுக்கு அக்கறை இருந்தால்தானே? அசம்பாவிதமாக ஏதாவது நடந்தால் அப்புறம் நான் பிழைச்சு எழுந்திருப்பேன் என்று கனவிலேகூட நினைக்காதீங்கோ'' — அவள் குரலில் ஒரு அழுத்தம் ஒலித்தது. மேலே வளர்த்தாமல் நான் பேச்சை நிறுத்தினேன்.

அன்று மலைமேல் போய் வருவதற்குத் திட்டமிட்டிருந்தோம். இரண்டு நாட்களாகப் பாபநாசத்தில் முகாம் போட்டிருந்தேன். அக்காலத்தில் விக்கிரமசிங்கபுரத்தில் அவுட் ஸ்டேஷனும், அதில் ஒரு ஏட்டும் சில கான்ஸ்டேபிள்களுமே உண்டு. அவர்களும் எனக்கு ஒத்தாசையாகப் பாபநாசத்துக்கு வந்திருந்தார்கள். அன்று காலை எல்லோரும் பதினொரு மணி சுமாருக்குக் கல்யாண தீர்த்தத்தின் ஓரமாகவே சென்று பாண தீர்த்தத்தை அடைவதென்று தீர்மானம் செய்திருந்தோம்.

பாபநாசத்தில் நாங்கள் தங்கியிருந்த இடம் லோக்கல் பண்டு ஆஸ்பத்திரிக்கு எதிர்த்தாற்போலிருந்தது. பழைய காலத்துப் பாணியில் கட்டப்பட்ட முசாபரி பங்களா அது. பத்தேகால் மணி சுமாருக்கு முசாபரி பங்களாவின் வாசலுக்கு வந்து வெளியே சென்றிருந்த கான்ஸ்டேபிள்கள் வருகிறார்களா என்று எட்டிப் பார்த்தேன். அப்போது தற்செயலாக லோக்கல் பண்டு ஆஸ்பத்திரி வாசலில் நின்ற ஒரு ஆள்மீது என் பார்வை நிலைத்தது. உற்றுப் பார்த்தேன். அவனும் என்னைப் பார்த்தான். நான் போலீஸ் உடை அணிந்து கொள்ளாமல் சாதாரண உடையிலிருந்தேன்.

அக்டோபர் - நவம்பர்

போலி மீசை ஆளை மாற்றிக் காட்டினாலும் அவன் ரங்கநாதன்தான் என்பதை நான் உடனே தெரிந்து கொண்டு விட்டேன்.

அவன் கையில் ஏதோ ஒரு மருந்துப் புட்டி வேறு இருந்தது.

உடனே உள்ளே சென்று சாதாரண உடையிலிருந்த இரண்டு கான்ஸ்டேபிள்களை அனுப்பினேன். இந்தே நிமிஷங்களில் கான்ஸ்டேபிள்கள் அவனை உள்ளே இழுத்துக் கொண்டு வந்து விட்டனர். ஏறக்குறைய இரண்டரை வருஷங்களாக அகப்படாத ஆள் அகப்பட்டு விட்டான்.

"என்னப்பா ரங்கநாதா! உன்னைத் தேடிப் பாணதீர்த்தத்துக்குப் புறப்பட ஏற்பாடு செய்து கொண்டிருக்கிறோம். நீ என்னடா என்றால் எங்களுக்குக் கொஞ்சம் கூடச் சிரமம் வைக்காமல் இங்கேயே வந்துவிட்டாய்!" என்று நான் எகத்தாளமாகக் கேட்டேன்.

"சார்! உங்கள் காலில் விழுந்து கும்பிடு கிறேன். இன்னும் நாலு மணி நேரம் எனக்கு அவகாசம் கொடுங்கள் சார். இந்த மருந்தைக் கொண்டு போய்க் கொடுத்து விட்டு நானே உங்களிடம் சரணாகதி அடைந்து விடு கிறேன். குழந்தையைப் பெற்று விட்டு உயிருக்கு மன்றாடிக் கொண்டிருக்கிறாள் சார்! தயவு செய்யுங்கள்..."—அவன் துடித்தான்.

"யார்? உன்மனைவி காத்தியாயினிதானே?"

"ஆமாம், சார்! கருணை பண்ணுங்கள்!" என்று கதறினான். நான் அவனை ஊடுருவி நோக்கினேன். அது போலி நடிப்பாகத் தோன்றவில்லை. உண்மையிலேயே பாண தீர்த்தக் கரையிலுள்ள ஆசிரமத்தில் காத்தி யாயினி பிரசவித்திருக்கிறாள் என்றே தோன்றி யது. ஆனால் போலீஸ் ஒழுங்குப்படி கையில் சிக்கிக் கொண்ட அவனை நாலு மணி நேரம் விட்டுப் பிடிக்க எனக்கு உரிமையில்லை.

"ரங்கநாதா! நான் போலீஸ் அதிகாரி. சட்டத்துக்கும் கருணைக்கும் வெகு தூரம். உன்னை விட முடியாது. அந்த மருந்தை என்னிடம் கொடு. நாங்கள் உன் கோஷ்டியைச் சேர்ந்தமற்றவர்களைப் பிடிப்பதற்காகப் பாணதீர்த்தம் போகிறோம். உன் மனைவியையும் குழந்தையையும் காப்பாற்ற நான் முடிந்தவற்றைச் செய்கிறேன்" என்றேன். அவன் வேண்டா வெறுப்புடன் மருந்துப் புட்டியை என்னிடம் கொடுத்தான். உடனே தக்க பாதுகாப்போடு பஸ் ஏற்றி அவனைப் பாளையங்கோட்டை ஜெயிலுக்கு அனுப்பி விட்டேன். மருந்துப் புட்டியோடு நானும் மற்றவர்களும் வேகமாகப் பாண தீர்த்தத்துக்கு விரைந்தோம்.

காட்டிலே வழியை அடையாளம் கண்டு கொண்டு ஏற்ற இறக்கமான பாதைகளில் நடந்து பாணதீர்த்தத்தை அடையும்போது மாலை மூன்று மணிக்கு மேல் ஆகிவிட்டது. ஆனால் நாங்கள் எதிர்பார்த்தபடி வேறு தேசபக்தர்கள் யாரும் அப்போது அங்கே ஆசிரமத்தில் இல்லை. ஒரு கட்டிலில் பிரசவித்த தாயும் குழந்தையும் ஆழ்ந்த உறக்கத்தில் இருந்தனர்.

மருந்துப் புட்டியோடு அவசரம் அவசரமாகக் கட்டிலருகே சென்று கையைத் தட்டி ஓசை மூலம் எழுப்ப முயன்றேன். குழந்தை விழித்துக் கொண்டு அழுதது. தங்க விக்கிரகம் போல் அழகான ஆண் குழந்தை. தாய் அசையவே இல்லை. இன்னும் பலமாகக் கையைத் தட்டினேன்.

ஊஹூம்! அவள் எழுந்திருக்கவில்லை! என் மனத்தில் பீதி ஏற்பட்டது. திடுக்கிட் டுப் போய் மூக்கருகில் கையைவைத்துப் பார்த் தேன். மூச்சு வரவில்லை. என் கையிலிருந்த மருந்துப் புட்டி கீழே நழுவி விழுந்து உடைந்தது.

ஆம்! பெற்றவனைத் துறந்து, கல்லூரிப் படிப்பைத் துறந்து ஒரு தேசபக்தனோடு காட்டுக்கு ஓடி வந்த அந்தப் புதுயுகச் சீதையான தேச சேவிகை காத்தியாயினி நிரந்தரமாக உறங்கிக் கொண்டிருந்தாள். காலன் அவளுடைய உயிரைப் பறித்துக் கொண்டு விட்டான். போலீஸ் வாழ்வில் இரக்கம் என்ற பண்பை அதிகம் பெறாத எனக்கே கண்களில் நீர் துளித்தது. நெஞ்சில் ஏதோ கனமாக அழுக்குவது போலிருந்தது.

அருணோதயத்தில் மலர்ந்த செந்தாமரை போலிருந்த அந்தக் குழந்தை கையையும் காலையும் உதைத்துக் கொண்டு வீறிட்டு அழுதது. பாலுக்காகத் தாயின் நெஞ்சை எட்டித் தடவியது. தாய் பால் கொடுக்கும் நிலையிலா இருந்தாள்? கட்டிலில் கிடந்த ஒரு துணியோடு குழந்தையைக் கையில் எடுத் துக்கொண்டேன். கான்ஸ்டேபிள்களை அவளை எரிப்பதற்கான ஏற்பாடுகளைச் செய்யத் தூண்டினேன்.

அன்று! காலம் காலமாய்ப் பொங்கி வழிந்து கொண்டிருக்கும் பாணதீர்த்த அருவியின் கரையில் ஒரு தாயின் உடல், உடல் என்ற நிலையைக் கடந்து சாம்பலாயிற்று. காத்தியாயினி என்ற அழகு, காத்தியாயினி என்ற தேசபக்தி, காத்தியாயினி என்ற தாய்மை, காத்தியாயினி என்ற உண்மை, இனி என்றும் தலை எடுக்க முடியாமல் பொதிகை மண்ணில் கலந்து விட்டது.

குழந்தையோடு நானும் கான்ஸ்டேபிள் களும் பழைய பாபநாசத்தை அடைந்தபோது



தூத்துக்குடி திரு. வேலு செட்டியார் அவர்கள் புதல்வர், இளங்கவிஞர் திரு. தமிழழகனுக்கும் சென்னை திரு. எம். என். முத்து இருஷ்ணன் அவர்கள் குமாரி செல்வி நாக ரத்தினத்துக்கும் சமீபத்தில் சென்னை நகர் டாக்டர் மு. வரதராசனார் அவர்கள் தலைமை வகிக்கத் திருமணம் சிறப்பாக நடைபெற்றது. வாழ்க மணமக்கள்!

அங்கே எனக்குப் பொறி கலங்கக்கூடிய இன்னொரு பேரிடி காத்திருந்தது.

'மனைவிக்கு அபாயம். உடனே வரவும்' என்று அம்பாசமுத்திரத்தி லிருந்து தந்தி வந்திருந்தது. உடனே விக்கிரமசிங்கபுரத்தி லிருந்த போலீஸ் ஜீப்பை எடுத்துக் கொண்டு கிளம்பினேன். காத்தியாயினியின் குழந்தையை வேறு எங்கும் விட்டுச் செல்ல இயலாததனால் என்னோடு கூட்டிக் கொண்டு சென்றேன். புறப்படுவதற்கு முன் பாபநாசத்தில் கொஞ்சம் பசும்பால் வாங்கிக் காய்ச்சிப் புகட்டியிருந்ததனால் குழந்தையின் பசி அடங்கியிருந்தது. அம்பாசமுத்திரத்தை அடையும் போது இரவு ஒன்பதரை மணி.

வீட்டில் வேலைக்காரக் கிழவி இருந்தாள். அவள்தான் யாரோ படிக்கத் தெரிந்த ஆளைத் தேடித் தந்தி எழுதச் சொல்லி அடித்தாளாம்.

"என்ன? எப்படியாச்சு?"

"அதை என் வாயாலே எப்படிச் சொல்லுவேனுங்க! இப்பத்தான் ஆச்சு! குழந்தை உசிரோட பிறக்கலே. அம்மா இன்னும் பிரக்ஞை வராம இருக்காங்க. குழந்தை விஷயம் அவங்களுக்கு இன்னும் தெரியாது. தெரிஞ்சா மனசு விட்டுப் போயிடும்..."

வேலைக்காரி கண்ணீரைத் துடைத்துக் கொண்டே கூறினாள்.

குபீரென்று எனக்கு ஒரு யோசனை தோன்றியது. "நீ போய் டாக்டரை அழைத்துக் கொண்டு வா!" என்று வேலைக்காரியைத் துரத்திவிட்டுக் காத்தியாயினியின் குழந்தையை ஜீப்பிலிருந்து எடுத்து வந்தேன்.

குழந்தைகள் இடம் மாறின. காத்தியாயினியின் குழந்தை என் மனைவியின் அருகே இடம் பெற்றது. என் மனைவிக்குப் பிறந்த குழந்தை காத்தியாயினியின் 'இறந்த குழந்தை' என்று போலீஸ் டாக்டரிடம் அனுப்பப்பட்டது. டாக்டர் வந்தார். மனைவிக்குப் பிரக்ஞை வரவழைத்தார். அவள் குழந்தையின் முகம் கண்டு மலர்ச்சி பெற்றாள்.


காத்தியாயினியும் குழந்தையும் இறந்து விட்டதாகப் பாளையங்கோட்டை ஜெயிலில் ரங்கநாதனிடம் நானே நேரில் சென்று கூறியபோது அவன் கதறிக் கதறி அழுதான். அந்த அழுகை என் இதயத்தை உலுக்கியது. மனத்தைத் திடப்படுத்திக் கொண்டு உண்மையை மறைத்துக் கொள்வது எவ்வளவு கஷ்டமான காரியம்?

டிசம்பர்

என் மனைவி உடம்பு தேறி எழுந்து விட்டாள். 'தன்னுடைய' அழகான ஆண் குழந்தையைக் கொஞ்சுவதற்கு நேரம் போதவில்லை அவளுக்கு.

"இந்தாங்கோ! இதென்ன வேடிக்கை? நீங்கள் அட்டைக் கரிநிறம், நான் மாநிறம், நமக்குளெப்படி இவ்வளவு சிவப்பாகக் குழந்தை பிறந்தது?" என்று வேடிக்கையாகக் கேட்டாள் ஒருநாள். என் உடல் அப்போது கிடுகிடுவென நடுங்கியது.

டிசம்பர் கடைசியில் ஒருநாள். என்னைத் திருச்சிராப்பள்ளிக்குச் சர்க்கிள் இன்ஸ்பெக்டராகப் பிரமோஷனோடு மாற்றியிருப்பதற்



"சாமீ......இந்தப் பிள்ளையை உங்க பிள்ளை மாதிரி எண்ணிக்குங்க சாமீ......தருமவானே!"

காக என் சம்மதத்தைக் கோரி மேலதிகாரியிடமிருந்து உத்தரவு வந்தது.

அந்த உத்தரவு வந்த அதே சமயத்தில் வேறோர் கடிதத்தை உறைக்குள் இட்டு மேலதிகாரிக்கு அனுப்புவதற்கு விலாசம் எழுதிக் கொண்டிருந்தேன் நான்.

அது என் ராஜிநாமாக் கடிதம்! முதலில் மேலதிகாரி என் ராஜிநாமாவை ஒப்புக் கொள்ள மறுத்தார். பின் நான் வற்புறுத்தி ஒப்புக்கொள்ளச் செய்தேன். என் மனம் நிம்மதி அடைவதற்காக வேலையை உதறித் தள்ளினேன். ஆனால் அதன் பின்பும் நிம்மதி கிடைக்க வில்லை. சத்தியத்தை மறைத்து அசத்தியத்தை இரகசியமாக வைத்துக்கொண்டிருப்பவனுக்கு நிம்மதி ஏது?

★

டைரியைப் படித்து முடித்தாயிற்று. எத்தனையோ வருஷங்களுக்கு முன் நிகழ்ந்த நிகழ்ச்சிகளில் மூழ்கி எழுந்து கரையேறி விட்டேன். அதோ அவள் ஐம்பத்தாறு வயதுக் கிழவி. நான் எழுபது வயதுக் கிழவன். வீரராகவனுக்கு இருபத்தொன்பது வயது. மனைவி-குழந்தையோடு விக்கிரமசிங்கபுரத்தில் வேலை பார்க்கிறான். மில்லில் உத்தியோகம் பார்க்கிறான். அம்மாவையும், அப்பாவையும் பாண தீர்த்தம் பார்க்க வரச் சொல்லிக் கடிதம் எழுதியிருக்கிறான். "யார் அம்மா? யார் அப்பா? அதோ ரேழி வாயிற்படியில் தலைவைத்து உறங்குபவள் அவன் தாயாரா? நான் அவன் தகப்பனா? எது உண்மை?"

உலகம் அப்படிச் சொல்லி உறவுஉண்டாக்க வைத்தவன் நான்தானே? நான் சாகிறவரை அந்த இரகசியமும் சாகாது. பாணதீர்த்தம் பார்க்க வேண்டுமாம், பாணதீர்த்தம்! அந்த இடத்து மண்ணை இன்னொரு முறை இந்த ஜன்மத்தில் மிதிக்க மாட்டேன்! நல்லவேளை! காலம் மட்டும் இப்படி மறதியை உண்டாக்கா விட்டால் என் மனமே என்னைக் கொன்றிருக்கும்! மறந்துகொண்டே வாழ்கிறேன்.

"காலமே! ஓயாத சக்கரமே! எனக்கு இன்னும் நிறைந்த ஞாபக மறதியைக் கொடுத்தருள். நினைவே வேண்டாம். உனக்கும் உன் சக்திக்கும் ஒரு வணக்கம்."


கொண்டு விடுமுறை படம் பிடியுங்கள்!



பிலிமையே எப்பொழுதும் உபயோகியுங்கள்!

அன்பின் விலை

சூடாமணி



“சரியாய்ப் பாருடா, என் நம்பர் இருபத்தேழு பதினேந்து” என்று பதறினான் முரளி.

பாலு இன்னொரு முறை தினப் பத்திரிகையிலிருந்த எண் வரிசையின் மேல் கண்களை ஓட்டினான். அவனுக்கு இரு பக்கத்திலிருந்தும் தலையை முன்னால் நீட்டிப் பத்திரிகையைக் கண்களால் விழுங்கிய மற்றப் பையன்களின் முகங்களிலும் கவலை நிறைந்திருந்தது.

“ஊஹூம், இல்லையடா.”

“இருபத்தேழு பதினேந்து. இரண்டு ஏழு ஒண்ணு அஞ்சு.” முரளியின் குரல் பரிதாபமாய் யாசித்தது.

“இல்லையப்பா. மன்னிக்கணும்!” பாலு உதட்டைப் பிதுக்கி விட்டுப் பத்திரிகையை மடித்து விட்டெறிந்தான். முரளியின் இடிந்து போன தோற்றத்தைப் பார்த்தபோது அவனுக்குத் தான் பரீட்சையில் தேறியது பெரும் பாபமாகப் பட்டது.

“பாவம், முரளி!” என்றான் பொன்னம்பலம் என்ன சொல்வதென்றே புரியாமல்.

“டேய், இதெல்லாம் என்ன பரீட்சையடா? எவரோ தெரியாததெல்லாம் கேள்வி கேட்டு வைக்கிறார். எவரோ தமக்குத் தோன்றியபடியெல்லாம் திருத்துகிறார். இதில் தோல்வியுறுவது எவ்வளவோ தேவலை” என்று கூறிச் சிரிக்க முயன்றான் கிட்டு.

“ஒண்ணும் கவலைப்படாதேடா, முரளி. கணக்கு ஒண்ணுலேதான் போயிருக்கும். அதில் அடுத்த தடவை தேறி விட்டால் நீயும் எஸ். எஸ். எல். ஸி. தான்.”

“இந்த உலகமே ஒரு பைத்தியக்கார ஆஸ்பத்திரி, பரீட்சையாம் மண்ணாம்!” என்று பாலு திடீர் வேதாந்தத்தில் இறைந்து விட்டு முரளியைப் பார்க்கச் சகிக்காமல் எழுந்து ஓடினான்.

பிரமை பிடித்தவன் போல் அசைவற்று உட்கார்ந்து விட்டான் முரளி. ‘தோல்வி தோல்வி’ என்று அவன் மூளையில் யாரோ தாளம் போடுவது போல் இருந்தது. இப்போது என்ன செய்வது? தோல்வி அடைவது மானக்கேடல்லவா? பட்ட சிரமமெல்லாம் வீண். சிநேகிதர்கள் முகத்தில் இனி விழிப்பதுதான் எப்படி? .... இவைதான் தன் வேதனைகள் என்று தீர்மானிக்கப் போராடினான் முரளி. ஆனால் எங்கேயோ உள்ளுக்குள்ளேயே ஒளிந்தபடியிருந்தது. உண்மையில் அவனைப் பிடித்த பிரச்னை. அத்தை என்ன சொல்வாள்?

இந்த ஒரு விசித்திர பாரம் உள்ளத்தை அமுக்கிக் கொண்டிருக்கா விட்டால் அந்த உள்ளத்தின் உணர்ச்சிகள் எவ்வளவு இயற்கையாக வெளிப்பட முடியும்? சந்தோஷமோ துக்கமோ நிலையோ....ஆமாம், வாய் விட்டுத் தன் நிலைகூட அல்லவா சொல்ல முடியாத நிலை அவனுடையது. இன்று அவன் நேரே வீட்டுக்கு ஓடி, “ஐயோ, பரீட்சை போய் விட்டது” என்று யார் மடியிலாவது தலையைப் புதைத்துக் கொண்டு தன் துயரத்தை வெளிக்காட்டி அழ முடியுமா? அது முடியாததற்குக் காரணம் வீட்டிலுள்ள அன்பின்மையா? அப்படியிருந்தால்தான் அது ஒரு சாதாரண விஷயமாயிருக்குமே. அவனுடைய மனத்தைப் புதைத்து வைத்தது அன்பின்மையல்ல, அதிக அன்புதான். கழுத்தில் கல்லாய்த் தொங்கும் அன்பின் பேராசைதான் அவனை அல்லற்படுத்தியது.

“டேய் முரளி! போனால் போகட்டுண்டா. வீட்டுக்குப் போய் டிபன் சாப்பிடு. வயிறு காலியாயிருந்தாலே எல்லாம் இருக்கிறதை விட மோசமாய்த் தோன்றும்.”

இள நண்பனின் இந்த முதிய அறிவு முரளியை அசைத்து விடவில்லை. தரையில் நெட்டுக் குத்தியிருந்த அவன் கண்கள் பயத்தால் விரிந்தன. “ஊஹூம்...” தலை வேகமாய் ஆடியது.

வீட்டுக்குப் போவதா? எப்படி இனி வீட்டுக்குப் போவது? யார் வீடு அது? ‘நான் முட்டாள்’ என்று சொல்லிக் கொண்டு அந்த

வீட்டில் அவன் காலெடுத்து வைக்கலாமா? அன்புக்கு விலை கூறி வைத்திருந்த அந்த வீடு அவன் அறிவினத்தை ஏற்று நஷ்டமடைய ஒப்புக் கொள்ளுமா? அத்தை அவனை ஏன் தன் வீட்டில் வைத்துக் கொண்டிருக்க வேண்டும்? அம்மா போன புதிதில் நடந்தது அது. முரளிக்கு அப்போது பதின்மூன்று வயது. மூன்று குழந்தைகளுக்கிடையே அவன் தந்தை பிரமை பிடித்து உட்கார்ந்திருந்த போது, மற்றவர்கள் வருங்காலத்தை நிச்சயித்தனர். பெரிய பையன் கோபாலன் தகப்பனுருடன் அவர் தனபருக வாழ்வதற்கு வயது வந்த வன். முரளியையும் ஞானியையும் கொஞ்சம் பெரியவர்களாகும் வரை தங்களோடு வைத்துக் கொண்டு தாயன்பைக் கொடுக்க அத்தையும் மாமியும் முன் வந்தார்கள்.

இன்று அந்த வார்த்தைகளை நினைத்துக் கொண்டாலும் முரளிக்கு உடல் வியர்த்தது. குமுதம் தன் அண்ணனிடம், "நான் முரளியை வைத்துக் கொள்கிறேன், அண்ணு. சின்ன வயசிலேயிருந்தே எப்பொழுதும் படித்துக் கொண்டிருக்கிற கெட்டிக்காரப் பையன் அவன். அந்த மேதாவியை வளர்க்கிற பெருமை எனக்கே இருக்கட்டுமே!" என்றாள் புன்சிரிப்புடன். அன்றுமுதல் அந்தக் கெட்டிக்காரப் பட்டத்தில் அழுந்தித் தன் உண்மையான அறிவீனங்களை வாய் திறந்து சொல்ல முடியாத ஊமையாளுன் முரளி.

இளமையிலிருந்தே இலக்கியத்தில் அவனுக்கு ஆவல் அதிகம். எப்போதும் கதைப் புத்தகங்கள் படித்தவாறு இருப்பான். அந்த ஒரு சாதாரண ஆர்வத்தின் பயன் இவ்வளவு விபரீதமாக முடியுமா?...

"முரளி! படிக்கிறயாடா?"

"ஆமாம், அத்தை!". வெளியிலிருந்து தன் இரண்டு சிறு அத்தான்களுக்கு டியூஷன்



வாத்தியார் கணிதம் விளக்குவதைக் கவனிக்க முயன்றவாறே முரளி பேசினன்.

"ஓவல்டின் கொண்டு வந்தேன்.....உன் படிப்பைக் கெடுத்து விட்டேனு, அப்பா?" குமுதத்தின் அந்த நிலை தவறிய கரிசனத்தால் அவன் வேதனையுடன் தலைகுனிந்தான்.

"அதெல்லாம் ஒன்றுமில்லை, அத்தை!" ஓவல் டின்னைக் குடிக்கும்போது அறையின் நிசப்தத்தால் வெளியிலிருந்து வந்த குரல் இன்னும் பெரிதாகக் கேட்டது.

"இந்தப் பசங்கள் எதற்காக உன் அறைக்கு வெளியே அமர்ந்து படிக்கிறார்கள்? உனக்குத் தொந்தரவாக இருக்குமே?"

அவன் அவசரமாக, "அதெல்லாம் இல்லையே. நான்பாட்டுக்கு இங்கே படித்தபடி தான் இருக்கேன்..." என்று முடிப்பதற்குள் குமுதம், "நீ ஒருவர் தொந்தரவும் இல்லாமல் படிக்கணும்னு தனி அறையாக ஒழித்துக் கொடுத்தால், இந்த மூடங்கள் இங்கே வந்து உட்காருகிறார்களே? இதற்கு என்ன அர்த்தம் என்று கேட்கிறேன்" என்றாள் கோபமாக.

"தொந்தரவு எதுவும்..."

"நீ அப்படித்தாண்டா சொல்லுவாய், முரளி. உன் புத்திசாலித்தனத்துக்கு இப்படியே கூட நீ படிப்பாய். ஆனால் இந்த ஜடங்களுக்குத் தெரிய வேண்டாமா?"

"அவர்கள் ஜடங்கள் இல்லை அத்தை..."

"பின்னே என்ன, மேதாவிகளா? வீட்டிலே டியூஷன் வைக்கன்னு மூளையிலே பாடத்தைத் திணிக்க வேண்டியிருக்கிறது?"

முரளியின் கண்களில் நீர் வெளிவரக் கூடாதே என்ற பயத்தினுல் உள்ளேயே அடித்து ஒய்ந்தது. 'நானும் மேதாவி யில்லை, கணக்கைக் கொஞ்சம் கேட்கிறேனே' என்று சொல்லிவிட முடியுமா? அத்தையின் அன்பு ஆகாயத்திலிருந்து அறுந்து விழுந்து விடாதா! அந்த அன்பே பூமியில் இருந்தால்...?

"நான் இப்பொழுதே போய் அவர்களை வேறு இடத்துக்கு அனுப்பி விடுகிறேன்."


"வேண்டாம்வேண்டாம் அத்தை..." குமுதத்தின் முதுகில் பட்டு அந்த வார்த்தைகள் திரும்பி அவனிடம்தான் வந்து விட்டன.

"நீ நிம்மதியாகப் படி, அப்பா, நான் அவர்களை விரட்டி விடுகிறேன்."

இதையெல்லாம் நினைத்துப் பார்த்துக் கொண்ட போது முரளிக்குத் தாங்கவில்லை. தான் தானாகவே இருக்க முடியாத படி இது என்ன வாழ்வு?

இரண்டு வருஷங்கள் எப்படியோ அந்த வீட்டில் இருந்து பரீட்சை தேறினன். ஆனால் இந்தப் பெரிய பரீட்சை கடைசியில் இப்படியாகி விட்டதே! இதை எப்படி அத்தையிடம் சொல்வது? அவள் மேதாவியை அல்லவா வளர்த்தாள்? சாதாரணப் பையனை,

இந்தியாவுக்குப் பணியாற்றும் இறக்கைகள்



நாள்தோறும் உச்சிவேளையில்

50 ஐ. ஏ. ஸி. விமானங்கள் பறந்து கொண்டிருக்கும்!

இந்தியாவெங்கும் பறக்கும் இந்த விமானங்கள் வியாபாரிகள், டூரிஸ்டுகள், குடும்பமாகப் பிரயாணம் செய்பவர்கள் மற்றும் சரக்குகளையும் ஏற்றிச் செல்லுகின்றன. இடத்திற்கு இடம் மிக துரிதமாயும் சுகமாயும் செல்ல ஜனங்களுக்கு உதவியா யிருப்பதுடன், இந்த விமானங்கள் இந்திய மக்களை நாளுக்கு நாள் நெருங்கி உறவாட உதவவும் செய்கின்றன.

இந்தியன் ஏர்லைன்ஸ் கார்ப்பரேஷன் விமானங்கள் அன்றாடம் 132 ஸர்வீஸ்கள் மூலம், வருஷந்தோறும் 2 கோடி மைல்களுக்குமேல் பறக்கின்றன. மற்றும் துரிதமானதும், மிகவும் விரிவானதுமான போக்குவரத்திற்கான நம் நாட்டின் அதிகரித்துக் கொண்டுவரும் தேவையைப் பூர்த்தி செய்ய வருஷத்திற்கு வருஷம் இதன் விமானங்கள் அதிகரிக்கப் படுகின்றன.

இந்தியன் ஏர்லைன்ஸ்

கார்ப்பரேஷன்

5 & 6, மவுண்ட் ரோடு, சென்னை - போன்: 86433 (4 லைன்கள்)

IAC. 3907

உலகில் முதல் ஸ்தானம்

பிரஞ்சுக்காரனின் தலைவலி இருவது பிரேசில்காரன் கையில் இருக்கிறது என்று சொல்லுவது உண்டாம். இது பிரேசில் நாட்டில் உற்பத்தியாகும் காப்பிக் கொட்டையின் தர உயர்வை எடுத்துக் காட்டுகிறது.



தென்அமெரிக்கா கண்டத்தில் உள்ள நாடுகளுள் மிகப் பெரிதான பிரேசில், காப்பிக்கொட்டை உற்பத்தியில் உலகிலேயே முதல் ஸ்தானம் வகிக்கிறது. உலக நாடுகளில் உற்பத்தியாகும் மொத்தக் காப்பிக் கொட்டையில் முக்கால் பாகம் பிரேசில் நாட்டில்தான் விளைகின்றது. அங்கு காப்பிச் செடி விவசாயத்தில் பல லட்சக்கணக்கான தொழிலாளர்கள் ஈடுபட்டிருக்கிறார்கள். வெளி நாடுகளுக்கு ஏராளமாகக் காப்பிக்கொட்டை ஏற்றுமதி செய்வதால் பிரேசிலுக்கு அபரிமிதமான லாபம் கிடைக்கிறது. பிரேசில் நாட்டின் செழுமைக்கு முக்கிய காரணமான அமேஸான் நதியில், உலகில் உள்ள மற்றெந்த நதிகளையும் காட்டிலும் அதிகத் தண்ணீர் பாய்ந்தோடுவதும் அந்த நாட்டின் விசேஷ அம்சங்களில் ஒன்றாகும்.

பரீட்சையில் தோல்வியுறும் பையனை அவருடைய அன்பு அடையாளம் கூடக் கண்டு பிடிக்காதே. சரளமான பாதையில் காலை வீசி நடக்க முடியாமல் இப்படி ஏன் ஒரு கல்லைக் கட்டி விட்டிருக்கிறான்? மனிதனுக்கு அவனுடைய இயல்பான சாதாரணத் தன்மையை மறுக்க யாருக்கு உரிமை உண்டு?

ஆனால் இந்த யோசனைகளால் யாருக்கு என்ன உபயோகம்? அவன் அந்த வீட்டுக்குத் திரும்பிப் போக முடியாது. "அத்தை! நான் பெயில் ஆகி விட்டேன்" என்று அங்கு அழ அவனுக்கு உரிமை கிடையாது. அத்தைக்கு அவனிடமுள்ள அபரிமித அன்பு அந்தச் சிறு உரிமையை ஒரு பொருட்டாய் எண்ணவில்லை.

முரளி எழுந்து நேரே நடக்கலானான். மனம் இருந்த நிலையில் எவ்வளவு தூரம் நடந்தான், எப்போது ஒரு மனிதருடன் மோதிக் கொண்டான் என்பதே புரியவில்லை. மோதிய அதிர்ச்சியில் தடைப்பட்டு நின்ற போதுதான் கண்களுக்குப் பார்வை வந்தது.

"என்னப்பா, எங்கே யோசனை?" என்றார் ஒரு பெரியவர் சாந்தமாகவே.

"உம்! ஒன்றுமில்லை."

"அட என் மேல் இடித்தால் பரவாயில்லை, அப்பா. அதோ கொஞ்ச தூரத்திலே சமுத்திரம் இருக்கு பாரு? கவனப் பிசகாக அதிலே போய் மோதிக்கப் போகிறாய்!....." என்று அவர் சிரித்துக் கொண்டே போய்விட்டார்.

தான் மெரீனாவின் அருகில் இருப்பது அப்போதுதான் அவன் கவனத்துக்கு வந்தது. 'அந்த ஆள் சொன்னது நல்லதாயிற்று. எங்கே பார்த்திருக்கிறேன் அவரை? இது தான் இப்போது கவலையாக்கும்? கடற்கரையில் உட்கார்ந்து கொண்டால் மனச் சாந்தி ஏற்படும். மேலே செய்ய வேண்டியதையும் தீர்மானித்துக் கொள்ள வேண்டுமே...'

மனச் சாந்தி கிடைக்கவில்லை. 'தான் தேறவில்லை' என்ற எண்ணம் திடீர் திடீர் என்று தூக்கிவாரிப் போட்டது. அலைகடலோடு சேர்ந்து குதி கூட்டத்தான் விரும்பியது அலை பாயும் மனம்.

பரீட்சை நடந்து கொண்டிருந்த போது ஒரு நாள் மனத்தைத் தெரியப்படுத்திக் கொண்டு சந்தேகமான பாடங்களுடன் அத்திம்பேரை நெருங்கினானே, அப்போதாவது அதிர்ஷ்டம் கிட்டியதா?

"என்னடா, முரளி? அதென்ன கையில் புஸ்தகம்?"

"அதுவா? அது வந்து..."

"பாடத்திலே ஏதாவது சந்தேகமா?"

"யாரைப் பார்த்துக் கேட்கிறீர்கள் அப்படி?" குமுதம் எங்கிருந்தோ அப்போதுதான் வந்து சேர வேண்டுமா? "உங்கள் பிள்ளைகள் மாதிரி அவனை நினைத்து விட்டீர்களா? முரளிக்கு எல்லாம் தலைகீழ்ப் பாடமாக்கும்" என்றாள் அவள் தன் கணவனிடம்.

"தலைகீழாக எழுதினால் பரீட்சையில் எவன் மார்க்கு கொடுப்பான்?"

"உங்கள் ஹாஸ்யத்தை உங்களோடு வைசக்குங்கோ, எனக்குத் தாங்காது. என் மருமானுக்கு யாரும் சொல்லிக் கொடுக்க வேண்டியதில்லையாக்கும்."

"பின்னே என்ன போ, முரளி! ஹாய்யாக இரு. நீ படிக்க வேண்டாம்னு உங்க அத்தையே சொல்லி விட்டாள்."

"இப்படி ஒரு நாளிலேயே உங்க நகைச்சுவை யெல்லாம் செலவழிந்து விடுகிறதே, பாவம், நாளைக்குக் கொஞ்சம் வேண்டாமா? நீங்கள் ஒன்றும் அவனுக்குச் சொல்ல வேண்டாம். அவன் படிக்காமல் இருந்தானானால் எல்லாம் படிச்சு முடித்து விட்டான்னு தான் அர்த்தம்."

"ஏதோ அப்படி இருந்தால் சரி."

"அத்திம்பேர்....."

"நாளைக்கு அவன் பரீட்சையில் ராஜதானிக்கே முதலாவதாகத் தேறி வருகிறானா இல்லையா பாருங்களேன்."

"அத்தை....தயவுசெய்து..."

"சரஸ்வதியிடம் வரப்பிரசாதம் வாங்கிக் கொண்டு வந்திருக்கிற பிள்ளைக்கு இவர் என்னமோ சொல்ல வந்துவிட்டார்."

மேதாவியின் சௌகரியத்துக்காகக் கொடுக்கப்பட்ட தனி அறையில் அவன் உள்ளம் குமுறிக் குமுறித் தவித்தது. முகத்தைக் கைகளில் புதைத்துக் கொண்டு நிராசையுடன் நிராசையாய் ஒன்று கலந்த போதுதான் பாது வந்தாள்.

"முரளி, என்னடா இது?"

வெடித்துப் போகும் இதயத்தைச் செப்பனிடும் பிரயாசையில் பிறந்த புன்னகை செத்துப் பிறந்தது.

"தலையை வலித்தது. அவ்வளவுதான்."

"நன்றாக உரு ஏத்தியிருப்பே."

மறுபடியும் நெஞ்சை யாரோ அறுப்பது போல் இருந்தது. "அதெல்லாம் இல்லை

யடா.'' அதற்கு மேல் சொன்னால் அத்தை வீட்டுச் சுவர்கள்கூட அவனை அதிர்ச்சியோடு வெறித்துப் பார்க்குமென்று ஒரு பிரமை.

''பின்னே எங்கள் வீட்டுக்கு வாயேன். கொஞ்சம் கணக்குப் போட்டுப் பார்க்கலாம் என்று இருக்கிறேன். சேர்ந்து போட்டால் இன்னும் 'இன்ட்ரெஸ்டிங்'கா இருக்காது?''

முரளி துள்ளிக் கொண்டு எழுந்தான்.

பாலு வீட்டு வாசலில் அவர்களை எதிர் கொண்ட உருவத்தைப் பார்த்து முரளிக்கு ஒருவித நிம்மதி பிறந்தது.

''வாடா பாலு! இது யார் சிநேகிதப் பையனா?'' என்று அந்த அம்மாள் மலர்ச்சி யோடு வரவேற்றாள்.

''ஆமாம், அம்மா! கூடப் படிக்க அழைத்துக் கொண்டு வந்திருக்கிறேன். இவனுக்கு முரளின்னு பேரு.''

''வாப்பா, முரளி! யார் வீட்டுப் பிள்ளை நீ?'' என்று கேட்டாள்.

''வேலூர் எஞ்சினீயர் ராகவாச்சாரியின் பிள்ளை நான்!''

''ஓஹோ! உங்கள் அத்தையை எனக்குச் சிறு வயதிலிருந்து தெரியும். வெடவெட வென்று பேசுவாள். ஆனால் மனசு நல்லது.''

''அத்தை வீட்டிலேயிருந்துதான் படித்துக் கொண்டிருக்கிறேன்.''

''அப்படியா? பாவம், நன்றாகப் படி. கூடப் பிறந்தவர்கள் இருக்கிறார்களா உனக்கு?''

''போதுமே அம்மா. அவன் படிக்க வந்திருக்கிறான். தொந்தரவு பண்ணாதே.''

முரளிக்கு என்னவோ அவள் தொந்தரவு செய்வதாகவே தோன்றவில்லை.

''நன்றாகப் படிக்கட்டுமே! ஏனப்பா முரளி, உங்கப்பாவை யெல்லாம் விட்டுவிட்டு நீ மட்டும் பட்டணத்தில் இருக்கிறாயா?''

''அம்மா, அம்மா....''

''இதோ வாயை மூடிக் கொண்டு விட்டேன். அப்பா முரளி, எங்கள் பாலு ரொம்ப மக்கு. சதா படிச்சால்தான் மூளையில் ஏறும்.''

அப்போது முரளி வாய் திறந்து இதயத்திலிருந்து வெளியே கொட்டி ஆறுதல் அடைந்தான். ''நான்கூட மக்குதான், மாமி.''

பாலுவுடன் சேர்ந்து கணிதம் பயின்ற போது முரளிக்குத் தான் இந்த உலகத்தில் இருப்பதாகவே தோன்றவில்லை. தங்கு தடையின்றிப் பாடம் படிப்பதிலும், வராத கணக்கை 'வரவில்லை' என்று சொல்லி நண்பன் முகத்தைப் பார்த்து உதட்டைப் பிதுக்குவதிலும்தான் இன்று எத்தனைய இன்பம் இருந்தது! சிரிப்புக்கிடையே மாணவர்களின் பிரயாசை இரவு பத்து மணி வரை நடந்தது. ஒரு புதிய நம்பிக்கையுடன் அவன் விடைபெற்றுக் கொண்டான்.

''வரேன், மாமி!''

''நிறையப் படித்தாயா?''

''இப்படியே நானைக் காலையிலும் தாக்கினால் கல்லுக் கோட்டை மாதிரி இருக்கிற என் மக்குத்தனம்கூட அசைந்து கொடுத்து விடாதா?'' அவன் பேச்சிலேயே ஆர்வம் துள்ளியது. பாலுவுடன் சேர்ந்து படித்தது அவன் உற்சாகத்துக்குப் புத்துயிரல்லவா கொடுத்து விட்டது! அந்த உற்சாகத்தில் தீட்டப்பட்டுப் புத்தியும் அல்லவா புதுக் கூர்மை பெற்றது போல் ஆகிவிட்டது! இரவு ஒரு மணி வரை அந்தப் புத்துணர்ச்சியால் தூக்கம் வரவில்லை. காலையில் கொஞ்சம் பயிற்சி செய்து விட்டால் உலகத்தையே வென்றுவிட முடியும் போல் ஆவல் பொங்கியது. எங்கோ தூரத்தில் இரண்டு மணி அடிப்பதைப் பாதி உணர்ந்து கண்ணயர்ந்தான் முரளி. காலையில் கண் விழித்தபோது கண்ணில் வந்து அடித்த பிரகாசத்தில் வைகறையின்மென்மை இல்லை. எழுந்து கடிகாரத்தைப் பார்த்தான். மணி ஒன்பது.

''அத்தை, அத்தை! மணி ஒன்பது!''

''ஆமாம். இந்தா, காப்பி. அல்லது ஒரே யடியாய்ச் சாதத்தையே...''

'இன்றைக்கு எனக்குப் பரீட்சை, அத்தை! உனக்குத் தெரியாதா?''

''தெரியும்.''

''பின்னே ஏன் விடியற்காலையில் எழுப்ப வில்லை? ஒன்பது மணி வரைக்கும் ஏன் அத்தை என்னைத் தூங்க விட்டாய்?''

''நீ எந்தக் காரியத்தையும் தெரியாமல் செய்ய மாட்டாய். பாடத்தை யெல்லாம் படித்து முடித்திருப்பேன்னு நினைத்தேன். இதுவே நீ மக்குப் பையனாயிருந்திருந்தால் நாலு மணிக்கே எழுப்பியிருப்பேன்.''

முரளியின் கண்கள் சமுத்திர அலை மேல் சுழன்றன. 'மனம் எங்கோ அதல பாதாளத்தில் விழுந்து விட்டது போல் தோன்றிய நிலையில் மூளை இன்னும் மழுங்கிக் கணக்குப் பரீட்சையில் தோற்று விட்டது ஒரு ஆச்சரியமா? அத்தை ஏன் அவனுக்கு இப்படி அன்பினால் துரோகம் இழைக்க வேண்டும்? நெஞ்சை யாரோ முறிப்பது போல் உள்ளே வலித்தது. இப்போது என்ன செய்வது? எதை நினைத்து அழுவது? பேசாமல் கடலுக்குள் இறங்கி விட்டால் என்ன? அல்லது தகப்பனாரிடம் ஓடிப் போய் விடலாம். முட்டமோ முட்டாளோ, பைத்தியமோ, போக்கிரியோ, அன்பைக் 'கொடுக்கிறோம்' என்ற தன் நினைவு இல்லாமல் கொடுக்கக் கூடியவர்கள் உலகத்தில் அப்பாவும் அம்மாவும்தானே. மீதி எல்லோருடைய அன்பும் ஏதாவதொரு நிபந்தனையுடன் கூடியதுதான். அல்லது எங்காவது வெளியூருக்கு ஓடிப்போய்க் கதைகளில் வருவது போல் பல வருஷங்களுக்குப் பின் பெரியவியாபாரியாகவோ பெரியவேலையிலோ தேர்ந்து திரும்பி வந்து அத்தையை அதிசயத்தில் மூழ்கடிக்க முடிந்தால்......

''முரளி!''

அவன் கண்கள் திகிலுடன் விழித்தன. எதிரே அத்தை, அத்திம்பேர், இன்னும் யார் யாரோ நின்றனர்.

''முரளி, என்ன இது? உன்னை எங்கேயெல்லாமடா தேடுவேன்! நம் கோடிவீட்டுக்காரர் தற்செயலாய் உன்னைப் பாராதிருந்திருந்தால்...'' அத்தையின் குரல் தழதழத்தது.

''அத்தை....பரீட்சை....''

''தெரியும். பாலு சொன்னான். அதனால் என்ன? அதற்காக என்னை விட்டு விட்டு நீ போய் விடலாமா? என் பையனில்லையா?''

முரளி ஒரு நிமிஷம் பேச்சற்று அவள் முகத்தைப் பார்த்தான். பிறகு ஓடி வந்து அவள் கால்களைக் கட்டிக்கொண்டான். விம்மலுடன் உள்ளத்திலிருந்து வந்த வார்த்தை 'அத்தை' என்றுவரவில்லை; 'அம்மா' என்றுதான்வந்தது.

Arvind

QUALITY FABRICS

·SANFORIZED·
SHRUNK FABRIC

ஷர்ட்டிங்குகள் பாப்ளின்கள்
கோட்டிங்குகள்
மற்றும்
பல ரக கலர்களில்
பிரிண்டுகள்

அரவிந்த் மில்ஸ் லிட்.

அஹமதாபாத் - 2



நான் மிகவும் கண்டிப்பான பேர்வழியாக்கும்
எனக்கு, சிறந்த பொருள்கள்தான் ஒத்துக்கொள்ளும். ஆமாம், மட்டமான சரக்கை என்கிட்டே யாராவது தள்ளப்பார்த்தால் அந்தப் பாச்சா என்கிட்டே பலிக்காது. எங்கம்மா இருக்காளே, சாமர்த்தியக்காரி. அவள் எனக்கு கிளாக்ஸோவைதான் ஆகாரமாய்க் கொடுக்கிறாள். கிளாக்ஸோ பரிசுத்தமான புஷ்டி தரும் பால் ஆகாரம். அது மட்டுமா? அதில் எலும்பு வளர்ச்சிக்கு வேண்டிய விடமின்-டியும், ரத்தப் புஷ்டிக்கு அவசியமான இரும்பு சத்தும் சேர்ந்திருக்கின்றன. எனக்கு பகலெல்லாம் ஒரே கொண்டாட்டம். இரவில் அயர்ந்த தூக்கம். என் உடம்போ—பேபி ஸாண்டோ! என் அம்மாவுக்கு வேறு என்ன பரிசுவேண்டும்!
நான் சிபாரிசு செய்வது க்ளாக்ஸோ
Glaxo
குழந்தைகளுக்கு நிகரற்ற பால் உணவு
SUNSHINE Glaxo
க்ளாக்ஸோ லாபரட்டரீஸ் (இந்தியா) பிரைவேட் லிட்.
பம்பாய் . கல்கத்தா . மதராஸ் . புதுடெல்லி



"அக்கா! தங்கையை அழைத்து வருவதாக இருக்கிறேன்!"

"நான் இருக்கும்போதே அந்த ராங்கிக்காரி இங்கே வந்து விடுவாளோ?"

"உன்னை மன்றாடிக் கேட்டுக்கொள்கிறேன், அக்கா! தங்கை கொஞ்ச நாட்களுக்காவது வந்து இங்கே இருக்கட்டும்."

"ஏண்டா, தம்பி! என்னைத் துரத்தத் தானே வழி? நீ குடியும் குடித்தனமுமாக ஆனந்த வாழ்க்கை நடத்துவதைக் கண்டு களிக்க வேண்டும் என்று வந்திருக்கிறேன். என்னைக் கண்டால் கட்டோடு பிடிக்காத அவளை அழைத்து வருவதாகச் சொல்லி என்னை இப்படிப் போகச்சொல்கிறாயே, நன்றா யிருக்கிறதா? நீ கழுத்தைப் பிடித்துத் தள்ளி னாலும் நான் போகமுடியாது!"

"'பட முடியாது இனித் துயரம், பரம் பொருளே! என்னை ஆட்கொண்டு விடு!' என்று தினம் பொழுது விடிந்தால் பொழுது போனால் வேண்டிக் கொண்டிருக்கிறேன், அக்கா. தயவுசெய்து தங்கையை அழைத்து வரும் விஷயத்தில் மட்டும் குறுக்கிடாதே!"

"ஏண்டா தம்பி! நான் அவ்வளவு இளப்ப மாகவா போய்விட்டேன்? முன்பு ஒரு தடவை பணத்திலே புரளும் உன் தங்கை வந்திருந்தாளே! அவள் உனக்கும் உன் மனைவிக்கும் ஆக விட்டாளா? அவளது சீரிலும் சிறப்பிலும் மயங்கிவிட்ட உன் மனைவி 'ஒன்றும் வாங்கிப் போடத் துப்பில்லாதவர் என்னை ஏன் மணந்து கொள்ள வேண்டுமாம்?' என்று கேட்டு உன்னைத் தூக்கி யெறிந்து பேசினாளே, அதையெல்லாம் மறந்து விட் டாயா? நான் வந்தால் உங்கள் இருவரது அன்பையும் வளர்க்கிறேனே ஒழிய, உங்களைப் பிரித்து வைக்க என்றைக்காவது பாடுபட் டிருக்கிறேனா? இன்றைக்கும் எதற்காக வந்திருக்கிறேன்? உன் மனைவி பிள்ளைப் பேற்றை எதிர்நோக்கி யிருக்கிறாள். குழந்தை களையும் குட்டிகளையும் வைத்துக்கொண்டு சிரமப்படுவாயே என்று எண்ணி உன் ஒத் தாசைக்குத்தானே, வந்திருக்கிறேன்!"

"அது சரி, அக்கா! இருந்தாலும் தங்கை வந்தால், இந்தப் பேறு காலத்தில் எவ் வளவோ உதவியாக இருக்கும். அவள் பணத் தைக் கொண்டு உதவி செய்வாள் அல்லவா?"

"அப்படியானால் உன் வீடு தேடி வலிய வந்த என்னை விரட்டியடிக்கவா பார்க்கிறாய்?"

"அப்படியே வைத்துக் கொள்!" என்று கூறிய தம்பி அப்புறம் அங்கே நிற்கவில்லை.

"அக்கா! தங்கை வரமாட்டாள் என்று சொன்னாயே! அதோ, பார்! வாசலிலேயே வண்டி வந்து நின்று விட்டது. அக்கா! அதோ தங்கை வண்டியிலிருந்து இறங்குகிற ஜோரைப் பாரு! அவள் அணிந்திருக்கிற கனகாம்பரப் புடவையே புடவை! காது களில் ஜொலிக்கும் லோலக்கு ஆடும் அழ கைப் பார்! ஆகா! மெட்டி குலுங்க எத்தனை சொகுசாக நடந்துவருகிறாள்! அக்கா, தங்கை வர மாட்டாள் என்று சொன்னாயே! இதோ வந்து விட்டாள், பார்! அக்கா! அக்கா!"

தம்பி கூப்பிட்டானே தவிர அக்காவிட மிருந்து பேச்சு மூச்சு இல்லை. திரும்பிப் பார்த்தால் அக்கா கொல்லைப்புறமாக ஓடிக் கொண்டிருந்தாள். தங்கை இறங்கி வந்தவள், "என்னடா! தனக்குத்தானே பேசிக் கொண் டிருக்கிறாய்?" என்று தம்பியைக் கடிந்த வாறே உள்ளே நுழைந்தாள்.

"இல்லை, ஸ்ரீ தேவி! நீ வரமாட்டாய் என்று அக்கா சொன்னாள். நீ வந்துவிடுவாய் என்று நான் சொன்னேன். உண்மையாகவே நீ வந்து விடவே, உன்னைப் பார்க்கப் பிடிக்கா மல் அதோ கொல்லைப்புறமாக ஓடுகிறாள், பார்! உன்னைக் காண ஏன்தான் அவளுக்கு அவ்வளவு வெறுப்போ, தெரியவில்லை!"

"யார்? அக்காவா? இங்கே வந்திருந் தாளா? அவளைப் பார்த்து எத்தனை நாட்க ளாகிவிட்டன? என்னைக் கண்டு அவள் ஓடு வானேன்? நான் அவள் தங்கைதானே? இரு, இரு! இதோ நான் அவளைப் போய் ஒரு முறை பார்த்து விட்டு வந்து விடுகிறேன்."

அக்காவைத் தொடர்ந்து ஓடினாள் தங்கை. அக்கா ஓடத் தங்கை ஓட, ஒரு பெரிய ஓட்டப் பந்தயமாகவே ஆகி விட்டது.

"அடி, மூதேவி! ஏண்டி இப்படி ஓடு கிறாய்?" என்று குரல் சென்ற மட்டும் கத்தினாள் தங்கை.

"அடி, ஸ்ரீதேவி! உன்னைப் பார்க்கப் பிடிக்காமல்தான்!" என்று கூறி அக்கா இன்னும் வேகமாக ஓடினாள்.

அக்காளும் தங்கையும் இல் லாத வீடுதான் தம்பிக்கு அமைதி சூழ்ந்ததாகக் காட்சி அளித்தது. 'அக்காளும் தங் கையும் இல்லாத இந்த ஆனந் தத்துக்கு ஈடு இணை இடை யாது. இதுதான் நித்தியானந் தம், பரமானந்தம்!" என்று முணுமுணுத்தான் தம்பி.

அப்பொழுதுதான் உள்ளே பிறந்த குழந்தை சாந்தியின் குரல் அதை ஆமோதிப்பது போல் பேரின்பமாக அவன் செவிகளிலே ஒலித்தது.



"என்னப்பா? சிவக்கொழுந்து?"

"யாரது?"

"நான்தானப்பா! உன் மனச்சாட்சி!"

"என்ன! மனச்சாட்சியா?"

"ஆமாம்! ஆமாம்! சிந்தனை முடிந்து விட்டதா?"

"சிந்தனையா! எதற்காக?"

"என்னப்பா? என்னிடமே ஒளிக்கப் பார்க்கிறாய்......."

"இதில் ஒளிவென்ன? மறைவென்ன? இத்தனை நேரம் உன்னோடுதானே போராடிக் கொண்டிருந்தேன்...?"

"நல்லதைச் சொல்ல வந்தேன்...! உனக்குப் பிடிக்கவில்லை என்றால்?"

"எது நல்லது? நான் இப்படித் தவியாய்த் தவிப்பதா?"

"தவிப்பானேன், சிவக்கொழுந்து? தாராளமாகப் போயேன்...!"

"நான் அங்குதானே போய்க் கொண்டிருக்கிறேன்...."

"போ! போ! இன்று அவள் தனியாகத் தான் இருக்கிறாள் — அவளுடைய தாய் தந்தையர்கள் பக்கத்து ஊருக்குச் சென்றிருப்பதும், அவளுடைய தம்பி சினிமாவுக்குப் போயிருப்பதும், எல்லாம் உனக்காகத்தான்."

"எனக்காகவா...?"

"பின் யாருக்காக? போ சீக்கிரம். உனக்கு இன்று நல்ல வாய்ப்புத்தான்!"

"இதைப்போல ஒரு சந்தர்ப்பத்துக்கு எத்தனை நாட்களாய்க் காத்துக் கொண்டிருந்தேன், தெரியுமா?"

"எனக்கு நன்றாய்த் தெரியும். பின் ஏன் தயங்குகிறாய்? போயேன், உடனே!"

"உனக்குப் பயந்துதான்..."

"எனக்கா பயப்படுகிறாய்? நன்றாயிருக்கிறது! என்னை உதறி விட்டுத்தானே நீ கிளம்பி விட்டாய்?"

"உனக்கென்ன தெரியும்? நான் அவளை நினைந்து படும் பாடும் வேதனையும்!"

"சிவக்கொழுந்து! இதோ பார்! நீ அவளுடைய குரு! நாட்டிய ஆசான் என்பது நினைவில் இருக்கட்டும்!"

"ஆசிரியனுக்கு இதயமே இருக்கக் கூடாதா?"

"ஏன் கூடாது?"

"அன்பைச் செலுத்த அருகதையற்றவனா?"

"நன்றாகச் செலுத்து! ஆனால்!..."

"என்ன ஆனால்? எல்லோரையும் போல் எனக்கும் ஒருத்தியைக் காதலிக்க உரிமை உண்டா? இல்லையா?"

"யார் இல்லை என்றார்கள்?"

"இளமைக்கு இயற்கை அளித்திருக்கும் உணர்ச்சிகளை நான் மட்டும் எதற்காகப் பொசுக்கிக் கொள்ள வேண்டும்?"

"நீ ஒரு சாதாரண மனிதனாக மட்டும் இருந்தால்—உன் வாதம் சரி!"

"ஆசானுக்கு ஆசை கூடாது என்கிறாயா?"

"வெறும் ஆசான் மட்டுமல்லவே நீ!"

"கலைஞனுக்குக் காதல் உதவாது என்று சாதிக்கிறாய் போலிருக்கிறது!"

"ஆம். கலைஞன் கலைஞனாகவே இருக்க வேண்டும்."

எதிர் வீட்டுப் பெண்



" அழகை ரசிப்பதும், காதலிப்பதும் கலைஞனின் தொழில்தானே ?"

" அழகை ரசிப்பது கலைஞனின் செயல்தான். ஆனால் அதைக் கொள்ளையடிக்க முயல்வதும் நினைப்பதும்....."

" என்ன ?"

" புரியவில்லையா ? அழகை ரசிப்பவன் கலைஞன்—அதைக் கவர்ந்து விடுவதற்கு முயல்பவன் காமுகன் !"

" வீணாக என் பேரில் குற்றம் சாட்டுகிறாய்! மாலதி என்னை நேசிக்கிறாள் என்று ஆயிரம் தரம் சொல்கிறேன்...நீயானால்...!"

" மாலதிக்கு உன் மீது ஒரு விதக் கவர்ச்சி இருக்கிறது என்பதை ஒப்புக் கொள்கிறேன்! ஆனால் அது காதலாகாது. இயற்கையாகவே ஒவ்வொரு பெண்ணும் தன் பருவ காலத்தில், எந்த ஆணுடன் நெருங்கிப் பழக நேர்ந்தாலும், இதைப் போன்ற ஒரு மயக்கம் கொள்வது உண்மைதான் ! அவனுடைய ஆண்மைக்கு அவள் கீழ்ப்படிந்து விடுவதும் உண்டு. ஆனால் அதைக் காதல் என்று நிர்மானித்து விடுவது கொஞ்சமும் சரியல்ல !"

" என்னைக் காணும் பொழுது அவள் முகத்தில் படரும் அந்த மகிழ்ச்சி, கண்களின் ஜொலிப்பு ; எல்லாமே வெறும் கவர்ச்சியினால் தான் என்கிறாயா ?"

" அப்படியே நீ நினைப்பதைப் போல் அவள் உன்னைக் காதலிப்பதாக வைத்துக் கொண்டாலும், உன் கடமை என்ன ?"

" உணர்ச்சியற்ற மரக் கட்டையாகப் பிறக்கவில்லையே நான் !"

" மற்றவர்களை விட, சில தியாகங்களைச் செய்கிறவன்தானே உண்மைக் கலைஞனாக, உயர்ந்த மனிதனாக இருக்க முடியும்?"

" எல்லா சுகத்தையும் தியாகம் செய்து விட்டுப் பிறகு எதற்காகத்தான் ஒருவர் வாழ வேண்டுமோ, தெரியவில்லையே !"



"உன் ஸ்தானத்துக்கு நீ அளிக்க வேண்டிய காணிக்கையப்பா அது !"

" இப்போ, என்னை என்ன தான் செய்யச் சொல்கிறே?"

" சரி தான் போ ! இத்தனை நேரம் உன்னோடு போராடியது அவ்வளவும் வீண்தான் !"

" நீ பாழாய்ப் போக ! உன் பேச்சைக் கேட்டு, கிடைத்தற்கரிய இந்தச் சந்தர்ப்பத்தை நழுவ விடமாட்டேன் !"

" நீ வெறும் சிவக்கொழுந்து அல்ல ; பல தாய் தந்தையர்களின் நம்பிக்கைக்குப் பாத்திரமான நட்டுவனார்-சிவக்கொழுந்து !"

" ஆமாம் ! அதற்காக என்னை நானே ஏமாற்றிக் கொள்ள முடியாது. நான் மாலதியைக் காதலிக்கிறேன். அவளும் அப்படித்தான் ! இல்லாவிட்டால்.....நேற்று மாலை பாடம் முடிந்து வரும்பொழுது, 'சார் ! நாளைக்கு அம்மாவும் அப்பாவும்

ஊருக்குப் போகிறார்கள். தம்பியும் சினிமாவுக்குப் போவதாகச் சொல்கிறான். வீட்டில் நான் மட்டும்தான் தனியாக....!' என்று மகிழ்ச்சியுடன் கூறியதன் பொருள்?''

''சரி, சரி! உன்னோடு வாதிட்டு ஒரு பயனும் இல்லை!''

மனச்சாட்சி தன் போரை நிறுத்திக்கொண்டது. இதுகாறும் சிந்தனை வயப்பட்டிருந்த சிவக்கொழுந்து. ஏதோ தீர்மானத்துக்கு வந்தவனாய்க் கையையும் காலையும் உதறி விட்டுக் கொண்டு வேகமாக நடந்தான்.

இரவு ஒன்பது மணி இருக்கலாம். வீதியில் மனித நடமாட்டமே இல்லை. அப்படியே இருந்தாலும் அவனை யாரும் கொஞ்சமும் சந்தேகிக்கப் போவதில்லை. எந்த நேரத்திலும், எங்கு வேண்டுமானாலும் அவன் போகலாம், வரலாம்!

அவன் தொழில் அத்தகையது என்பது மட்டும் காரணமில்லை. ஊரிலும் நல்ல பெயர். எத்தனையோ வயது வந்த பெண்களுடன் நெருங்கிப் பழகி, அவர்களுக்குப் பரதம் பயிலுவிக்கும் ஆசானாகிய சிவக்கொழுந்தினுடைய ஒழுக்கத்தைப் பற்றி இது வரையில் யாரும் குறை கூறியதில்லை. இன்னுன்தா னென்றாலும் அவன் நம்பிக்கைக்குப் பாத்திரமானவன்.

மாலதியின் பெற்றோர்களுக்கு அவனிடம் ஒரு தனிப்பட்ட அன்பும் மரியாதையும் உண்டு. மற்ற வீடுகளில் இல்லாத பிரத்தியேகச் சலுகைகள், உரிமைகள் எல்லாம் அவனுக்கு அந்த வீட்டில் அளிக்கப்பட்டிருந்தன.

மாலதியின் தாய் தந்தையர்களுக்குச் சிவக்கொழுந்தினுடைய நட்டுவாங்க மேதையில் அபார லயிப்பு, நம்பிக்கையும் கூட. மொத்தத்தில் அவனைத் தங்கள் குடும்பத்தில் ஒருவனாகவே பாவித்துப் பழகி வந்தார்கள்.

அவனும் ஆரம்பத்தில் வேறு எந்தவித நோக்கமும் இல்லாமல் ஒரு நட்டுவனார் என்ற முறையில்தான் மாலதியுடன் பழகி வந்தான்.

ஆனால் கண்களைக் கொத்தும் மாலதியின் அழகு அவனைப் பைத்தியமாக்கி விட்டது. அவளுடைய அந்த முல்லைச் சிரிப்பு அவன் அறிவைத் தின்று விட்டது. முடிவில் சிவக்கொழுந்தின் இளம் உள்ளம் இயற்கையின் உற்பாதங்களுக்கு அடிமையாகித் தத்தளிக்க ஆரம்பித்து விட்டது.

இதற்கு அவனை மட்டும் குறை கூறுவதற்கில்லை. மாலதி அவனோடு பழகிய விதமும் அப்படித்தான் இருந்தது. குழியும் கன்னங்களோடும் கோமளச் சிரிப்போடும் பேசிப் பேசி, அவனுடைய நெஞ்சில் ஆசைக் கனலை வைத்து ஊதிக்கொண்டேயிருந்து விட்டாள்.

கனல் கனிந்து காதல் தீயாக மாறிக் கொழுந்து விட்டுப் பெரிதாக எரியத் தொடங்கி விட்டது.

இன்று மாலதியின் பெற்றோர்கள் ஊரில் இல்லை. அவளுடைய தம்பியும் சினிமாவுக்குச் சென்றிருப்பான். வீட்டில் அவள் மட்டுந்தான் இருப்பாள்.

சாதாரணமாக, தினசரி மாலை ஆறு மணி யளவுக்குத்தான் சிவக்கொழுந்து நடனப் பயிற்சி யளிப்பதற்காக அவள் வீட்டுக்குப் போவான். ஆனால்!........ இன்று.......வேண்டுமென்றே நேரம் கழித்துச் செல்கிறான்.

வீடு நெருங்கி விட்டது. நல்ல வேளை! தெருவில் யாரும் இல்லை. அதோ! மாலதியின் வீடு. இன்னும் இருபது கெஜம்!

'ஐயோ! இது என்ன! உடலெல்லாம் திடீரென்று நடுங்க ஆரம்பித்து விட்டது; கால்கள் கூடத் தடுமாறுகின்றனவே! ஹா! அங்கே இருளில் யாரோ நின்று கொண்டு கூர்ந்து கவனிக்கிறார்கள் போலிருக்கிறதே! கவனிக்கட்டுமே, எனக்கென்ன பயம்! தினமும் போவதைப் போலத்தானே போகிறேன்? எதற்காக ஒருவர் என்னை அப்படி உற்று நோக்க வேண்டும்? ஒரு வேளை....என் மனதிலுள்ளதைத் தெரிந்து கொண்டு விட்டார்களோ? சே! எப்படித் தெரிந்து கொள்ள முடியும்?....எல்லாம் வீண் பிரமை! அவசியமற்ற சந்தேகம்!'

சிவக்கொழுந்து தடுமாறும் உள்ளத்தையும் உடலையும் ஒழுங்குபடுத்த முடியாமல் தவித்துக் கொண்டே மாலதியின் வீட்டை யடைந்தான்.

வாசற்படியில் காலை வைத்தான். கதவு சாத்தப்பட்டிருந்தது. 'மாலதி!'




வீடு, தோட்டம்
தொழிற்சாலை
முதலியவைகட்கு
இப்பொழுது
சாதாரணமாக
தண்ணீர்
கிடைக்கிறது
தண்ணீர் சப்ளை கஷ்டத்தை ஒழியுங்கள்
மயர்ஸ் ஷாலோ-வெல் ரெஸிப்ரோகேடிங் பம்பை பொருத்துங்கள். V 912. சீக்ஸ் 500 - 4000: G.P.H. பிரஷர் 100 lbs. V931 சீக்ஸ் 260-1750: G.P.H. பிரஷர் 250 lbs. இன்றே எங்களைக் கலந்தாலோசியுங்கள்.
தொல்லை இன்றி தண்ணீர் கிடைக்க
மயர்ஸ்
ஷாலோ - வெல் ரெஸிப்ரோகேடிங் பம்பை உபயோகியுங்கள்.
வாட்டர் சப்ளை ஸ்பெஷலிஸ்ட்ஸ் பிரைவேட் லிட்.
45, தம்புசெட்டி தெரு சென்னை - 1


அவள் சொல்வது சரியே. பித்தளை, தாமிர சாமான்களில் பிராஸோ ஏற்படுத்தும் மாறுதலைப் பற்றி அவள் கண்டறிவாள். பிராஸோ சுத்தம் செய்வதோடு பளபளப்பாகவும் செய்கிறது — அதுவும் மிருதுவாக, விரைவாக, எளிதாக.
"பிராஸோ மட்டுமே பித்தளையை அவ்வளவு பளபளப்பாகச் செய்கிறது"
BRASSO
பிராஸோ
மெட்டல் பாலிஷ்
அட்லான்டிஸ் (ஈஸ்ட்) லிமிடெட்
(இங்கிலாந்தில் இணைக்கப் பெற்றது)

அருள்வாக்கு

நாம் செய்த பாப புண்யம் பலனாகக் கடவுள் நமக்கு உடம்பை அளித்து அதையே 'நான்' என்று நினைக்கச் செய்து தண்டிக்கிறார். ஒரு சிறுவன் ஒரு குற்றம் பண்ணினால் அதற்குக் கசையடி கொடுக்கிறார்கள். பக்கத்தில் டாக்டர் இருக்கிறார். அந்தச் சிறுவன் பொறுக்க முடியாமல் மூர்ச்சையானால் சிகித்ஸை செய்து மறுபடியும் அடிக்கிறார்கள். நல்ல போதனை செய்து மறுபடியும் அடிக்கிறார்கள். நாம் செய்த பாபத்திற்காக ஈசுவரன் உடம்பைக் கொடுத்து நம்மைச் சிக்ஷை செய்கிறார். போதாவிட்டால் மறுபடியும் உடம்பைக் கொடுத்துச் சிக்ஷிக்கிறார். ஆகையால் நாம் பண்ணுகிற பாபம் உடம்புக்குக் காரணம். இனிமேல் பாபம் பண்ணாமல் இருந்தால் வராது. பாபம் பண்ணக் கூடாது என்ற நினைவு தினமும் இருக்க வேண்டும்.

ஸ்ரீ சங்கராச்சாரியார், காமகோடி பீடம்.

என்று மெதுவாக ஒரு குரல் கொடுத்தால் போதும். உடனே ஓடி வந்து கதவைத் திறந்து விடுவாள். பிறகு...?

கதவில் மெதுவாகத் தன் கையை வைத்தான். நல்ல வேளை! கதவு உட்புறம் தாளிடப்பட்டிருக்கவில்லை. கையை வைத்துச் சற்று அழுத்தியதும் தானே திறந்து கொண்டு அவனுக்கு வழி விட்டது.

ஆனால்!...கதவு திறந்து கொள்ளும் பொழுது அதன் இணைப்புகளிலிருந்து 'கிரீச்' என்ற ஒரு ஒலி கிளம்பிற்று. எப்பொழுதும் கேட்கும் சத்தம்தானென்றாலும், அன்று அந்தச் சின்னஞ் சிறு ஒலியே அவனை ஒரு உலுக்கு உலுக்கி விட்டது. உள்ளே நுழையக் காலைத் தூக்கினான். கால் எழும்பவே யில்லை. ஏனோ கல்லாய்க் கனத்தது.

"என்ன சிதம்பரம்! எதிர் வீட்டில் யாரோ நுழைந்தாற் போலில்லை?"

குரல் தெருவிலிருந்து வந்தது. சுவாசமே திடீரென்று நின்று விட்டாற் போலிருந்தது சிவக்கொழுந்துக்கு.

கைகள் வெட வெட வென்று நடுங்க ஆரம்பித்து விட்டன. கால்கள் பின்னிக் கொண்டன. நெஞ்சில் 'சுரீ'ரென்று ஒரு வலி.

"நம்ம நட்டுவனார்தான்! வேறு யார்?

"பெரியவர்கள் யாரும் வீட்டில் இல்லை போலிருக்கிறதே!"

"அதனால் என்ன? பாடத்துக்காக வந்திருப்பார்!"

"இந்த நேரத்திலா?"

"ஐயோ!" என்று நெஞ்சு அரற்ற, கதவின் மேல் சாய்ந்து அதைக் கெட்டியாக அணைத்துக் கொண்டான் சிவக்கொழுந்து.

"அவருக்கு நேரம் ஏது? காலம் ஏது? எப்பொழுது வேணுமானாலும் வருவார் - போவார்!"

"என்ன இருந்தாலும்...!"

"சே! என்ன இப்படி வித்தியாசமாக நினைத்துப் பேசுகிறீர்கள்? நம்ம நட்டுவனாரைப் போல ஒரு மனிதரை எங்குமே பார்க்க முடியாது. தங்கம் என்றால் தங்கம்தான்!"

"பார்த்தால் சிறு பிள்ளையாட்டம் அல்லவா தெரிகிறது?"

"இருந்தாலென்ன? அப்பழுக்கு சொல்ல முடியாது!"

எதிர்வீட்டுத் திண்ணையிலிருந்து வந்த இந்த உரையாடலைக் கேட்டுக் கொண்டிருந்த சிவக்கொழுந்தின் மேனி முழுவதிலும் யாரோ - எங்கிருந்தோ, கொதிக்கும் நீரை வாரியடித்தாற்போலிருந்தது.

பல பெருமூச்சுகள் வெளியே வந்த பிறகுதான், அவன் இதயம் சற்று இலேசாகி மெதுவாக இயங்கத் தொடங்கியது.

'ஆகா! எத்தகைய பெரும் தவறு செய்ய இருந்தோம். ஒரே கணம்! மயிரிழை!... தவறியிருந்தால் படுபாதகத்துக்கு ஆளாகி யிருப்போமே! நல்ல நேரத்தில் விழித்துக்கொண்டோம். அப்பப்பா! எத்தனை பயங்கர எண்ணம்? கொடூர ஆசை! பெறுதற்கரிய பவித்திரமான பெயரைப் பெற்றிருக்கும் இந்த உடல், கணநேரத்தில் எவ்வளவு பெரிய பாவத்தைச் செய்து களங்கமடையத் துடித்துக் கொண்டிருந்தது!'

"யாரு? நீங்களா? சார்! உள்ளே வாருங்கள். உங்களுக்காகத்தான் கதவைத் தாளிடாமல் வைத்திருந்தேன். ஏன் இவ்வளவு நேரம்?" என்று கேட்டுக் கொண்டே மாலதி வந்தாள். எப்பொழுதும் போல் சிரித்துக் கொண்டேதான் அவனை வரவேற்றாள்.

ஆனால்! அந்தச் சிரிப்பில் இதற்கு முன் காணப்படும் ஒரு வித மயக்கம் இப்பொழுது இல்லை போலிருந்தது அவனுக்கு.

ஜொலிக்கும் அவள் கண்களில் வேறு எதையும் சிவக்கொழுந்து பார்க்கவில்லை. அன்பு கலந்த தூய குருபக்தியைத்தான் அவன் தரிசித்தான்.

அவளைக் கண்டால் எப்பொழுதும் தடுமாறித் தத்தளிக்கும் அவன் உடல் இப்பொழுது 'விண்!' என்று விறைத்துக்கொண்டு நின்றது.

"ஒன்றுமில்லை! வழியில் ஒருவரோடு பேசிக்கொண்டிருந்து விட்டேன்! நேரமாகி விட்டது! 'இனிமேல் இன்றைக்குப் பாடம் வேண்டாம். நாளைக்குப் பார்த்துக் கொள்ளலாம்' என்று சொல்லிப் போகலாமென்றுதான் வந்தேன்!..." என்று ஒரே மூச்சில் கூறிவிட்டு, பதிலைக்கூட எதிர்பாராமல் விடுவிடென்று வீதியில் நடந்தான் சிவக்கொழுந்து.

தெருவின் முனைக்கு வந்ததும் அவனையறியாமலேயே எதிர் வீட்டுத் திண்ணைக்கு அவன் பார்வை திரும்பியது. இருளில் ஒன்றும் சரியாகத் தெரியவில்லை.


நல்ல சமயத்தில் தன்னைப் பாவச் செயலிலிருந்து மீட்ட எதிர்வீட்டுக்காரர்களை அவன் மனம் வாழ்த்தி வணங்கியது!

Printed and Published by T. Sadasivam at the Kalki Press, Kilpauk, Madras-10 for the Proprietors Messrs Bharathan Publications Private Limited Managing Editor: T. Sadasivam.



உங்கள் வீட்டுக்கு வேண்டியது விம்
அப்பழுக்கின்றி விரைவில் சுத்தம் செய்யும்
VIM
for quick, spotless clea
HOW TO USE VIM
for quick, spot
விம் உபயோகித்து எப்போதாவது தரையை சுத்தம் செய்ததுண்டா? எவ்வளவு எளிதாக, துரிதமாக சுத்தம் செய்கிறது என்று பிரமித்துப்போவீர்கள். விஞ்ஞான முறையில் துலக்கும் பவுடர் விம். அழுக்கும் பசையும் அதை எதிர்த்து நிற்க முடியாது. ஒரு ஈரத்துணியில் விம் தூவி, தேய்த்து அலம்பி, உலரவிட்டுப்பாருங்கள்—பளிச்சென்று எல்லாம் பரிசுத்த மயம்! மேலும் சமையலறை சாமான்கள், எவர்ஸில்வர், சாதாரண பீங்கான், கண்ணாடி சாமான்கள், வாஷ்பேஸின்கள், ஓடுகள் முதலியவைகளுக்கும் விம் உபயோகியுங்கள். அது சிக்கனமானதுகூட! சிறிதளவு விம் உபயோகித்தாலும் பரிசுத்தம் அதிகமாகச் செய்யும்.
சமையலறை சாமான்கள்
ஸ்டவ்கள்
வாஷ் பேஸின்கள்
விஞ்ஞான முறையில் துலக்கும் பவுடர் விம்

REGISTERED No. M. 4392
Registered as a Newspaper in Ceylon



HBT. 1A-50 TM